

NO. 1

அதி அற்புத ரகங்கள்!

புகழ் பெற்ற ஸ்விஸ் பாக்டரிகளில் தயாரானது ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாத முள்ளவை



5 ஜுவல்	க்ரோம்	30/-	ரோல்டு கோல்டு	33/
7 ,,	க்ரோம்	35/-	உயர் ரகம்	38/-
15 ,,	க்ரோம்	44/-	ரோல்டு கோல்டு	48/-



5 ஜுவல்	க்ரோம்	28/-	ரோல்டு கோல்டு	33/
7 ,,	க்ரோம்	33/-	உயர் ரகம்	35/
15 ,,	க்ரோம்	42/-	ரோல்டு கோல்டு	45/



முழுவதும் ஜுவல்	19/-	உயர் ரகம்	21/
ரேடியத்துடன்	21/-	சென். செகண்டு	23
ஸ்பெஷல் உயர்ந்த		ரக மெஷின்	27



5 ஜுவல்	க்ரோம்	26/-	ரோல்டு கோல்டு	32/-
7 ,,	க்ரோம்	32/-	ரோல்டு கோல்டு	36/-
16 ,,	க்ரோம்	48/-	ரோல்டு கோல்டு	58/



5 ஜுவல்	க்ரோம்	22/-	உயர் ரகம்	25/
5 ,,	ரோல்டு கோல்டு	30/-	உயர் ரகம்	33/-
15 ,,	க்ரோம்	45/-	ரோல்டு கோல்டு	55/
டைம் பீஸ்		20/-	உயர் ரகம்	25/-
பாக்கெட் வாட்ச்		12/-	உயர் ரகம்	15/-

தபாற் செலவு பிரத்தியேகம். இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு தபாற் செலவு இலவசம்

PIONEER WATCH Co

POST BOX NO 11428 CALCUTTA

உங்கள் நரம்புகள்!

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும் — அதுவும் ஓய்வில்லாத உழைப்பும் ஒழியாத கவலையும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

அஸ்வான்

நீண்ட காலமாய் மனோ பலமும் தேக திடனும் வியர்த்தமாகி யிருந்தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக் கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எப்போதும் கையிருப்பாய் வைத்திருங்கள்



சிறியோர்

•

முதியோர்

•

நோயாளிகள்

யாவருக்கும் உகந்தது

பெங்கால் கெமிகல்


கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

ஏஜண்டுகள் :

என். தேசாய் கௌண்டர் & கோ.

41, பந்தர் தெரு - சென்னை

போர் முழக்கம்



"இந்தியாவின் சில பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலைமையை ஒழிக்கப் போர் தொடங்கி வெற்றி பெறுவேன்" என்று ஜவாஹர்லால்ஜி ஒரு பொதுக் கூட்டத்தில் முழங்கினார்.

கல்கி

கடுகு மலை ஆயிற்று!

சித்தர் ஒருவர் தம்மிடம் அடைக்கலம் புகுந்த சுண்டெலியைப் பயங்கர மான வேங்கைப் புலியாக மாற்றினார் என்று கதை சொல்லுவது உண்டு.

அன்று சித்தர் தம்முடைய மந்திர சக்தியினால் சாதித்த காரியத்தை இன்று அமெரிக்கர்கள் தங்களுடைய பிரசார வித்தையினால் சாதித்திருக்கிறார்கள்.

அவர் மந்திரத்தினால் எலியைப் புலியாக்கினார்; இவர்கள் தந்திரத் தினால் கடுகை மலையாக்கி இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் இந்தியாவின் ஸ்தானிகராக இருக்கும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி சுமார் ஐந்து மாதங்களுக்கு முன், இந்தியாவுக்கு இருபது லட்சம் டன் கோதுமை கடனாகக் கொடுக்கும்படி அமெரிக்க சர்க்காரைக் கேட்டுக்கொண்டார்.

பாரத நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சம், வெள் ளம், பூகம்பம் முதலிய இயற்கைச் சேஷ்டைகள் காரணமாக இந்தியா வெளி நாடுகளிலிருந்து சற்றேறக் குறைய எழுபது லட்சம் டன்களுக்கு மேல் தான்யம் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது.

சென்ற இரண்டு மூன்று வருஷங்களில் இந்தியா வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான டன் உணவு தான்யங்களை இறக்குமதி செய்திருக்கிறது; அவற்றின் விலையாகக் கோடிக்கணக்கான தொகையும் கொடுத்து வந்திருக்கிறது.

அந்தத் தொகையுடன் ஒப்பிடும்போது இப்போது இந்திய ஸ்தானிகர் விடுத்துள்ள கோரிக்கை மிகவும் அற்பமானது.

உலகத்திலே பொது உடைமை, சர்வாதிகாரம் முதலியவற்றை அழிப்பதற் காகவும் ஜனநாயகத்தை ரக்ஷிப்பதற்காகவும் அமெரிக்க சர்க்கார் கோடானு கோடியாகச் செலவழிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

பல நாடுகளையும் பஞ்சப் படுகுழியிலிருந்து உத்தாரணம் செய்வதற்காக ஏற்கெனவே கோடிக் கணக்கில் தொகை கொடுத்திருக்கிறார்கள்.

இப்போது அமெரிக்கா வகுத்துள்ள திட்டத்துக்கு இணங்க நாற்பது நாடுகள் அமெரிக்காவிடமிருந்து பண்டமாகவும் பணமாகவும் உதவி பெறு வதற்குத் தயாராய்க் காத்துக் கொண்டிருக்கின்றன.

இங்கிலாந்திலிருந்து இந்தோ சீனா, இந்தோனேஷ்யா ஈறாக அமெரிக்கா விடமிருந்து உதவி பெறாத தேசமே இல்லை எனலாம்.

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் நேர்மாறான அரசியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட யூகோஸ்லேவியா தேசம்கூட அமெரிக்காவிட மிருந்து உதவி பெற்றிருக்கிறது.

அவ்வாறு அமெரிக்கா வெளிநாடுகளுக்கு உதவியாகக் கொடுத்துள்ள தொகையைக் கணக்கெடுத்தால் தலை கிறு கிறுத்துவிடும்.

மற்ற நாடுகளுக்கு அமெரிக்கா கோடி கோடியாக உதவி புரியும் விஷய மாக மாதக் கணக்கில் விவாதம் எதுவும் நடைபெறவில்லை. அப்படியிருக்க இந்தியா கோரும் இருபது லட்சம் டன் கோதுமையை அனுப்பும் விஷயமாக மாத்திரம் சென்ற ஐந்து மாதங்களாக அமெரிக்காவிலே வெட்கக்கேடான முறையில் வாதப் பிரதிவாதங்கள் நடந்து வருகின்றன.

இருபது லட்சம் டன் கோதுமையை இந்தியா இனமாகக் கேட்கவில்லை. அப்படியிருந்தும் இந்தியாவுக்கு அதை இனமாகக் கொடுப்பதா அல்லது

கடனுகக் கொடுப்பதா என்று பல வாரங்கள் சர்ச்சை நடந்தது. பிறகு பாதி இனமாகவும் பாதி கடனுகவும் கொடுக்கலாமா என்பது பற்றிப் பல வாரங்கள் பரிசீலனை நடந்தது; இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன், உள்நாட்டு மந்திரி அக்கிஸன் முதல் பல தலைவர்களும் ஆதரிக்கிறார்கள். "நியூயார்க் டிரிப்யூன்", "வாஷிங்டன் போஸ்டு" உள்பட மிகப் பிரபல பத்திரிகைகள் முழுமனதுடன் ஆதரித்திருக்கின்றன. இந்தியாவுக்குக் கோதுமை கொடுத்து உதவ வேண்டும் என்று அமெரிக்கப் பெண்கள் சங்கமும் பாதிரிமார் சங்கமும் வற்புறுத்தி யிருக்கின்றன.

இந்தியாவின் கோரிக்கைக்கு அமெரிக்கா முழுதும் பலத்த ஆதரவு இருந்தும்கூட, சிலருடைய கட்சி மாற்சரியத்தினாலும் கண்டன வெறியினாலும் அவ்விஷயமாக இதை நாம் எழுதும் வரையில் யாதொரு முடிவும் ஏற்படவில்லை.

சீன விஷயத்திலும் கொரியா யுத்த சம்பந்தமாகவும் இந்தியா அனுஷ்டித்து வரும் கொள்கையே அமெரிக்காவில் எழுந்துள்ள தயக்கத்துக்கும் எதிர்ப்புக்கும் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்தியாவைப் போல் பிரிட்டனும் சீன சர்க்காரை அங்கீகரித்திருக்கிறது. இந்தியாவைப் போல கொரியா யுத்தம் வேறு இடங்களுக்குப் பரவாமல் தடுக்க வேண்டும் என்பதுதான் பிரிட்டனின் கொள்கையும்.

எனவே, இந்தியாவின் விஷயத்தில் சில அமெரிக்கப் பிரமுகர்களின் எதிர்ப்பு அர்த்தமற்ற வெறியை அடிப்படையாகக் கொண்டது என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு உதாரணம் தேவையில்லை.

இந்தியாவில் கொடிய பஞ்சம் ஏற்படலாம் என்ற பீதி உண்டாகியிருக்கும் இச் சமயத்தில் அமெரிக்கர்கள் இந்தியாவுக்குக் கோதுமை அனுப்புவதா, வேண்டாமா என்பது பற்றி மாதக் கணக்கில் விவாதித்து வருவதை விபரீதமான பிரசாரக் கூத்து என்றுதான் சொல்ல வேண்டும்.

எனினும் அமெரிக்காவின் சண்டித்தனம் காரணமாக பாரத மக்கள் உயிரினும் இனிய கொள்கையைக் கைவிடப் போவதில்லை.

"உணவுப் பொருளுக்காக இந்தியா மானத்தை விட்டு விடாது. எந்த அன்னிய நாடும் விதிக்கும் எத்தகைய நிபந்தனைக்கும் தலை வணங்கிவிடாது" என்று சென்ற வாரம் பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜி கூறியிருப்பது பாரத நாட்டின் பண்பையும் தன்மான உணர்ச்சியையும் உறுதியையும் உலகத்துக்கு எடுத்துக் காட்டும் என்பதில் ஐயமில்லை.

திருப்பணியைக் காணும் திருமுகம்

பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தம் கிடைத்தது. அதைத் தேவர்களுக்குப் பரிமாறினர்கள். அவர்களுடைய பந்தியில் ராகுவும் கேதுவும் மாறுவேடம் பூண்டு உட்கார்ந்திருந்தனர். இதைச் சந்திரனும் சூரியனும் கண்டு பிடித்து மகா விஷ்ணுவிடம் கூறினர்கள். மகாவிஷ்ணு அவர்களின் தலைகளை வெட்டி விட்டார். அதற்குள் அவர்கள் சிறிதளவு அமிருதத்தைப் பருகிவிட்டதால் மரணம் அடையவில்லை. எனவே ராகுவும் கேதுவும் தங்களைக் காட்டிக் கொடுத்ததற்காக இன்றளவும் சந்திர சூரியர்களை மறைத்து அவர்கள் மீது வஞ்சம் தீர்த்து வருகிறார்கள். — இவ் விவரங்களை யெல்லாம் பண்டைய புராணக் கதைகளில் காண்கிறோம்.

இந்த வரலாற்றை மனதிற் கொண்டிட்ட கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் சந்திரனின் பெருமையை இவ்வாறு பாடியிருக்கிறார்:

…வய மிக்க அசுரரின்
மாயையைச் சுட்டாய்
வியனுலகி லானந்த
வெண்ணிலவு பெய்தாய்
துயர் நீங்கி யென்னுளஞ்
சுடர் கொளச் செய்தாய்
புய விருண்டே குழுமி
யிருள் வீசி வரல் போற்
பொய்த் திரள் வருமதைப்
புன்னகையில் மாய்ப்பாய்.

• • •

புராணம் கூறும் விவரங்கள் ஒரு புறம் இருக்கட்டும். சௌராஷ்டிரப் பிரதேசத்தில் உள்ள சோமநாதரின் (சந்திரன்) ஆலயத்தையும் சோமநாதரையும் அசுரர்களான கஜ்னி

முகமது, ஔரங்கசீப், அலாவுதீன் கில்ஜி முதலியோர் இடித்துத் தகர்த்தனர் என்பது சரித்திரம் கண்ட உண்மை. பாரத நாடு முழுவதையும் பிடிப்பதைக் காட்டிலும் சோமநாதரின் ஆலயத்தை இடிப்பதையே அவர்கள் மாபெரும் வெற்றியாகக் கருதினார்கள்.

கஜினி முகமது கோஷ்டியினர் ராக்ஷதர்கள் என்பதை முஸ்லிம் சரித்திராசிரியர்கள் கூட ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய ஆசியாவில் மிருகத்தனமான கொடுமைகளை இழைத்த கெங்கிஸ் கானை முஸ்லிம் சரித்திராசிரியர்கள் ராக்ஷதன் என்றே வர்ணித்திருக்கிறார்கள்.

மத்திய ஆசிய நாடுகளில் கெங்கிஸ் கான் என்ன கொடுமைகளை இழைத்தானோ, அது போலவே கஜினி முகமது, அலாவுதீன் கில்ஜி முதலியோரும் இந்தியாவில் நாகரிக மனித வர்க்கமே நம்ப முடியாத கொடுமைகளை இழைத்தார்கள். கஜினி முகமது மாத்திரம் இந்தியா மீது பதினேழு தடவை படையெடுத்தான். பதினாயிரக்கணக்கான மக்களைப் பலியிட்டான். லட்சக் கணக்கானவர்களை அடிமைகளாகக் கொண்டு சென்றான். அவன் கொள்ளையடித்த பொக்கிஷங்களைக் கணக்கிட முடியாது.

கஜினி முகமது படையெடுத்து வந்தபோது சோமநாதர் ஆலயத்தையும் விக்கிரகத்தையும் காப்பாற்றுவதற்காக அந்த இடத்தில் ஏக காலத்தில் ஐம்பதாயிரம் ஆடவர்களும் பெண்களும் இரத்தம் சிந்தி வீர ஸ்வர்க்கம் அடைந்தார்கள் என்று சரித்திரம் கூறுகிறது.

இதைத் தவிர, பகைவர்கள் படையெடுத்து வந்த ஒவ்வொரு தடவையிலும் தெய்வ பக்தி காரணமாக அங்கு பதினாயிரக்கணக்கானவர்கள் ஆலயத்தையும் விக்கிரகத்தையும் காத்து நின்று தங்களுடைய உயிரைப் பலி கொடுத்தனர். பகைவர்களான அசுரர்கள் இடித்தும் எரித்தும் சென்ற சோமநாதர் ஆலயத்தின் தூண்கள் இன்றும் அவ் விவரங்களை உலகத்துக்குப் பிரகடனப் படுத்திக் கொண்டு நிற்கின்றன!

அநாதி காலம் தொட்டுக் கீர்த்தியுடன் விளங்கிய அந்த ஆலயத்தை அசுரர்கள் இடித்துத் தகர்த்து ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. எனினும் அதன் மகத்துவத்தை அவர்களால் தகர்க்கவோ மறைக்கவோ முடியவில்லை.

பல நூற்றாண்டுகளுக்கு முன் பதினாயிரக் கணக்கான பக்தர்கள் சிந்தின இரத்தம் வீண் போகவில்லை. இடித்தும் எரித்தும் போன சோமநாதர் ஆலயம் இந்த மாதம் 11-ந் தேதி வெள்ளிக்கிழமை மீண்டும் உயிர்பெற்று எழுகின்றது. அன்று சோமநாத ஜோதிர் லிங்கத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அது இருந்த அதே இடத்தில் பிரதிஷ்டை செய்யப் போகிறார்கள்.

இந்தப் புனிதமான திருவிழாவை நடத்தி வைக்க ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த பிரபாஸ பட்டணத்துக்கு விஜயம் செய்கிறார். சோமநாதர் ஆலயத்தை நிர்மாணிப்பதற்கான திருப்பணி வேலையும் அன்று ஆரம்பமாகிறது.

மேற்படி வைபவம் புகழுடல் எய்திய சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு ஒரு பெரும் வெற்றி என்பதைக் கேட்கப் பாரத மக்கள் யாவரும் மகிழ்ச்சி அடைவார்கள். யாரும் எதிர்பாராமல், எவ்வித யோசனையும் செய்யாமல் சர்தார் பட்டேல் சோமநாதரின் ஆலயத்தை நிர்மாணிக்க வேண்டும் என்று திடீரென முடிவு செய்தார். சர்தார்ஜி ஒரு காரியத்தை நிறைவேற்றுவது என்று முடிவு செய்து விட்டால், பிறகு அதற்கு என்ன தடை ஏற்பட முடியும்!

உடனே லட்சக்கணக்கில் தொகை வந்து குவிந்தது. சர்தார் பட்டேல் தமது வாழ்நாளில் பல அரும் பெரும் காரியங்களைச் சாதித்ததுபோல, சோமநாதர் ஆலய நிர்மாணத்துக்கும் விதை விதைத்துள்ளார்.

எனவே, அடுத்த வெள்ளிக்கிழமை பிரபாஸ பட்டணத்தில் நடைபெறும் சோமநாதர் ஆலயத் திருப்பணி வைபவத்தைக் காண லட்சக்கணக்கான மகா ஜனங்களும் பக்த கோடிகளும் வந்து கூடுவார்கள்.

வான வீதியில் தேவர்கள் கூட்டம் கூட்டமாக நின்று பூமாரி பொழிவார்கள்.

கந்தர்வர்கள் கானமாரி பொழிவார்கள்.

சோமநாதரின் ஆலயத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுப் பலியான பக்தர்கள் மனம் குளிர்ந்து ஆனந்த பாஷ்பம் சொரிவார்கள்.

அவர்களிடையே நடுநாயகமாக சர்தார் வல்லபாய் பட்டேலின் திருமுகம் காட்சி அளிக்கும்!

கலியுகம் முடியலாம்!

வெறும் கற்பனை அல்ல; கட்டுக் கதையும் அல்ல. இன்று நிகழ்ந்து வரும் உண்மையான சம்பவங்களையே குறிப்பிடுகிறோம்.

கொரியா நாட்டில் இப்போது ஐந்தாவது தடவையாக யுத்தம் நடந்து வருகிறது. கொரியா மக்கள் பட்டு வரும் பாட்டைச் சொல்லி முடியாது. அந்த நாட்டில் உள்ள கட்டிடங்களில் பெரும்பாலானவையும் நாசமாகி விட்டன. பள்ளிக்கூடங்கள் எல்லாம் தரைமட்டமாகி விட்டன. கொரியா மக்களின் வாழ்க்கையே ஸ்தம்பித்து விட்டது எனலாம்.

இந் நிலையில் தென் கொரியா சர்க்கார் கல்வி மந்திரி ஜார்ஜ் பெயிக் என்பவர் யுத்தம் காரணமாக மூடப்பட்ட பள்ளிக்கூடங்களையெல்லாம் மீண்டும் திறக்க வேண்டும் என்று உத்தரவிட்டாராம். யுத்தம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமோ! அதுவரையில் சிறுவர் சிறுமிகளும் கல்லூரி மாணவர்களும் ஏன் வீண் பொழுது போக்கவேண்டும் என்பது அவருடைய அபிப்பிராயம் போலும்!

கல்வி மந்திரியின் கட்டளையைக் கேட்டு ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் பேராசிரியர்களும் திடுக்கிட்டுப் போனார்கள். "ஒரு பள்ளிக்கூடக் கட்டிடமாவது நாசமாகாமல் மீதியிருந்தால் அல்லவா பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க முடியும்! பள்ளிக்கூடத்தை ஆரம்பிப்பதற்குக் கட்டிடம் எங்கே இருக்கிறது!" என்று கேட்டார்கள் ஆசிரியர்கள்.

"கட்டிடங்கள்தான் பாழாகி விட்டன. பூமியை யாரும் விழுங்கிவிட வில்லையே!" என்று பதில் கேள்வி கேட்டார் கல்வி மந்திரி.

ஆசிரியர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஆற்றங்கரை நிழலில் பள்ளிக்கூடத்தை நடத்துங்கள்; மரத்தடியில் நடத்துங்கள்; மலையடிவாரம் பள்ளிக்கூடத்துக்குத் தகுந்த இடம் அல்லவா! கூடாரங்கள் அமைத்துக் கல்விச் சாலைகளை நடத்துங்கள்" என்று கல்வி மந்திரி கூறி அவர்களுக்கு விளங்க வைத்தார்.

ஆசிரியர்களும் மந்திரியின் கட்டளையை நிறைவேற்றுவதில் உற்சாகம் கொண்டார்கள். அதன் பயனாக இப்போது தென் கொரியாவில் தண்ணீர் வற்றியுள்ள ஆறுகளிலும், மரங்களின் நிழல்களிலும், சினிமாக் கொட்டகைகளிலும், கூடாரங்களிலும் கல்விச்சாலைகளும் கல்லூரிகளும் நடந்து வருகின்றன.

மந்திரியின் கட்டளை மாணவர்களிடையும் மிகுந்த உற்சாகத்தை உண்டாக்கியதால் அவர்கள் தாங்கள் படிக்கும் பள்ளிக்கூடங்களைத் தாங்களே நிர்மாணித்துக் கொள்ள முன் வந்திருக்கிறார்கள். மண் சுவர்களினாலும் மூங்கில் தட்டிகளினாலும் அவர்கள் தாற்காலிகமாகப் பள்ளிக்கூடங்களை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள்.


பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்கு என்ன செய்வது என்று கொரியா மந்திரி மூக்கால் அழுது கொண்டிராமல் நினைத்த மாத்திரத்தில், யாரும் பாராட்டக் கூடிய விதத்தில் அந்த மகத்தான பிரச்னையை வெகு சுலபமாகத் தீர்த்து வைத்து விட்டார்.

கொரியாவில் உள்ள அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள் மேற்படி விவரங்களை நேரில் பார்த்து, தங்களுடைய பத்திரிகைகளுக்குப் பத்தி பத்தியாக எழுதி அனுப்பியிருக்கிறார்கள்.

ஆனால், இங்கு நாம் காண்பது என்ன! 'பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டப் பணத்துக்கு எங்கே போவது!' என்பார்கள். அதற்கு ஏதாவது வழி சொன்னால் 'போதிய ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்!' என்ற கேள்வி எழும். 'ஆசிரியர்கள் கிடைத்தாலும் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணம் ஏது!' என்ற பிரச்னை அடுத்தபடியாக எல்லோரையும் பயமுறுத்தும்.

"ஒரு வேளைப் பள்ளிக்கூடம் என்று வைத்துக் கொண்டால் இரண்டு மடங்கு குழந்தைகள் படிக்க வசதி ஏற்படுமே" என்றால், அந்த யோசனை அனுஷ்டான சாத்தியமற்றது என்று நமது கல்வி நிபுணர்கள் தள்ளிவிடுவார்கள். அவர்கள் அனுஷ்டான சாத்தியமான, உருவான யோசனைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆயிரத்தெட்டு ஆட்சேபனைகளும் பதினாயிரத்தெட்டு சமாதானங்களும் கூறுவார்கள். எனவே, நமது கல்விச் சாலைப் பிரச்னை தீருவதற்குள் கலியுகம் முடிந்தாலும் முடிந்து விடலாம்!

புது வேஷம்!



ஜெயபுரியில் நடந்த அகில இந்திய ஹிந்து மகாசபைக் கூட்டத்தில், ஹிந்துக்கள் அல்லாதாரையும் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்வது என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

ஆத்திரத்தைக் கொட்டினார்கள்

ரஜனி

கொழும்பு, ஏப்ரல் மீ 25உ—

இலங்கை இந்திய காங்கிரஸ் 11-வது வருடாந்திர மகாநாடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 10-வது வருடாந்திர மகாநாடும் வத்துகாமத்தில் சிறப்பாக நடந்து, முக்கியமான பல தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு முடிந்திருக்கின்றன. இந்தியத் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டையும், மனோ வைராக்கியத்தையும், தங்களது தலைவர்களிடமுள்ள திடநம்பிக்கையையும் எடுத்துக் காட்ட வத்துகாமம் மகாநாடு ஒரு அற்புதமான உதாரணமாக விளங்கியது.



ஸ்ரீ டி. ராமானுஜம், எம். பி.

பகிரங்க மகா நாட்டுக்கு முன் நடந்த விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டங்கள் தான் ஓரளவு கொந்தளிப்புடனிருந்தன. அங்கத்தினர்கள் அரசாங்கத்தின்மீது தங்களுக்குள்ள ஆத்திரத்தை யெல்லாம் கொட்டி முழக்கினார்கள். பிரஜாவுரிமைச் சட்ட பகிஷ்காரத்தை வாபஸ் பெற்றது பெரிய முட்டாள்தன மென்றும் டாக்டர் மாலனைப்போல வெறி பிடித்து ஆடும் சேனநாயகாவிடம் நியாயத்தையும் தர்மத்தையும் எதிர்பார்க்கவே முடியாதென்றும் ஒரு பெரிய போராட்டம் நடத்தியே உரிமையை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் சிலர் வற்புறுத்தினார்கள். இந்தியர்களை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யும் விஷயத்தில் அரசாங்கம் காட்டும் அசிரத்தையில் எல்லோரும் அதிருப்தி தெரிவித்தார்கள். பலருடைய அபிப்பிராயங்களையும் தழுவியே ஒரு தீர்மானம் தயாரிக்கப்பட்டு மகாநாட்டில் நிறைவேற்றப் பட்டது.

பிரஜாவுரிமைச் சட்டத்தைத் திரும்பப் பகிஷ்கரிக்கும் உத்தேசமில்லை யென்பதை காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ ராஜலிங்கம் தமது தலைமைப் பிரசங்கத்திலேயே குறிப்பிட்டிருந்தபடியினால் மகாநாடு நிறைவேற்றிய தீர்மானமும் அதை அனுசரித்திருந்தது. உதாரணமாக பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுப்பதற்கு அளித்திருந்த இரண்டு வருடத் தவணையில் இன்னும் நான்கு மாதங்கள் தான் பாக்கி யிருக்கின்றன. இதுவரை மனுக் கொடுத்த 75,000 பேர்கள்போக, பாக்கி குறைந்த பட்சம் இன்னும் ஒன்றரை லட்சம் மனுக்களையாவது இந்த நான்கு மாதங்களுக்குள் பூர்த்திசெய்து சர்க்காருக்கு அனுப்பியாகவேண்டும். சர்க்காரிடம் கேட்டாலோ மனுப் பத்திரங்கள் கைவசமில்லை, அச்சாகிறதென்கிறார்கள். ஏற்கெனவே மனுக்கொடுத்த 75,000 தோட்டத் தொழிலாளரில் ஒரு தொழிலாளராவது இதுவரை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படவில்லை. மற்றவர்களினும் சுமார் 4000 பேர்களை பிரஜைகளாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக் கின்றனர். அசாத்தியமான ருசுக்களைக் கோரி அனேகம் மனுக்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன. இவைகளை யெல்லாம் காங்கிரஸ் தீர்மானம் விரிவாகச் சுட்டிக் காட்டி, இனியாவது, இந்தக் கடைசி நேரத்திலாவது நியாயம் வழங்குமாறு சர்க்காரை கேட்டுக் கொண்டிருக்கிறது.


ஆண் பெண் சமத்துவம்

இரண்டாவது மூன்றாவது நாள் நடந்த தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டிலும் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஸ்ரீ ராஜலிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தம்முடைய அக்கிராசனப் பிரசங்கத்தில் தோட்டத் தொழிலாளருக்கு இழைக்கப்படும் கொடுமைகளை யெல்லாம் அவர் எடுத்துக் காட்டி இந்த நிலைமை நீடிக்கத் தொழிலாளர் இனி இடமளிக்க மாட்டார்களென்று சம்பந்தப்பட்ட தோட்ட முதலாளிமார்களைக் கடுமையாக எச்சரித்தார். இதர காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீ எஸ். தொண்டைமான், ஸ்ரீ டி. ராமானுஜம், ஜனாப் அஸீஸ், ஸ்ரீ எஸ்.எம். சுப்பையா முதலியோர்களும் சோர்ந்துபோன தொழிலாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படக் கூடியவாறுபேசினார்கள். ஸ்ரீ தொண்டைமான் பிரதமர் பிரஸ நாயகாவைத் துரியோதனனுக்கு ஒப்பிட்டு ஒரு ரசமான கதைசொன்னார். "பாண்டவர்களுக்காக கண்ணபிரான் துரியோதனனிடம் தூது சென்று, 'ஒரு நகரைக் கொடு; ஒரு கிராமம் கொடு; ஒரு வீடு மட்டுமாவது கொடு!' என்று யாசித்தபொழுது ஒரு ஊசிமுனைகூடக் கொடுக்கவே மாட்டேன் என்று துரியோதனன் சாதித்தான். அது போல இலங்கை இந்தியர்களுக்குப் பார்லிமெண்டில் 14



ஸ்ரீமதி சரோஜினி ராமானுஜம்

பூரித்தது!



இந்த வாரம் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் திருவிழா வெகு விமரிசையாக நடந்தேறியது. பதினாயிரக் கணக்கான தமிழ் அன்பர்கள் கலந்து கொண்டார்கள். இந்தப் பேற்றினைக் கண்டு இலங்கை பூரித்தது!

ஸ்தானங்கள் கிடைக்குமென்று டொனமூர் கமிஷனர்கள் சொன்னார்கள். ஸோல்பரி அரசியல் திட்டத்தின்படி இது ஏழு ஸ்தானங்களாகக் குறைந்தது. அடுத்த பொதுத் தேர்தலிலோ இந்தியருக்கு ஒரு ஸ்தானங்கூடக் கிடைக்க முடியாதபடி எல்லா இந்தியர்களுடைய ஓட்டுரிமையும் சேனநாயகா பறித்துத் துரியோதனாவதாரம் எடுத்து விட்டார்" என்றார் ஸ்ரீ தொண்டைமான்.

மாதர்களின் முழக்கம்

இதன் பின் தோட்டப் பெண் தொழிலாளர்கள் மகாநாடு ஒன்று நடந்தது. ஆண்களுக்கு எந்த விதத்திலும் பெண்கள் சளைத்தவர்களல்ல வென்பதை நிதர்சனமாகக் காட்ட அவர்கள் மகாநாட்டுக்குத் திரண்டு வந்திருந்தார்கள். பார்லிமெண்டு அங்கத்தினர் ஸ்ரீ டி. ராமானுஜத்தின் மனைவியாரும் பிரபல டாக்டருமான ஸ்ரீமதி (டாக்டர்) சரோஜினி ராமானுஜம் மகாநாட்டுத் தலைவியாக ஏகமனதாய்த் தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீமதி சரோஜினி தம்முடைய தலைமைப் பிரசங்கத்தில் பெண் தொழிலாளரின் பரிதாபமான நிலைமையை மிகமிக உருக்கமாக எடுத்துரைத்தார். அவர் சொன்னார்: "நம் நாட்டுச் சட்டங்களே விசித்திரமாயிருக்கின்றன. 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாத பெற்றோர்களைத் தண்டிக்கலாம் என்று கல்விச் சட்டம் கூறுகிறது. அதே சமயம் 10 வயதுக்கும் 16 வயதுக்குமிடையேயுள்ள சிறுவர்கள் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப் படுவதைத் தொழிலாளர் சட்டம் அனுமதிக்கின்றது! தோட்டக் குழந்தைகளை அரசாங்கம் மனிதப் பிறவிகளாக மதிக்கவில்லை போலிருக்கிறது. ஒரு குடும்பத் தலைவனுக்குக் கொடுக்கும் சம்பளம் அவனையும் ஒரு மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் சம்ரட்சித்துக் கொள்ளப் போதுமானதாயிருக்க வேண்டுமென்று சர்வதேச தொழில் ஸ்தாபனம் சிபார்சு செய்துள்ள பொழுதிலும் அதைக் கவனிப்பாரில்லை. தோட்டங்களில் கணவனும் மனைவியும் குழந்தைகளுமாக எல்லோரும் சேர்ந்து பாடுபட்டு உழைத்தால்தான் குடும்பத்துக்கு அரை வயிற்றுக் கஞ்சியாவது கிடைக்கிறது. இந்த நிலைமை மாறுமென்று பொறுத்திருந்து பார்ப்பதில் பயனில்லை. கிளர்ச்சி செய்ய வேண்டும். அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்." இவ்விதம் ஸ்ரீமதி சரோஜினி ராமானுஜம் உணர்ச்சியோடு பேசினார்.

பொடிநோனா என்ற ஒரு சிங்களப் பெண் பிறகு சிங்களத்தில் பேசினாள். தொழிலாளிகளுக்குள் இந்தியர், சிங்களவர் என்ற பேதமில்லையென்றும், தொழிலாளி வர்க்கம் வகுப்புபேத மறியாத வர்க்கமென்றும் தொழிலாளர் சமூகத்தின் பொது நலனுக்காக சிங்களத் தொழிலாளரும் தமிழர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று போராட வேண்டும் என்றும் வற்புறுத்தினாள்.


பொன்னியின்
செல்வன்
இரண்டாம் பாகம் • சுழற் காற்று
மணியம்



பொன்னியின்

பூர்வ கதை

இன்றைக்கு 970 ஆண்டுகளுக்கு முன்பு சோழ சாம்ராஜ்யம் குமரி முனையிலிருந்து வட பெண்ணை வரையில் பரவியிருந்தது. இரண்டாவது பராந்தகர் என்றும் பழையாறைச் சுந்தர சோழர் என்றும் பெயர் பெற்ற சக்கரவர்த்தி அந்தப் பெரிய ராஜ்யத்தை ஆண்டு வந்தார். முத்தரைய வம்சத்தை முறியடித்து அவர்களிடமிருந்து விஜயாலய சோழன் கைப்பற்றிய தஞ்சாவூர் நகரம் சுந்தர சோழரின் காலத்தில் சோழ நாட்டுக்குத் தலை நகரமாயிற்று. அதற்கு முன்பு நூறு ஆண்டு காலமாகக் குடந்தைக்கு அருகிலிருந்த பழையாறைச் சோழர்களின் தலை நகரமாயிருந்தது.

சுந்தர சோழர் திருக்கோவலூர் மலையமானின் மகள் வானவன்மாதேவியை மணந்திருந்தார். அவர்களுக்கு இரண்டு புதல்வர்களும் ஒரு புதல்வியும் இருந்தனர். மூத்தவன் ஆதித்த கரிகாலன்; அடுத்தவன் குந்தவை; கடைக் குட்டிப் புதல்வன் பின்னால் சரித்திரத்தில் இராஜராஜ சோழன் என்று புகழ் பெற்ற அருள்மொழி வர்மன்.

சுந்தரசோழர் சிலகாலமாக நோய் வாய்ப்பட்டுத் தஞ்சாவூர் அரண்மனையில் படுத்த படுக்கையாயிருந்தார். பாரிச வாயுவினால் இரண்டு கால்களும் வலியிழந்துவிட்ட படியால் நடமாடவும் பிரயாணம் செய்யவும் முடியாத நிலையில் இருந்தார்.

அண்ணன் தம்பிகளான பெரிய பழுவேட்டரையரும், சின்னப் பழுவேட்டரையர் காலாந்தக கண்டரும் சோழ சாம்ராஜ்யத்தில் அப்போது பேரதிகாரம் படைத்திருந்தார்கள். சாம்ராஜ்யத்தின் பொக்கிஷமும் தானிய பண்டாரமும் வரி விதிக்கும் அதிகாரமும் பெரிய பழுவேட்டரையரிடம் இருந்தன. சின்னப் பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டையின் காவற்படைக்கு அதிபதியாக விளங்கினார்.

இளம் வயதிலேயே போர்க்களம் சென்று வீராதி வீரன் என்று பெயர் வாங்கிய ஆதித்த கரிகாலன் இளவரசுப் பட்டம் சூட்டப் பெற்றுக் காஞ்சியில் வட திசைச் சைனியத்தின் அதிபதியாகத் தங்கியிருந்தான்.

தென்திசைப் படையின் மாதண்ட நாயகனாகிய அருள்மொழி வர்மன் இலங்கைத் தீவுக்குப் பெரும் படையுடன் சென்று போர் புரிந்து கொண்டிருந்தான்.

அவர்களுடைய சகோதரி குந்தவைப் பிராட்டியும் மற்றும் பல சோழ குலத்து அந்தப்புர மாதரும் பழையாறை நகரில் இருந்தார்கள்.

இத்தகைய சமயத்தில் நாடு நகரமெங்கும் ஓர் அதிசயமான வதந்தி பரவியது. சுந்தரசோழருக்கும் அவருடைய குமாரர்களுக்கும் எதிராக ஒரு பெரிய சதி நடக்கிறது என்பதுதான் அவ்வதந்தி. பழுவேட்டரையர்களும்




செம்பியன் மாதேவி




சுந்தரசோழர்



வானவன்மாதேவி



அருள்மொழி வர்மன்



செல்வன்

மற்றும் சம்புவரையர் முதலிய சோழ நாட்டுப் பிரமுகர்கள் பலரும் அச்சதியில் கலந்து கொண்டிருந்தனர்.

சுந்தரசோழரின் பெரிய தந்தையும் சிவஞானச் செல்வருமான கண்டராதித்தரின் குமாரன் மதுராந்தகன் சில காலத்துக்கு முன்பு வரையில் சிவபக்தியில் திளைத்த வைராக்ய சீலனாக விளங்கினான். சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்து கொண்டதிலிருந்து அவனுடைய மனம் மாறி உலக வாழ்க்கையில் ஈடுபட்டது. சுந்தரசோழச் சக்கரவர்த்திக்குப் பிறகு மதுராந்தகனைச் சிம்மாசனம் ஏற்றுவது என்று, சதி செய்தவர்கள் தீர்மானித்திருந்தார்கள்.

வானத்தில் சில காலமாகத் தூமகேது என்னும் வால் நட்சத்திரம் காணப்பட்டு வந்தது. இதை ஓர் உற்பாதமாக மக்கள் கருதினார்கள். இராஜ வம்சத்தில் ஏதோ விபரீதம் நிகழப் போகிறது என்று நாடு நகரமெல்லாம் ஜனங்கள் மிகுந்த கவலையுடன் பேசிக் கொண்டார்கள்.

கல்கி

காஞ்சியில் இருந்த இளவரசன் ஆதித்த கரிகாலன் காதுக்கு இச்செய்திகள் எட்டின. தன் தந்தையைப் பற்றி அவன் மிக்க கவலை கொண்டான். பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்திலிருந்து சுந்தர சோழரை மீட்டுக் காஞ்சிக்குக் கொண்டுவர விரும்பினான்.

காஞ்சியில் ஆதித்த கரிகாலன் புதிதாகப் பொன் மாளிகை கட்டியிருந்தான். சுந்தரசோழர் காஞ்சிக்கு வந்து சில காலம் அப்பொன் மாளிகையில் தங்கியிருக்க வேண்டும் என்று பிரார்த்தித்து ஓலை ஒன்று எழுதினான். அதை வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் தன் அந்தரங்க நம்பிக்கைக்குரிய வீரனிடம் கொடுத்து அனுப்பினான்.

ஆதித்தன் தன் இளம் வயதில் நந்தினி என்னும் அர்ச்சகர் வீட்டுப் பெண்ணைக் காதலித்தான். அது தகாத காதல் என்று செம்பியன் மாதேவி அவனுக்குப் போதனை செய்தாள். பிரசித்திபெற்ற சிவஞான கண்டராதித்தரின் பட்டமகிஷி செம்பியன் மாதேவி. சோழ வம்சத்தைச் சேர்ந்த அனைவரும் அந்த மூதாட்டியிடம் பக்தி கொண்டு நடந்தனர். ஆதித்த கரிகாலனும் தன் பெரிய பாட்டியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான். ஆனால் நந்தினியை அவனால் அடியோடு மறக்க முடியவில்லை.

பெரிய பழுவேட்டரையர் அறுபது பிராயத்துக்கு மேலே நந்தினியை மணந்து கொண்டார். நந்தினி பழுவூர் அரண்மனையில் சர்வாதிகாரியானாள். தன்னை நெருங்கிய யாரையும் தன் இஷ்டப்படி செய்விக்கும் மாய மோகன சக்தியை நந்தினி பெற்றிருந்தாள். ஒருமுறை அவள் ஆதித்த கரிகாலனிடம் தன் சக்தியைச் செலுத்தினாள். சுந்தர சோழரைச் சிறையில் அடைத்து விட்டு, கிழவர் பழுவேட்டரையரைக் கொன்று விட்டு, தன்னை மணந்து தஞ்சை சிம்மாசனத்தில் ஏற்றுவிக்கும்படி ஆதித்தனைக் கேட்டாள். அந்த பயங்கரச் செயலுக்குக் கரிகாலன் உட்பட மறுத்து விட்டான். ஆயினும் இப்போது தஞ்சாவூருக்குப் போவது என்றாலே கரிகாலனுக்கு


ஆழ்வார்க்கடியான்


பெரிய பழுவேட்டரையர்


நந்தினி


சின்னப் பழுவேட்டரையர்

அச்சமாயிருந்தது. ஆகையினாலேயே வந்தியத்தேவனை அனுப்பினான்.

வந்தியத்தேவன் வழியில் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கியிருந்தபோது சோழ நாட்டுப் பிரமுகர்களின் சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். பிறகு, தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தான். அங்கே நந்தினியைச் சந்தித்துப் பனை இலச்சினையுள்ள முத்திரை மோதிரத்தை வாங்கிக் கொண்டான். அதன் உதவியால் சுந்தர சோழரைப் பேட்டி கண்டான். அவரைச் சூழ்ந்திருந்த அபாயங்களைப் பற்றி எச்சரிக்கை செய்ய எண்ணிய சமயத்தில் சின்னப் பழுவேட்டரையர் வந்து குறுக்கிட்டார்.



வந்தியத்தேவன்

வந்தியத்தேவன் தற்செயலாகத் தஞ்சாவூர்ப் பொக்கிஷம் வைத்திருந்த நிலவறையைப் பார்க்க நேர்ந்தது. இதை அறிந்த பழுவேட்டரையர்கள் அவன் தப்பிச் செல்லாமல் கைப்பற்ற முயன்றார்கள். அவர்களுடைய வீரர்களுக்கு அவன் 'டிமிக்கி' கொடுத்து விட்டுப் பழையாறையை அடைந்தான். குந்தவை தேவியைப் பார்த்து ஓலையைக் கொடுத்தான்.

ஏற்கனவே குந்தவையைப் பற்றிக் கேள்விப்பட்டு வந்தியத்தேவன் தன் உள்ளத்தை அவளுக்குப் பறி கொடுத்திருந்தான். குடந்தையிலும் அரசலாற்றங் கரையிலும் அவளைச் சந்தித்தும் இருந்தான். இலங்கைக்குப் போக வேண்டும் என்ற ஆசையும் அவன் மனதில் கொண்டிருந்தது. எனவே குந்தவை சொன்னபடி அவன் ஈழத்துக்கு உடனே செல்ல ஆயத்தமானான். "பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வா!" என்று குந்தவை ஓலை எழுதிக் கொடுத்தாள். அதை எடுத்துக் கொண்டு வந்தியத்தேவன் புறப்பட்டான்.

ஆதித்த கரிகாலனுடைய உள்ளம் மிகக் குழம்பியிருந்தது. வந்தியத்தேவனைப் பற்றித் தகவல் ஒன்றும் தெரியாதபடியால் அவனுடைய கவலை அதிகமாயிற்று. தம்பிக்கு இளவரசுப் பட்டம் கட்டி விட்டுத் தான் வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்று தமிழர் வீரத்தையும் சோழர் புகழையும் நிலைநாட்ட விரும்பினான். ஆகையால் தன் சகோதரன் அருள்மொழி வர்மனைத் தருவித்துக் காஞ்சியில் இளவரசுப் பட்டம் சூட்டிவிட்டுத் தான் ஈழத்துக்கும், சாவகம், புட்பகம், கடாரத்துக்கும் போக விரும்பினான். அவனுடைய மற்றொரு அந்தரங்க நண்பனான பல்லவ குல பார்த்திபேந்திரனை அழைத்துத் தன் மனக் கவலைகளை வெளியிட்டான். இலங்கைக்குச் சென்று அருள்மொழி வர்மனை உடனே காஞ்சிக்கு அழைத்து வரும்படி பணித்தான். பார்த்திபனும் அதற்குச் சம்மதித்தான்.

வந்தியத்தேவன் தன் பிரயாணத்தில் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனைச் சந்தித்தான். ஆழ்வார்க்கடியான் நாடெங்கும் சஞ்சரித்துத் துப்பறிந்து வந்தான். ஆனால் யாருடைய சார்பில் அவன் வேலை செய்கிறான் என்று தெரியவில்லை. ஆகையால் அவன் பேரில் வந்தியத்தேவனுக்கு ஐயம் உண்டாகியிருந்தது.

இனி, இவ்விதழில் ஆரம்பமாகும் "பொன்னியின் செல்வன்" இரண்டாம் பாகத்தைப் பழைய நேயர்களோடு புதிய வாசகர்களும் சேர்ந்து படிக்கத் தொடங்கலாம்.

முதல் அத்தியாயம்

பூங்குழலி

அந்தி நேரம் அமைதி பெற்று விளங்கியது. கோடிக் கரையின் ஓரத்தில் கடல் அலை அடங்கி ஓய்ந்திருந்தது. கட்டு மரங்களும் படகுகளும் கரையை நெருங்கிக் கொண்டிருந்தன. கடலில் இரை தேடச் சென்ற பறவைகள் திரும்பி வந்து கொண்டிருந்தன. கரையில் சிறிது தூரம் வெண் மணல் பரந்திருந்தது. அதற்கு அப்பால் வெகு தூரத்துக்கு வெகு தூரம் காடு படர்ந்திருந்தது. காட்டு மரங்களின் கிளை ஆடவில்லை; இலைகள் அசையவில்லை.

நாலா பக்கமும் நிச்சப்தம் நிலவியது. செங்கதிர்த் தேவன் கடலும் வானும் கலக்கும் இடத்தை நோக்கி விரைந்து இறங்கிக் கொண்டிருந்தான். மேகத் திரள்கள் சில சூரியனுடைய செங் கதிர்களை மறைக்கப் பார்த்துத் தாங் களும் ஒளி பெற்றுத் திகழ்ந்தன.

கரை ஓரத்தில் கடலில் ஒரு சிறிய படகு மிதந்தது. கடலின் மெல்லிய அலைப் பூங் கரங்கள் அந்தப் படகைக் குழந்தையின் மணித் தொட்டிலை ஆட்டுவது போல மெள்ள மெள்ள அசைத்தன. அந்தப் படகில் ஓர் இளம் பெண் இருந்தாள். அவளைப் பார்த்த தும் சேந்தன் அமுதன் தன் மாமன் மகளைக் குறித்து வர்ணனை செய்தது நமக்கு நினைவு வருகிறது. ஆம்; இவள் பூங்குழலியாகத்தான் இருக்க வேண்டும். பெயருக்குத் தகுந்தாற் போல் இவள் கூந்தலில் ஒரு தாழம் பூ வின் இதழ் அழகு பெற்றுத் திகழ்ந் தது. நீண்ட கரிய கூந்தல் சுருண்டு சுருண்டு விழுந்து அவளுடைய கிடைந் தெடுத்த தோள்களை அலங்கரித்தன. கடல் அலைகள் கரையில் ஒதுக்கும் சங்குகள், சிப்பிகள் முதலியவற்றை ஆரமாக்கி அவள் அணிந்து கொண் டிருந்தாள். ஆனால் இவை யெல்லாம் அவளுடைய மேனியில் பட்டதனால் தாங்களும் அழகு பெற்றனவே யன்றி, அவளை அலங்கரித்ததாகச் சொல்ல முடியாது. அழகே ஒரு வடிவம் தாங்கி வந்தால், அதற்கு எந்த ஆபரணத்தைக் கொண்டு அழகு செய்ய முடியும்?

பூங்குழலி படகில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு பாடினாள். அவளு டைய கானத்தைக் கேட்பதற்காகவே கடலும் அலை அடங்கி ஓய்ந்திருந்தது போலும்! அதற்காகவே காற்றும் வீசி அடிக்காமல் மெள்ள மெள்ளத் தவழ்ந்து வந் தது போலும்! தூரத்தில் தெரிந்த காட்டு மரங்களும் இலை அசையாமல் நின்று அவளுடைய கானத்தைக் கவனமாகக் கேட்டன போலும்! வானமும் பூமி யும் அந்த கானத்தைக் கேட்டு மதிமயங்கி அசை வற்று நின்றன போலும்! கதிரவன் கூட அந்த கானத்தை முன்னிட்டே மேலைக் கடலை அடைந்தும் முழுகி மறை யாமல் தயங்கி நிற்கிறான் போலும்!

தேனில் குழைந்து வானில் மிதந்து வந்த அப் பாடலை நாமும் சற்றுச் செவி கொடுத்துக் கேட்கலாம்:

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக் கடல்தான் பொங்குவதேன்?
நிலை மகளும் துயிலுகையில்
நெஞ்சகந்தான் பதைப்பதுமேன்?
காட்டினில் வாழ் பறவைகளும்
கூடுகளைத் தேடினவே!
வேட்டுவரும் வில்லியரும்
வீடு நோக்கி ஏகுவரே!
வானகமும் நானிலமும்
மோனமதில் ஆழ்ந்திருக்க
மான்விழியாள் பெண்ணொருத்தி
மனதில் புயல் அடிப்பதுமேன்?
வாரிதியும் அடங்கி நிற்கும்
மாருதமும் தவழ்ந்துவரும்
காரிகையாள் உளத்தினிலே
காற்று சுழன் றடிப்பதுமேன்?"

அந்த இளமங்கையின் உள்ளத்தில் அப்படி என்ன சோகம் குடிகொண் டிருக்குமோ, தெரியாது! அவளுடைய தீங்குரலில் அப்படி என்ன இன்ப வேதனை கலந்திருக்குமோ, தெரியாது! அல்லது அப்பாடலின் சொற்களோடு ஒரு வேளை கண்ணீரைக் கலந்துதான் பாடலை அமைத்து விட்டார்களோ, அதுவும் நாம் அறியோம். ஆனால் அந்தப் பாடலை அவள் பாடுவதைக் கேட்கும் போது நமக்கு நெஞ்சம் விம்மி வெடித்து விடும் போன்ற உணர்ச்சி ஏனோ உண்டாகிறது.

பூங்குழலி கானத்தை நிறுத்தினாள். படகின் துடுப்பை நாலு தடவை வலித் தாள். படகு கரை அருகில் வந்து சேர்ந்தது. பூங்குழலி படகி லிருந்து துள்ளிக் குதித் துக் கரையில் இறங்கினாள். படகைக் கரையில் இழுத் துப் போட்டாள். கரையில் சில கட்டு மரங்கள் குப்ப லாகக் கிடந்தன. அவற் றின் மீது படகு சாய்ந்து நிற்கும்படி தூக்கி நிறுத் தினாள். சாய்ந்து நின்ற படகில் தானும் சாய்ந்து கொண்டு ஒருமுறை சுற்று முற்றும் பார்த்தாள்.



குந்தவைப் பிராட்டி



அதோ கலங்கரை விளக்கின் உச்சி மண்டபத்தில் தீ மூட்டியாகி விட்டது. தீ ஜுவாலை விட்டு எரிகிறது. இனி இரவெல்லாம் அந்த ஜோதி எரிந்து கொண்டிருக்கும். கடலில் செல்லும் மரக் கலங்களுக்கு அது "அருகில் நெருங்க வேண்டாம்!" என்று எச்சரித்துக் கொண்டிருக்கும். கோடிக் கரை ஓரத்தில் கடலில் ஆழமே கிடையாது. கட்டு மரங்களும் சிறிய படகுகளும் தான் அந்தப் பகுதியில் கரை ஓரமாக அணுகி வரலாம். மரக்கலமும் நாவாயும் நெருங்கி வந்தால் தரை தட்டி மணலில் புதைந்து விடும். வேகமாகத் தரையில் மோதினால் கப்பல் பிளந்து உடைந்தும் போய்விடும். ஆதலின், கோடிக்கரையில் உள்ள கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளுக்கு மிகவும் அவசியமான உதவியைச் செய்து வந்தது. மற்றொரு பக்கத்தில் குட்டை மரங்கள் அடர்ந்த காட்டின் நடுவில் கோபுரம் ஒன்று தலை தூக்கி நின்றது. அதனடியில் கோடிக்கரைக் குழகர் கோவில் கொண்டிருந்தார். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார் இந்தக் கோடிக் கரைக்கு வந்தார். காட்டின் மத்தியில் தன்னந்தனியே கோயில் கொண்டிருந்த குழகரைத் தரிசித்தார். "அந்தோ! இறைவா! இப்படி இந்தக் கடற் கரைக் காட்டின் மத்தியில் துணையின்றித் தனியே இருந்தீரே? இருக்க வேறு இடமாயில்லை? பக்தர்கள் கூட்டங் கூட்டமாக உமது புகழைப் பாடிக் கொண்டிருக்கும் ஸ்தலங்கள் எத்தனையோ இருக்க, இந்தக் கோடிக்கு வந்து பயங்கரக் காட்டிலே தனியே கோயில் கொண்டிருப்பதேன்? இக் கொடியேனுடைய கண்கள் இந்தக் காட்சியையும் காண நேர்ந்ததே!" என்று மனமுருகிப் பாடினார்.

"கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதானயலே இருந்தாற் குற்றமாமோ?
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே?"

"மத்தம் மலிரும் மறைக்காடதன் தென்பால்
பத்தர் பலர் பாடவிருந்த பரமா!
கொத்தார் பொழில்சூழ் தருகோடிக் குழகா
எத்தாற் றனியே யிருந்தாய்? எம்பிரானே!"

ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார் வந்து தரிசித்து விட்டுப் போன இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகும் கோடிக் கரைக் குழகர் அதே நிலையில் தான் இருந்தார்.* சுற்றிலும் இன்னும் கொஞ்சம் காடுகள் மண்டிப் போயிருந்தன. அக்காடுகளில் மரப் பொந்துகளில் ஆந்தைகளும் கூகைகளும் குழறின. பார்ப்பதற்குப் பயங்கரமான வேடுவர்கள் சிலர்தான் காட்டின் மத்தியில் ஆங்காங்கு குடிசை போட்டுக் கொண்டு வசித்தார்கள்.

ஆம்; ஒரே ஒரு வித்தியாசம் இருந்தது. ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு வந்திருந்தபோது கலங்கரை விளக்கம் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு, முதற் பராந்தகரின் காலத்திலேதான் அது கட்டப்பட்டது. கலங்கரை விளக்கத்தில் பணி செய்வோருக்கென்று சில ஓட்டு வீடுகள் அதைச் சுற்றிக் கட்டப்பட்டன. கோடிக்கரைக் குழகர் கோயிலில் பூஜை செய்யும் பட்டரும் அங்கே வந்து குடியேறினர்.

பூங்குழலி கடற்கரை ஓரத்தில் படகின்மீது சாய்ந்த வண்ணம் நாற்புறமும் பார்த்தாள். கலங்கரை விளக்கத்தைப் பார்த்து அந்தப் பக்கம் போகலாமா என்று யோசித்தாள்.

---

* ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றைக்கும் கோடிக்கரைக் குழகர் அதே தனிமை நிலையில் தான் இருந்து வருகிறார்!

பிறகு, குமகர் கோயிலின் கோபுர கலசத்தை நோக்கினாள். அச்சமயம் கோயிலில் சேமங்கலம் அடிக்கும் ஓசை கேட்கவே, பூங்குழலி ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். அதற்குள் வீட்டுக்குப் போய் என்ன செய்வது? கோயிலுக்குப் போகலாம். பட்டரைத் தேவாரம் பாடச் சொல்லிக் கேட்கலாம். பிறகு பிரசாதமும் வாங்கிக் கொண்டு வரலாம்.

இப்படி முடிவு செய்துகொண்டு பூங்குழலி கோயில் இருந்த திசையை நோக்கி நடந்தாள். ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் துள்ளிக் குதித்துக் கொண்டும் நடந்தாள். வழியில் மான் கூட்டம் ஒன்றைக் கண்டாள். மான்கள் மணல் வெளியைத் தாண்டிக் காட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. ஏழெட்டுப் பெரிய மான்களோடு ஒரு சிறிய மான் குட்டியும் பாய்ந்து பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தது. மான் கூட்டத்தைப் பார்த்ததும் பூங்குழலிக்கு உற்சாகம் உண்டாயிற்று. அவற்றைப் பிடிக்கப் போவதுபோல் தொடர்ந்து குதித்து ஓடினாள். ஆனால் என்னதான் விரைவாக ஓடினாலும் மான்களோடு போட்டியிட முடியுமா! மான் கூட்டம் பூங்குழலியை முந்திக் கொண்டது.

முன்னால் சென்ற மான்கள் ஓரிடத்தில் நாலு கால்களையும் தூக்கி வானத்தில் பறப்பதுபோல் நீண்ட தூரம் தாவிக் குதித்தன. அங்கே புதை சேற்றுக் குழி இருக்கிறதென்று பூங்குழலி ஊகித்துக் கொண்டாள். பெரிய மான்கள் எல்லாம் அக் குழியை ஓரே தாண்டலில் தாண்டி அப்பால் பத்திரமாய் இறங்கி விட்டன. ஆனால் மான் குட்டியினால் முழுதும் தாண்ட முடியவில்லை. அக் கரை ஓரமாக அதன் பின்னங்கால்கள்



சேற்றுக் குழியில் அகப்பட்டுக் கொண்டன. முன்னங் கால்களைக் கரையில் ஊன்றி மான் குட்டி ஆன மட்டும் கரை ஏற முயன்றது. ஆனால் அதன் பின்னங் கால்கள் சேற்றில் மேலும் மேலும் புதைந்து. கொண்டிருந்தன. தாய் மான் கரையில் நின்று குட்டியின் நிலையைக் கவலையுடன் நோக்கியது. அதனால் தன் குட்டிக்கு உதவி எதுவும் செய்ய முடியவில்லை.

இதை யெல்லாம் ஒரு நொடியில் பார்த்து அறிந்து கொண்ட பூங்குழலி அந்தப் புதை சேற்றுக் குழி எங்கே முடிகிறது என்பதைக் கண்டு தெரிந்து கொண்டாள். புதைகுழி ஓரமாக ஓடிச் சென்று கெட்டியான இடத்தின் வழியாகக் கடந்து எதிர்ப்புறத்தில் மான்குட்டி சேற்றில் அகப்பட்டுக் கொண்டு தவித்த இடத்தை அணுகினாள். தாய் மான் முதலில் அவளைக் கண்டு மிரண்டது. பூங்குழலிக்கு மானின் பாஷை தெரியும் போலும்! மிருதுவான குரலில் அவள் ஏதோ சொல்லவும் தாய் மான் பயம் நீங்கி நின்றது. பூங்குழலி புதை சேற்றுக் குழியின் கரை ஓரத்தில் முன்னங் கால்களை மடித்து உட்கார்ந்து கைகளை நீட்டி மான் குட்டியைப் பற்றிப் பலமாக இழுத்துக் கரையேற்றினாள். சில விநாடி நேரம் அந்த மான் குட்டியின் உடம்பு வெட வெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. தாய் மான் அதனருகில் நின்று முகர்ந்து பார்த்துத் தைரியம் கூறியது போலும்! அவ்வளவுதான்! அடுத்த விநாடி தாயும் குட்டியும் மீண்டும் பாய்ந்தோடின.

"ஓ! கொஞ்சமும் நன்றி யில்லாத மிருக ஜன்மங்கள்!" என்று பூங்குழலி தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். "ஆனால் மனிதர்களை விட இந்த மான்கள் மட்டமாய்ப் போய் விட வில்லை!" என்று அவளே தேறுதலும் சொல்லிக் கொண்டாள்.

பிறகு மறுபடியும் குழகர் ஆலயத்தை நோக்கி நடந்தாள்.

மணல் வெளியைத் தாண்டியதும் மரஞ் செடிகள் அடர்ந்த காட்டு வழியில் போகவேண்டி யிருந்தது. மேட்டில் ஏறியும் பள்ளத்தில் இறங்கியும் போகவேண்டி யிருந்தது. அந்தக் காட்டை இயற்கையின் விசித்திரங்களில் ஒன்று என்றே சொல்ல வேண்டும். அங்கே கற்பாறைகளினால் அமைந்த மலைகளோ, குன்றுகளோ இல்லை. ஒரே மணல் வெளிதான். ஆங்காங்கு மணல் மேட்டு மணல் மேட்டின்மீது செடிகளும் மரங்களும்





முளைத்ததினால் கெட்டிப்பட்டுக் குன்றுகளாகவே மாறிப் போயிருந்தன. குன்றுகளுக்குப் பக்கத்தில் பள்ளங்களும் இருந்தன. அத்தகைய காட்டில் வழி கண்டு பிடித்துப் போவது எளிய காரியமன்று. வெகு தூரம் நடந்து விட்டதுபோலத் தோன்றும்; ஆனால் திரும்பத் திரும்பப் புறப்பட்ட இடத்துக்கே வந்து கொண்டிருப்போம்.

பூங்குழலி அந்தக் காட்டு வழியில் புகுந்து அதி விரைவாக நடந்து ஆலயத்தினருகே வந்து சேர்ந்தாள். கோவிலுக்கு வெளியிலும் உட் பிரகாரத்திலும் கொன்னை, பன்னீர் முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்து மலர்ந்து குலுங்கிக் கொண்டிருந்தன.

பூங்குழலி ஆலயத்துக்குள் போனாள். பட்டர் அவளைப் பார்த்து முகமலர்ந்தார். அந்தக் கோவிலுக்குள் சுவாமி தரிசனம் செய்வதற்காக வருவோர் அருமை. ஆதலின் அருமையாக வருகிறவரைப் பார்த்துப் பட்டர் மகிழ்வது இயல்புதானே?

தேங்காய் மூடியும் பிரஸாதமும் கொண்டுவந்து பட்டர் கொடுத்தார். "அம்மா! கொஞ்சம் காத்திருக்கிறாயா! நானும் இதோ சந்நிதியைப் பூட்டிக் கொண்டு வீட்டுக்கு வருகிறேன்!" என்றார். இருட்டிய பிறகு அந்தக் காட்டு வழியில் செல்வது கொஞ்சம் சிரமமான காரியந்தான். ஆனால் வழி காட்டுவதற்குப் பூங்குழலி இருந்தால் கவலையே கிடையாது.

"இருக்கிறேன், ஐயா! எனக்கு அவசரம் ஒன்றுமில்லை. மெதுவாகக் கோயில் கைங்கரியங்களை முடித்துக் கொண்டு புறப்படுங்கள்!" என்று பூங்குழலி கூறிவிட்டுக் கோயில் பிரகாரத்துக்கு வந்தாள். மரக்கிளை ஒன்றைப் பிடித்துக்கொண்டு பிராகாரத்தின் மதில் சுவரின்மேல் தாவி ஏறினாள். மதில் மூலையில் நந்திபகவானுடைய பெரிய சிலை ஒன்று அமைந்திருந்தது. அந்தச் சிலைமீது சிறிது சாய்ந்த வண்ணம் மதின்மீது காலை நீட்டிப் படுத்தாள். தேங்காய் மூடியைப் பல்லினால் கறண்டிச் சாப்பிடத் தொடங்கினாள்.

நாலாபுறமும் இருள் சூழ்ந்து வரும் விசித்திரத்தைப் பூங்குழலி பார்த்துக் கொண்டேயிருக்கையில், குதிரையின் காலடிச் சத்தத்தைக் கேட்டாள். சத்தம் வந்தவழியே ஆவ

லுடன் பார்த்துக் கொண்டிருந்தான். குதிரைக் காலடியின் சத்தம் அவளுடைய உள்ளத்தில் ஏதேதோ பழைய ஞாபகங்களை எழுப்பி அவளைக் கனவு லோகத்துக்குக் கொண்டு போயிற்று. எங்கிருந்தோ இனந்தெரியாத ஒரு துக்கம் வந்து நெஞ்சை அடைத்தது. வருகிறது யாராயிருக்கக் கூடும்? யாராயிருந்தால் நமக்கு என்ன கவலை? கொஞ்ச காலமாகப் புது ஆள்கள் வருகிறதும் போகிறதும் அதிகமாய்த் தானிருக்கிறது. இராஜாங்க காரியமாக வருகிறார்களாம்; போகிறார்களாம். நேற்றைக்குக்கூட இரண்டு பேர் வந்திருந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்கே அருவருப்பாயிருந்தது. அண்ணனைப் படகு வலிக்கச்சொல்லி ஈழத்துக்குச் சென்றார்கள். பணமும் நிறையக் கொடுத்தார்கள். அவர்களுடைய பணத்திலே இடி விழட்டும்! யாருக்குப் பணம் வேண்டும்! பணத்தை வைத்துக்கொண்டு இந்த நடுக்காட்டில் என்ன செய்வது? ஆனால் அண்ணனுக்கும் அண்ணிக்கும் பணம் என்றால் ஒரே ஆசை. எதற்கோ தெரியவில்லை! சேர்த்துச் சேர்த்துப் புதைத்து வைக்கிறார்கள்!

குதிரைக் காலடிச் சத்தம் இதோ அருகில் நெருங்கி வருகிறது. ஒரு குதிரை அல்ல; இரண்டு குதிரைகள் வருவது போல் தோன்றுகிறது. இதோ அவை தென்படுகின்றன. பள்ளத்திலிருந்து மெள்ள மெள்ள மேட்டில் ஏறி வருகின்றன. நெடுந்தூரம் பிரயாணம் செய்து களைத்துப் போன குதிரைகள். ஒவ்வொரு குதிரை மீதும் ஒரு ஆள் வருகிறான். முதலில் வருகிற குதிரை மேல் வருகிறவன் வாலிபப் பிராயத்தவன். பார்க்க இலட்சணமாயிருக்கிறான். வாட்ட சாட்டமாகவுமிருக்கிறான். முகத்தில் கம்பீரம் இருக்கிறது. ஆனால் அவளுடைய இருதய அந்தரங்கத்தில் குடி கொண்டிருக்கும் அந்த இன்னொரு முகத்தின் அழகும் கம்பீரமும் எங்கே? இவனுடைய முகம் எங்கே? பார்க்கப் போனால், இவனுடைய முகம் மரப் பொந்தில் இருக்கும் ஆந்தை முகம் மாதிரி யல்லவா சப்பட்டையாயிருக்கிறது?

குதிரையின் மேல் வந்த இருவரில் முதலில் வந்தவன் நமது பழைய நண்பனாகிய வல்லவரையன் வந்தியத்தேவன் தான். பின்னால் வந்தவன் வைத்தியருடைய மகன். இருவரும் பழையாறையிலிருந்து இங்கே வந்து சேர்வதற்குள் இளைத்துக் களைத்துச் சோர்வுற்றுப் போயிருக்கிறார்கள். ஆயினும் வந்தியத்தேவனுடைய முகம், கோயில் மதில் மேல் காலை நீட்டிச் சாய்ந்து கொண்டிருந்த பூங்குழலியைக் கண்டதும் சிறிது மலர்ந்தது. அவள் தன்னுடைய முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்ததும் அவனுக்கு இயற்கையான உற்சாகமே பிறந்து விட்டது. அவனும் குதிரையை நிறுத்திவிட்டு அவளுடைய முகத்தை ஆர்வத்துடன் உற்றுப் பார்க்கலானான். தன் முகத்தை மரப் பொந்திலுள்ள ஆந்தையின் முகத்தோடு அவள் ஒப்பிடுகிறாள் என்று மட்டும் அவன் அறிந்திருந்தால் அவ்வளவு உற்சாகப்பட்டிருக்க முடியாது தான். ஒருவர் மனத்திலுள்ளதை இன்னொருவர் முழுதும் அறிய முடியாமலிருப்பது எவ்வளவு அநுகூலமாயிருக்கிறது?

குதிரை மேல் வந்தவன் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதைப் பூங்குழலி அறிந்தாள். கையில் தான் தேங்காய் மூடி வைத்துக் கொண்டு பல்லினால் கறண்டித் தின்று கொண்டிருப்பதையும் நினைத்தாள். உடனே எங்கிருந்தோ ஒரு நாண உணர்ச்சி வந்து அவளைப் பற்றிக் கொண்டது. பிரகார மதில் சுவரிலிருந்து வெளியே வெண்மணலில் குதித்தாள். மதில் சுவர் ஓரமாக ஓடத் தொடங்கினாள்.

அதைப் பார்த்த உடனே வந்தியத்தேவனுக்கும் குதிரை மேலிருந்து குதிக்கத் தோன்றியது. குதித்துப் பூங்குழலியைப் பின் தொடர்ந்து பிடிப்பதற்கு ஓட வேண்டும் என்றும் தோன்றியது. அவ்வாறே அவளைத் துரத்திக் கொண்டு ஓடினான்.

இந்த அர்த்தமற்ற செயலின் காரண காரியங்களை யார் கண்டு பிடித்துச் சொல்ல முடியும்? ஆயிரம் பதினாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த மனித குலத்தின் பரம்பரை இயற்கைதான் பூங்குழலியை ஓடச் செய்தது என்றும், அதுவே வந்தியத்தேவனைத் துரத்திப் பிடிக்கச் செய்தது என்றும் சொல்ல வேண்டியதுதான். (தொடரும்)

அக்கப்போர்

"சுதந்திரத்தினால் கொள்ளை லாபக்காரர்கள் கை ஓங்கி இருக்கிறது."

—டாக்டர் பி. ஸி. கோஷ்

"இல்லை; தந்திரத்தினால்தான் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறோம்" என்று அவர்கள் கூறலாம்!

★

"அகில இந்திய சர்வோதய சம்மேளனத்தை வினோபா பாவே இன்று ஆரம்பித்து வைத்தார்." —ஹைதராபாத் செய்தி

மௌன தானத்துடன் சம்மேளனம் ஆரம்பமாகி இருக்குமென நம்புகிறோம்!

★

சென்ற வருஷம் நடந்த இந்திய தேசிய மகா சபை அக்கிராசனர் தேர்தல் குறித்து, அந்தத் தேர்தலில் தோல்வியடைந்த ஸ்ரீ கிருபளானி, ஒரு விசாரணை நடத்தவேண்டும் என்கிறாராம்.

இந்த வருஷப் பரீட்சையில் தோல்வியுற்ற நமது கிச்சப் பயலும் அப்பரீட்சை விஷயமாக விசாரணை நடத்த வேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறான்!

★

"பரோடா மகாராஜாவின் பட்டம், பதவி, பணம் இம்மூன்றும் இந்திய சர்க்காரினால் பறிமுதல் செய்யப்பட்டன." —செய்தி

"பல முறை புத்தி சொல்லியும் கேளாத இந்த நபரோடா! நாம் சமாதானமாகப் போவது!" என்று இந்திய சர்க்காருக்குக் கோபம் வந்திருக்கலாம்.

★

"எங்கள்பத் திரிகைக்கு ச் சொந்த அனுபவமுள்ள ப்ரூப் திருக்துபவர்க்க தேவை" என்று சில தினங்களுக்கு முன் ஒரு பத்திரிகையில் விளம்பரம் வெளியாகி இருந்ததாம்!

★

"சௌராஷ்டிர கடன் வசதி சங்கத்தின் நடவடிக்கைகளினால் இது வரை 75 லட்சம் பேருக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது."

—சென்னை சர்க்கார் அறிக்கை

இதிலிருந்து மேற்படி சங்கம் கடனுக்கு வேலை செய்யவில்லை என்று தெரிகிறது அல்லவா!

★

வானொலி சக்தியால் இயங்கும் குண்டுகள் சற்றும் காலம் தவறாமல் இலக்குகள் மீது பாய்ந்து சேதப்படுத்த வல்லவை என்று ஒரு செய்தி கூறுகிறது.

ஆமாம், நமது வானொலி நிகழ்ச்சிகளைப் பாருங்களேன் என்கிறார் ஒரு ரசிகர்!

★

"ஈராக் எண்ணெய் ஊற்றுகளுக்குத் தலைவலியா!" —ஒரு செய்தித் தலைப்பு

தலைவலி தீருவதற்கு எண்ணெய் ஊற்றுக்களில் யூகலிப்டஸ் எண்ணெயை ஊற்றலாமா!

"புரட்சிகரமான காமிரா."

—ஒரு செய்தித் தலைப்பு

"அழகில்லாதவர்களை அழகுள்ளவர்களாக மாற்றி இந்தக் காமிரா படம் எடுக்குமா!" என்று கேட்கிறார் ஸ்ரீமான் அகோரம்.

★

"திருநீர்மலையில் யாதவகுல சங்கம்"

—ஒரு தலைப்பு

திருநீர்மலையில் யாதவ சங்கம் நிறுவப்படுவது பொருத்தமேயாம்!

★

"சென்னை ராஜ்யத்தில் கோவில்களுக்கு ஹரிஜன தர்மகர்த்தாக்கள் நியமிக்கப்படுவார்கள்." —கனம் சிவசண்முகம் பிள்ளை

இனி, ஜாதி ஹிந்துக்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை வேண்டும் என்ற இயக்கம் தொடங்க வேண்டி நேரிடலாம்.

★

"சென்னை ராஜ்யத்தில் பொதுத் தேர்தலை வரும் பிப்ரவரியில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை மேல் சபை நிறைவேற்றி யிருக்கிறதாம்."

அடுத்த வருஷ பட்ஜெட்டிலும் புதிய வரிகள் இல்லாமல் இருக்கச் செய்யும் ஒரு சூழ்ச்சி இது என்கிறார் மந்திரிகள் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர்.

★

"சினிமாவில் புகை குடிக்கத் தடை மசோதா மேல்சபையில் நிறைவேறியது."

—சென்னைச் செய்தி.

இந்த நிலைமை ஏற்பட்டதை நம்புகை சற்றுக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

★

"தொழில் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிப்பது பற்றி ஒரு புது முடிவை சென்னை அரசாங்கம் செய்ய வேண்டியிருக்கிறது."

—ஒரு செய்தி

மிகவும் குறைந்த மார்க் வாங்கியுள்ள மாணவர்களையே கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படும் என்ற முடிவுக்குச் சர்க்கார் வரமாட்டார்கள் என நினைக்கிறோம்!

★

"இந்தியாவுக்கு உணவு அனுப்ப அமெரிக்க காங்கிரஸ் காலஹரணம் செய்வதன் காரணம் என்ன!" —ஒரு கேள்வி

"காலஹரணம் ஏல காங்கிரஸே" என்று சுத்த சாவேரியில் யாராவது பாடினால் பொருத்தமாக இருக்கும்.

★

"ஆதாரக் கல்விக்காக இந்திய சர்க்காரிடமிருந்து பண உதவி இல்லை."

—சென்னைக் கல்வி மந்திரி

ஆதாரக் கல்வி விஷயத்தில் இந்திய சர்க்கார் சற்று உதார குணம் காட்டுவார்களா!

"சென்னைக்கு மேலும் உணவுப் பொருள். டில்லியிலிருந்து கடிதம்."

—செய்தித் தலைப்புகள்

கடிதம் மனிதர்களுடைய உணவுப் பொருள் அல்லவே!

★

"சோமநாதர் ஆலய லிங்கப் பிரதிஷ்டை மே மாதம் 11-ம் தேதி நடைபெறும்."

—பம்பாய்ச் செய்தி

'சோமநாதர் வாழ்க' 'கஜினி முகம்மது வீழ்க' என்ற கோஷங்கள் அன்று எழுப்பப் படலாம்!

★

"சன்மார்க்கம் குறைந்து விட்டது."

—ஒரு ஆஸ்திகர்

அதனால் கதா காலட்சேபங்களில் சன்மானமும் குறைந்துவிட்டது என்கிறார் ஒரு கதா பிரவசன ப்ரவீணர்.

★

"சைக்கிள் 'ட்யூபி'ல் கள்ளச் சாராயம் கொண்டு போகப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டது."

—கோவைச் செய்தி

கள்ளச் சாராயத்தைத் தன்னுள் கொண்ட அந்த சைக்கிள் தள்ளாடுவதைக் கண்டு போலீஸார் சந்தேகப்பட்டிருக்க வேண்டும்!

★

"திராவிடத்தைத் தோழர் சிவஞானம் என்ன செய்ய முடியும்!"

—ஒரு தோழர்

திராவிடத்தைத் தோழர் சிவஞானம் விழுங்கி விடுவார்.

★

"ஆயுள் பரியந்தம் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் 94 வயது ஆன மார்ஷல் பெடேயின் காலமானார் என்று முதலில் வந்த செய்தி பிறகு மறுக்கப்பட்டது."

—பாரிஸ் செய்தி

சித்திரகுப்தன் காரியாலயத்தில் ஏதோ கைப் பிசகான காரியம் ஒன்று நடந்து போய் விட்டது போலிருக்கிறது.

★

"முதலாளி—தொழிலாளி சமரஸத்திற்கு ஸ்ரீ கிரி காட்டும் பாதை."

—ஒரு தலைப்பு

ஸ்ரீ கிரி காட்டும் வழி சிறந்ததாக இருக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்படலாம்.

★

"செருப்புகளைத் திருடின ஒருவர் இங்கு கையும் களவுமாகப் பிடிபட்டார்."

—ஜம்மு செய்தி

காலும் களவுமாக என்று சொல்லுவது தான் பொருந்தும்!

★

"உத்தியோகஸ்தர்கள் பொதுஜன நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டும்."

—ஒரு பிரமுகர்

இல்லாவிட்டால் அவர்கள் பொது ஜனங்களிடமிருந்து பத்திரமாக இருக்கவேண்டும்!

பண்ணைச் சொத்து

பத்மா

பண்ணையாள் தங்கப்பாளம் பிச்சம்மாள் மீது திருட்டுக் குற்றம் சாட்டினான். சாட்சி பலமோ அவன் கட்சிக்குத்தான். இத்தனைக்கு மேல் ஒரு சக்தி வேலை செய்து அவனுடைய வெற்றியைத் தின்று விட்டது என்றால், நம்ப முடியாதுதான். இன்னும் கல்யாணமாகாத ஓர் இள நங்கையைக் காரணம் இருந்தோ இல்லாமலோ குற்றம் சாட்டினால் என்ன தண்டனை கிடைக்கும் என்பதை அவன் தன் வாழ்நாள் முழுதும் அனுபவித்து அறிய நேர்ந்தது. தங்கப்பாளத்தின் கதையைத் தெரிந்து கொள்ளும் இளைஞர்கள் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வந்து விடுவார்கள். அதாவது ஓர் இளம் பெண் எதையாவது திருடக் கண்டால்—இதயத்தையே வந்து திருடப் பார்த்தாலும் சரி—கண்ணை மூடிக்கொண்டு வாளா இருந்து விடுவார்களே தவிர, அந்தப் பெண்ணை நாலுபேர் முன்பாகக் குற்றஞ் சாட்ட நெஞ்சு துணிய மாட்டார்கள். கதையின் நீதி இதுதான். ஆரம்பத்திலேயே சொல்லி விட்டேன்.

* * *

போரில் வைக்கோல் பிடுங்கிக் கொண்டிருந்த தங்கப்பாளம் திரும்பிப் பார்த்தான்.

"இந்தாம்மா, பண்ணை வீட்டுக்குப் பத்துத் தேய்க்கிற லட்சணமா இது! எங்கேயோ பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிறியே!"

பண்ணையாள் தங்கப்பாளத்தின் கெடுபிடி பிச்சம்மாளுக்குச் சிரிப்பாக இருந்தது.

"பத்துத் தேய்க்கிறதை ஒங்கிட்டேப் படிக்கத்தான் தெரிஞ்சுக்கிடணும். அதிகாரம் பண்ண வந்துட்டாரு அளகம் பெருமாளு!"

"நல்லா அதிகாரம் பண்ணத்தான் பண்ணுவேன். இந்தப் பண்ணையிலேருந்து ஒத்தைக்காக வெளியிலே போகுதின்னு அது விஷயமா கேள்வி கேட்கத்தான் செய்வேன்."

"ஏது, ஏது! பெரிய பண்ணைக்கு அடுத்த வாரிசே நாம்பதான்னு நினைக்கிறாப்பலே இருக்குது! சரி, சரி, தள்ளி நில்லு. இரண்டே இரண்டு வைக்கோல் மட்டும் எடுத்துக்கிறேன், பத்துத் தேய்க்க!"

விடு விடு என்று பிச்சம்மாள் போரிலிருந்து கொஞ்சம் புது வைக்கோல் எடுக்கப் போனாள். பார்த்தான் தங்கப்பாளம், சட்டென்று அவள் கையைப் பிடித்து விலக்கித் தள்ளி விட்டான். "என்ன நினைச்சுக்கிட்டே நீ! வைக்கோல் கட்டு என்ன விலை விற்கிறது, தெரியுமா! கட்டு மூணு ரூபாய். மாடு கண்ணுக்கு ஒரு வாய் வைக்கோலைக் காணோம். பத்துத் தேய்க்கிறதுக்கு வைக்கோல் துண்டு வேணுமாயில்லே!"

பிச்சம்மாள் தன் இடது கையைத் தடவிக் கொண்டாள். தங்கப்பாளத்தின் காய்ப்பு விழுந்த கை பிடித்திருந்த இடத்தில், அவள் கை சிவந்து குன்றிப் போய் விட்டது.

"நல்ல இளவட்டப் பிள்ளைதான் நீ! ஒரு பொம்பளை கையைப் பிடிச்சு தள்ளிட்டே பாரு! உனக்கு மட்டும் இந்தப் பண்ணைச் சொத்திலே அவ்வளவு பாத்தியமா! பாத்துக்கறேன்; இரு! நீயே தின்னுனும் சரி, இந்த ஒரு போர் வைக்கோலையும்" என்று சபித்து விட்டுப் பிச்சம்மாள் பாத்திரங்களை வெறும் கையால் சாம்பல் போட்டுத் தேய்க்க ஆரம்பித்தாள்.

பித்தளை வளையல் அணிந்த அவள் கைகளில் பித்தளைப் பாத்திரம் சுழன்று வரும் அழகைத் தங்கப்பாளம் பார்த்தான். சாம்பலைத் தொட்டுப் பத்துத் தேய்க்க வேண்டிய கை அது இல்லை. அந்தக் கையின் தங்க நிறந்தான் அந்தப் பாத்திரத்தில் படிந்து அதைப் பளபளவென்று சொர்ண மயமாக்குகிறது!

அந்தக் கைகளுக்கு இரக்கப்பட்டான் தங்கப்பாளம். ஆனாலும் ஒரு துண்டு வைக்கோலை விட்டுக் கொடுக்க அவனுக்கு மனம் இசையவில்லை. அது பண்ணைச் சொத்து. அதைத் தொடக்கூடாது.

ஒரு சுருணை வைக்கோலைச் சுருட்டித் தள்ளி விட்டு, வைக்கோல் போரில் பின்னல் முடியத் தொடங்கினான். ஜடை மாதிரி பின்னல் போட்டு வைத்தால், அந்த இடத்தில் வேறு யாரும் பின்னலைக் கலைக்காமல் வைக்கோல் பிடுங்க முடியாது. ஒன்றுக்கு மூன்றாகவே பின்னல் போட்டு வைப்பது அவன் வழக்கம். தங்கப்பாளம் பின்னல் போடும் பொழுது, அவன் மனம் பிச்சம்மாளின் கோபம் நிறைந்த முகத்தையே நினைத்துக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் கோப மூட்டினால், அந்த முகத்தில் என்னென்ன அதிசயங்கள் எல்லாம் புறப்படுமோ!

வைக்கோல் சுருணையைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு தங்கப்பாளம் பிச்சம்மாளைப் பார்த்தான். கீழே குனிந்த வண்ணம், தன் பித்தளை வளையல்களைப் 'பூசி மெழுகி'க் கொண்டிருந்தாள் அவள். வளையல்களும் அவள் கையின் நிறத்தைப் பெற்றுவிடவேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தன.

"இந்தாம்மா, அதென்ன அப்படி வளைச்சு வளைச்சுத் தேய்க்கிறே! என்னதான் உருக்கான் செங்கலை வைத்துத் தேய்ச்சாலும் உனக்காகப் பித்தளை தங்கம் ஆயிடுமா!"

பிச்சம்மாள் தலை நிமிர்ந்தாள். "நீ தங்கப்பாளம், தங்க நகையாகப் போடுவே! சோலியைப் பார்த்துக்கிட்டு போய்யா!"

பிச்சம்மாள் தன்னை மடக்கிப் பேசும் பொழுது அவள் முகமும் கையும் கண்ணும் கூடப் பேசியதைத் தங்கப்பாளம் அனுபவித்தான். என்றும் இல்லாதபடி, தலையிலிருந்த வைக்கோல் கட்டு அவனை அழுத்திற்று.

"கோபிச்சுக்காதே, பிச்சம்மா............!" என்றான்.

"பின்னே, என்ன ஐயா! ஒரு துண்டு வைக்கோல் கொடுத்தால் வைக்கோல் போரே குறைஞ்சு போயிடறமாதிரி பேசிட்டே!...... வளைவுச் சுவரைத்தாண்டி வந்து ராவோடு ராவா, கட்டுக் கணக்கிலே அள்ளிக்கிட்டுப் போவாங்க. அதெல்லாம் உன் கண்ணிலே படாது. நான் கேட்ட ஒரு கை வைக்கோலுக்குப் பிரமாதமாகச் சண்டைக்கு வந்துட்டே! நல்ல பண்ணை ஆளு நீ!"

"ஏசமானே, பிச்சம்மா! நம்ம பண்ணை வீட்டுப் போரிலே வந்து களவாடுகிற பயல் ஒருத்தன். இந்த ஊரிலே இருக்கவா செய்யுறான்!......ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் என் கிட்டே அந்தத் திருட்டுப் பயல் அகப்படாமலா போவான்! பிடிச்சுச் செம்மையாய் உதைச்சு, கைக்குக் காப்பு மாட்டி வைக்கிறேன், பாரு!" என்றான் தங்கப்பாளம் ஆத்திரத்துடன்.

பண்ணை வீட்டு வைக்கோல் போரிலிருந்து ஒரு தாள் வைக்கோல் களவு போவதென்றால் அதைவிட அவமானம் என்ன இருக்கிறது!

பிச்சம்மாள் துலக்கிய பாத்திரங்களை அலம்பி அடுக்கினாள். பிறகு சாவதானமாக நிமிர்ந்து பார்த்தாள். தூரத்தில் வைக்கோல் கட்டும் தலையுமாகத் தங்கப்பாளம் போய்க்கொண்டிருந்தான். பின்னால் ஒரு கன்றுக்குட்டி, அவன் வைக்கோல் கட்டிலிருந்து தொங்கிய வைக்கோலைக் கடிக்க முயன்று கொண்டிருந்தது.

'பேச்சுக்கு மாத்திரம் குறைச்சல் இல்லே! ......நீ காவலுக்கு முழிச்சுக்கிட்டு இருக்கிறப்போ, ஒரு பொம்பளை கொண்டு போயிடுவா, நாலு கட்டு வைக்கோல்!' என்று முணுமுணுத்தாள் பிச்சம்மாள்.

அவனுடைய பித்தளை வளையலைப்பற்றி அவன் பேசிய கேலியை நினைத்தால் அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. அழுகைக்கு மேலாக ஆத்திரம் வேறு பொங்கிற்று.

* * *

பெரிய பண்ணை பெருமாள் முதலியார் கையில் பத்திரிகையோடு சாய்வு நாற்காலியில் சாய்ந்தாரென்றால், அப்பொழுது மணி எட்டு என்றுதான் அர்த்தம். அதேமாதிரி, தங்கப்பாளம் வேலிப் பந்தல் தூண் ஓரத்தில், காற்றில் தடுமாறிக் கொண்டிருந்த பூங்கொடிக்குப் பக்கத்தில் வந்து நின்றால், ஏதோ புகார் இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

"என்னடா!"

"வளவிலே விதியோரமா வைக்கப் போர் இருக்குது பாருங்க, அதிலே எவனோ கை வச்சிருக்கான்!"


"நம்ம போரிலே துணிஞ்சு ஒருத்தனும் கை வைக்கமாட்டான். இதைத்தானா சொல்ல வந்தாய்!" என்று பத்திரிகையில் அடுத்த பக்கத்தைப் புரட்டினார் முதலியார்.

"இல்லீங்க எசமான்......நான் முடிப் பின்னல் போட்டு வச்சது கலைஞ்சிருக்கு. கண்ணளவாப் பார்த்தாலும், வைக்கோல் குறைவு துங்க" என்றான் தங்கப்பாளம்.

பெருமாள் முதலியாருக்குச் சிரிப்பு வந்தது. இப்படித்தான் தங்கப்பாளம் அடிக்கடி வந்து புகார் செய்வது வழக்கம். கருப்பந்தோகை பதினைந்து கட்டு வந்ததில், நாலு தோகையை யாரோ திருடி விட்டார்கள் என்று ஆத்திரப்படுவான். வாழைத்தாறு வந்தால், அடிப் பிஞ்சுக் காய்களில் ஒன்றையாவது தூக்கி விட்டால் வந்துவிடும் கோபம், கையைத் திருகிப் பண்ணைக் கூடையில் போடுவான். பண்ணைச் சொத்து என்றால் அவனுக்கு அப்படி!

"அதெல்லாம் இனிமேல் குறையாது. போய் விட்டு வா!" என்றார் பண்ணையார். அவருக்குப் பத்திரிகையில் வேறு முக்கிய சமாசாரம் இருந்தது.

இரண்டு நாள் கழிந்தது.



முதலியார் பத்திரிகையைப் பிரித்தார். தங்கப்பாளம் வந்து நின்று "எசமான்" என்றான்.

"இன்னைக்கும் வைக்கோல் களவு போன மாதிரி இருக்குதுங்க."

"பின்னல் போட்டு வச்சியா! யாராவது கை வச்சால் தெரியுமே!"

"நான் போட்ட முடிப் பின்னல் மூணும் அப்படியே இருக்குதுங்க. ஆனால், மூணு நாலு கட்டு வைக்கோல் போயிருக்குதுங்க. எவனோ உளவு தெரிஞ்ச பயல்தான் செஞ்சிருக்கணும். இன்னைக்கி ராவு ஒளிஞ்சிருந்து களவாணிப் பயலைப் பிடிச்சுக் காலை ஒடிக்கிறேன்."

"அதெல்லாம் வேண்டாம். இங்கே இழுத்துகிட்டு வா. ஆக்கினை பண்ணிக்கிடலாம்" என்று தங்கப்பாளத்தை அவன் போக்கில் விட்டுப் பிடித்தார் முதலியார்.

அன்றிரவு ஒரு பழைய 'டார்ச்' விளக்கு, பூண் கட்டிய நெற்றி மட்டக்கம்பு, கொச்சக் கயிறு சகிதம் தங்கப்பாளம் மறைவில் ஒளிந்திருந்தான். 'களவாணிப் பயலை'ப் பிடித்துக் கைகளை முதுகுப்புறம் கொண்டுவந்து கட்டுவதா அல்லது முன் புறத்தில் கட்டித் தலையில் வைக்கோல் கட்டு ஒன்றை ஏற்றி இழுத்துக் கொண்டு போவதா என்று தீர்மானிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

• • •

பிச்சம்மாளின் தாய் கொடுத்த ஆறு ரூபாயையும் ஒவ்வொன்றாகக் கண்டிப் பெட்டியில் போட்டார் பத்தர். பிச்சம்மாளுக்குக் கிளுகிளுப்பு உண்டாயிற்று. சிவப்புக் கடுதாசியில் மடித்திருந்த தங்க வளையல்களை எடுத்து நீட்டினார் பத்தர்.

"நல்லா வாழ்த்திக் கொடுங்க, பத்தரே!" என்றாள் பிச்சம்மாளின் தாய்.

"நம்ம கை முகூர்த்தத்தைப் பாரு, நீ! மாசம் பிறந்து, கல்யாணம் ஓடி வரப்போகுது உன் மகளுக்கு" என்று சொல்லிப் பிச்சம்மாளுக்கு வளையல்களைப் போட்டார். கையிலிருந்து கழற்றிய பழைய பித்தளை வளையல்களை வாங்கி முந்தானையில் முடிந்து கொண்டாள் பிச்சம்மாள்.

'இனிமேல் அந்தத் தங்கப்பாளம் கேலி செய்ய முடியாது. செய்தால் நாக்கை அறுத்து விடுகிறேன்" என்று மனசுக்குள் சபதம் செய்துகொண்டாள் பிச்சம்மாள்.

வீடு திரும்பும்பொழுது, தாய் மகளிடம் "இப்பவாவது நிசத்தைச் சொல்லு. ஆறு ரூபாய் ஏது உனக்கு?" என்று கேட்டாள்.

"சொல்லித்தான் ஆகணுமா!" என்று தயங்கினாள் பிச்சம்மாள்.

"எனக்குத் தெரியாமே நீ ஒரு காரியம் செய்யறது நல்லாயிருக்குதா!"

"அப்புறம் என்னைச் சண்டை பிடிக்கக் கூடாது. சம்மதமானால் சொல்கிறேன்"

"சண்டை ஏன் பிடிக்கிறேன்! சொல்லு"

"பண்ணை வீட்டு வைக்கப் போரிலே யாருக்கும் தெரியாமே மூணு கட்டு வைக்கோல் எடுத்துக் கீழத் தெரு பால்காரி கிட்டே வித்துட்டேன்" என்றாள் பிச்சம்மாள் தயக்கத்துடன்.

"அடி பாவி" என்று திடுக்கிட்டாள் தாய்.

"எதுக்கு அப்படின்னு கேளு, அம்மா! பண்ணையாளு தங்கப்பாளம் இல்லே, அவன் கிட்டே ஒரு நாள் பத்துத் தேய்க்க வைக்கோல்தான் கேட்டேன். எடுத்த வைக்கோலைத் திருப்பிப் போட்டு விட்டான். ஒரு கை வைக்கோலிலே, படப்பே குறைஞ்சு போயிடற மாதிரி பேசினான்! அவனுக்கு ஒரு பாடம் கத்துக் கொடுக்கணும்னு தோணிச்சி!" என்று பிச்சம்மாள் விளக்கினாள். தாய்க்காரி என்ன செய்வாள்! இதை வெளியிலே எப்படிச் சொல்கிறது! ஒரு பெண்ணுக்கு இத்தனை துணிச்சலா! பிடிபட்டிருந்தால் மானம் போயிருக்குமே! கல்யாணம் ஆகப்போகிற குமரி இப்படிக் களவாணி என்று பெயர் வாங்கினால், எவன் அவளைக் கட்டிக் கொள்வான்!

தாய்க்குத் தலை சுற்றியது.

மகள் பேசாமல் நடந்தாள்.

வீட்டு வாசலில் நெற்றி மட்டக்கம்பு சகிதமாகத் தங்கப்பாளம் உட்கார்ந்திருந்தான். 'வந்தது அனர்த்தம்' என்று கையை விரித்தாள் தாய். பிச்சம்மாள் மட்டும் கொஞ்சங்கூடப் பயமில்லாமல் "அம்மா! இவரு எதுக்கு வந்திருக்கிறாரு, கேளு" என்று கேட்டாள். அவள் கைகளில் தங்க வளையல் மின்னிற்று.

"பெரிய பண்ணை ஐயா, தாய்—மகள் இரண்டு பேரையும் கையோடு கூட்டிக் கிட்டு வரச் சொன்னாங்க" என்று 'சம்மன் ஜாரி' செய்தான் தங்கப்பாளம்.

* * *

பெரிய பண்ணை பெருமாள் முதலியார் சிரித்தார். தங்கப்பாளம் நிலைமையை இத்தனை மோசமாக்கி விடுவான் என்று அவர் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. கேவலம் மூன்று கட்டு வைக்கோல் காணமற் போயிற்று என்பதற்காக, தங்கப்பாளம் மூன்றுநாள் கண்ணைப் பொத்தாமல் காவல் காத்துப் பார்த்திருக்கிறான். திருடனைக் காணவில்லை. வீடு வீடாக வைக்கோல் போர்களை ரகசியச் சோதனை போட்டு அரித்திருக்கிறான். அதோடு போகவில்லை. கீழத்தெரு பால்காரியின் எருமை, வாயில் கவ்வியிருந்த புது வைக்கோலைப் பார்த்து, அதிலிருந்து துப்புப் போட்டு, பால்காரியானவள் பிச்சம்மாளைக் கொண்டு வளவுச் சுவர் வழியாக வைக்கோல் கட்டுகளைக் கடத்தி வாங்கியது வரையில் துப்புத் துலக்கிக் கண்டு பிடித்து விட்டான். இதற்குள் கிராமம் பூராவும் பேச்சுப் பரவி விட்டது. பத்துத் தேய்க்கிற பிச்சம்மாள் வைக்கோலைத் திருடி விற்ற அதிசயம் கண், காது, மூக்கு வைத்துக் கொண்டு வீட்டுக்கு வீடு வந்து விட்டது.

பெரிய பண்ணை பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தார். தூணருகில் தங்கப்பாளம் நின்று கொண்டிருந்தான். வலது பக்கத்தில் பிச்சம்மாளும் தாயும் குன்றிப் போய் நின்றார்கள். அவர்களின் அருகில் நின்ற பால்காரிக்கு நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது.

"தெரியாத்தனமா, என் பொண்ணு செஞ்சிடுத்துங்க. சிறுபுள்ளைத் துடுக்கு. தம்பி தங்கப்பாளம் ஏதோ சொல்லியிருக்குது. அதுக்கு கோவிச்சுக்கிட்டு, பிச்சம்மாள் விளையாட்டா செஞ்சிட்டுதுங்க. எனக்கே இப்பதான் தெரியும். அதை இவரு ஊரெல்லாம் பறையடித்து,

எங்க மானத்தைக் காத்திலே விட்டுட்டாருங்க" என்று முறையிட்டுக் கண்ணீரை வரவழைத்தாள் பிச்சம்மாளின் தாய்.

"தெரியாத்தனமா செய்வதற்கு உன் மகள் என்ன அறியாக் குழந்தையா! வயசு பதினெட்டு இருபதாச்சு" என்று நெற்றி மட்டக் கம்பை ஆட்டினான் தங்கப்பாளம். இதற்குள் கூட்டம் கூட ஆரம்பித்தது.

"வைக்கோல் விற்ற பணம் ஆறு ரூபாயைக் கூலியாகக் கொடுத்துப் பத்தர் கிட்டே தங்க வளையல் செய்து வாங்கிப் போட்டிருக்குது பாருங்க" என்று கூவினான் தங்கப்பாளம்.

பிச்சம்மாள் இதற்குப் பதில் சொல்லவில்லை.

"பத்தரைக் கூட்டி வரட்டுமா சாட்சிக்கு" என்றான் தங்கப்பாளம். பண்ணையார் "பொறு" என்று கையமர்த்தினார்.

கூட்டத்திலிருந்தவர்கள் பிச்சம்மாளின் கையில் கிடந்த வளையலைப் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். "மாதிரி புதுசாயிருக்கே! கைக்கும் வளையலுக்கும் நல்ல பொருத்தம்" என்றாள் ஒரு கிழவி.

"காலாகாலத்துலே கல்யாணம் ஆகாததினாலே வந்த வினை" என்றாள் இன்னொரு காச்சியார். பெரிய பண்ணை 'நிலைமை' கைக்கு அடங்காமல் போவதை உணர்ந்தார். தங்கப்பாளத்தைக் கூப்பிட்டு எல்லோரையும் போகச் சொல்லும்படி ஏவினார். இரண்டொரு நிமிஷத்தில் கூட்டம் கலைந்தது. தங்கப்பாளம் திரும்பி வந்து தூணருகில் நின்றான்.

"இந்தா, தங்கப்பாளம்" என்றார் பண்ணையார். கிட்டத்தில் வந்து 'எசமான்' என்றான்.

"இந்தா பிச்சம்மாள்" என்றார் பண்ணையார். பிச்சம்மாளும் சற்று நெருங்கி வந்தாள்.

"நம்ம வீட்டிலே வேலை பார்க்கிறது இந்தப் பொண்ணு. கேட்டால் ஆறு ரூபாய் என்ன, அறுபது ரூபாய் வேணுமானாலும் கொடுக்கலாம். உன்னை வேடிக்கை பண்ணணும்னு எண்ணி, அது விளையாட்டாச் செய்த காரியத்தை ஊர் பூராவும் சிரிக்கும்படியாகச் செய்துவிட்டாய்! இப்ப இந்தப் பொண்ணுக்கு ஒரு வழி சொல்லு" என்றார் பண்ணையார்.

"ஆமாம், அந்த அநியாயத்தைக் கேளுங்க" என்றாள் பால்காரி.

"பண்ணையிலே என்ன உத்தரவோ, அதைச் செய்து விடுகிறேன்" என்றான் தங்கப்பாளம்.

எஜமான் சொன்னார்: "நீதான் பிச்சம்மாளைக் கல்யாணம் செய்து கொள்ளணும். வேறு யாரும் அவளைப் பெண் கேட்டுப் பக்கத்திலே வராதபடி பண்ணினது நீதான். ஆகையினாலே நீதான் அவளைக் காப்பாத்தணும்—ஆயுசு முழுக்க" என்றார்.

தங்கப்பாளத்துக்குக் கண்ணீர் பாளம் பாளமாக வந்தது. பிச்சம்மாளுக்கும்அவள் தாய்க்கும் ஆனந்த இடியதிர்ச்சி உண்டாயிற்று.

"பண்ணையிலே வேலை பார்த்துக்கிட்டுப் பண்ணைச் சொத்தைக் களவாடி விற்றவனை எப்பிடிங்க எசமான் கண்ணாலம் பண்ணிக்கிறது! எனக்கு வேண்டாம். ஒங்க காலிலே விழுறேன்" என்று குழைந்தான் தங்கப்பாளம். எசமான் விடவில்லை.

"ஊர் பூராத் தெரிந்து போச்சு, வைக்கோல் கட்டு வித்த சமாசாரம்! யாராலே! சாட்சியத்தோடே தண்டோராப் போட்டு விட்டாய் நீ! இனிமேல், எவனாவது பிச்சம்மாளுக்குத் தாலி கட்டுவானா! இதை யோசித்துப் பார்த்தாயா!"

தங்கப்பாளத்துக்கு முகம் கறுத்தது. 'ஆமாம்' என்றும் சொல்லாமல் 'இல்லை' என்றும் சொல்லாமல் தத்தளித்தான்.

"ஆகட்டும்னு சொல்லு, தம்பி!" என்று தூண்டினாள் பால்காரி.

தங்கப்பாளம் இன்னும் காலைத் தேய்த்தான்.

பால்காரி தொடர்ந்தாள். "என்ன தம்பி, பண்ணைச் சொத்து களவு போனது திரும்பி வராதேன்னு பார்க்கிறாயா! நீ பிச்சம்மாளைக் கண்ணாலம் கட்டிக்கிட்டால், தானே பண்ணைக்கு வந்து சேர்ந்துவிடும். திருட்டுப்போனது திரும்பி வரணுமானால், இது ஒன்றுதான் வழி!"

தங்கப்பாளத்துக்கு ஏதோ கண்ணைத் திறந்து விட்டமாதிரி இருந்தது. ' 'சீசந்தரனே!' என்று எண்ணினான். முகம் தெளிந்தது.

எஜமானும் பால்காரியின் 'சமயோசிதத்தை' ஒப்புக் கொண்டார்.

"மூணுகட்டு வைக்கோலுக்கு ஒரு பிச்சம்மாள் கிடைத்தால், நம்ம பண்ணைக்கு அதை விட வேறு என்ன லாபம் வேணும்! தங்க வளையல் வேறே பிச்சம்மா கையோடே வருகிறது!" என்றார்.

"எசமான் உத்தரவு" என்றான் தங்கப்பாளம். எசமான் பிச்சம்மாளைக் கூப்பிட்டார். "பிச்சம்மா! இங்கே பாரு. தங்கப்பாளத்தைக் காட்டிலும் தங்கமான மாப்பிள்ளை உனக்கு எங்கும் அகப்படமாட்டான். வைக்கோல் போரை எத்தனை கரிசனையாகக் காப்பாத்தினான் பார்த்தாயா! அதேமாதிரி உன்னையும் நல்லாக் கவனிச்சுக்கிடுவான். அவன் நம்ம பண்ணையிலேயே-வளர்ந்த பிள்ளை. நம்ம பண்ணைச் சொத்து. சில சமயம் பித்தனைமாதிரி தான் நடந்துகொள்வான். நீதான் அவனைத் துலக்கி விளக்கித் துலாம்பரமாக்கணும்" என்றார் பெரிய பண்ணையார்.

• • •


கல்யாணமெல்லாம் நடந்த பிறகு, ஒரு நாள் தங்கப்பாளம் கேட்டான். "பிச்சம்மா! எல்லாம் சரி, வைக்கோலைத்தான் பிடுங்கி கடத்திவிட்டே! முடிப் பின்னல் போட்டிருக்கேனே, அதை நீ எப்படிப் போட்டே!"

பிச்சம்மாள் பதில் சொன்னாள். "இது தானா பெரிய சந்தேகம்! நீங்க வைக்கோல் பின்னல் போடறதைத் தினசரி கவனிச்சுக்கிட்டே வந்தேன். உங்களது மாதிரி முடிப் பின்னல் போட எனக்கும் வந்துட்டுது!"

தங்கப்பாளத்துக்கு இன்னும் சந்தேகம் தீரவில்லை. "போரிலிருந்து கொஞ்சம் வைக்கோல் எடுத்துத்தாரேன், உன் கையால் முடிப் பின்னல் பின்னிக் காண்பித்தால்தான் என் சந்தேகம் தீரும்" என்றான் தங்கப்பாளம்.

"ஊரு ஒலகம், ஒங்க கையாலே, ஒரு கை வைக்கோல் வாங்கிறதுன்னா லேசா! கையைத் திருகி இழுத்துத் தள்ளிவிட மாட்டீர்களா!"

'நீ' 'நீங்க'ளாயிற்று. பிச்சம்மாள் 'நீங்கள்' போட்டுப் பேசும் பொழுது, தங்கப்பாளத்துக்கு அறுவடையாகி வந்த புது வைக்கோலின் நறுமணம் ஞாபகத்துக்கு வந்தது.



3

நான் நந்தவனத்தின் வாசல் அருகே வந்து ஒரு மரத்தின் இடுக்கு வழியே பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் பின்னால் திரும்பிப் பாராமலேயே நகரத்துக்குப் போகும் பாதையை விட்டு விட்டுக் 'கண்டோன்மெண்டு'க்குச் செல்லும் பாதையில் போகலானாள். நான் வண்டியில் ஏறி உட்கார்ந்து அதே சாலையில் மெதுவாகப் போகுமாறு டிரைவரிடம் சொன்னேன். என்னெதிரே ஒரு நாடகம் நடந்து கொண்டிருந்தது. அந்த நாடகமும் எப்படி என்கிறீர்கள்! ஏகப்பட்ட ரகசியச் சம்பவங்கள் நிறைந்ததாக அமைந்திருந்தது. 'அவள் கிடைப்பாள். அதுவும் இந்தமாதிரிக் கிடைப்பாள்!' என்று எனக்குக் கடுகளவாவது நம்பிக்கை இருந்தால்தானே! அதுவும் நான் கணக்கற்ற கதைகள் எழுதியிருக்கிறேன். அவற்றில் எவ்வளவோ உண்மையாக நடந்த சம்பவங்களைப் போலவே அமைந்திருக்கின்றன. அவற்றில் ரகசியக் குறைவு இல்லை. 'என்ன ஆகுமோ!' என்று நினைக்கக் கூடிய கட்டங்களோ, மயிர் சிலிர்க்க வைக்கும் சம்பவங்களோ இல்லாமல் இல்லை. ஆனால் இந்தக் கதையின் — அதாவது எனக்கு எதிரிலேயே நடந்து கொண்டிருக்கும் இந்தக் கதையின் — சம்பவங்கள் என்னையே திகைக்க வைப்பதாகவும், திக்கு முக்காட வைப்பதாகவும் அமைந்திருந்தன.

வருஷக் கணக்காக யோசித்து யோசித்து மூளையைக் குழப்பிக் கொண்டாலும் இம்மாதிரிக் கதையை என்னால் சிருஷ்டித்திருக்கவே முடியாது. எவ்வளவு உணர்ச்சிகரமாகவும், உற்சாகமூட்டக் கூடியதாகவும் இந்தக் கதையின் போக்கு அமைந்திருந்தது! கண்களுக்கு எதிரே சம்பவங்கள் தெளிவாக அடுக்கடுக்காக நிகழ்ந்து கொண்டிருந்த பொழுதிலும் எவ்வளவு ரகசியம் வாய்ந்தவையாக அமைந்திருக்கின்றன! நடப்பதெல்லாம் உண்மை. ஆனால் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டவையாக அல்லவா இருக்கின்றன! அவள் தன்னை என் மனைவி என்று எனக்கு எதிரிலேயே சொல்லிக் கொள்ளுகிறாள். ஆனால் 'நீ என்னுடையவள்தான்' என்று அவளிடம் என்னால் நேருக்கு நேர் சொல்ல முடியவில்லையே! இது என்ன விந்தை! நான் அவளிடம் என் மனத்தைப் பறி கொடுத்துவிட்டேன். அவள் என் கோட்பாடுகளுக்கு ஒத்தவளாக அமைந்து விட்டாளே, அப்படியிருக்கும் பொழுது நான் அவள்பால் மோகித்து மனத்தைப் பறி கொடுக்காமல் எப்படி இருக்க முடியும்! அவள் உள்ளத்திலே உணர்ச்சி இருந்தது. மூளையிலே கற்பனை இருந்தது. பேச்சிலே இனிமை இருந்தது. இம் மூன்றும் சேர்ந்தாற்போல இருக்கும் ஒரு பெண்ணைக் கதை எழுத்தாளன் ஒருவன் காதலித்தால், அது அவன் குற்றமா!

மழை இன்னும் கொஞ்சம் அதிகமாகிவிட்டது. அவள் நனைந்து கொண்டே மரத்தடியில் நின்று விட்டதை நான் வண்டியில் இருந்த வண்ணமே பார்த்தேன். நான் அந்த மரத்தடியிலே வண்டியை நிறுத்தி அவள் நின்று கொண்டிருந்த பக்கமாக இருந்த கதவைத் திறந்தேன். அவள் வண்டியில் என்னைக் கண்டதும் துணுக்குற்றாள்.

"அட, நீ இங்கேயும் வந்துவிட்டாயா!" என்றாள் அவள்.

"நீதான் என்னை இழுத்துக் கொண்டு வந்தாய்!" என்றேன் நான்.

"என் கணவர் மட்டும் இந்த சமயம் இங்கே இருந்தால் உனக்கு இப்படிச் சொல்லத் தைரியம் ஏற்படுமா!"

"அவரைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ரொம்பவும் ஆசையாக இருக்கிறது. ஒரு தடவை அறிமுகம் செய்துவைக்க மாட்டாயா!"

"முடியாது. அவரைப் பார்க்கும் தகுதி உனக்குக் கிடையாது."

"ஏன்!"

"ஏனென்றால் நீ பிறர் மனைவியுடன் அசட்டுப் பிசட்டு என்றல்லவா பேசுகிறாய்!"

"இது என் குற்றமில்லை. உன்னுடைய கணவரின் குற்றம்தான்!"

"என் கணவரின் குற்றமா! அவர் உன்னை இப்படியெல்லாம் செய்யச் சொன்னாரோ!"

"சொல்ல வேண்டுமா! பார்த்த உடனே தான் தெரிந்து விடுகிறதே; அவர் உன்னைக் கொஞ்சமும் லட்சியம் செய்வதில்லை என்று. நீ இங்கே மழையில் நனைந்து நின்று கொண்டிருக்கிறாய். அவர் அங்கே கதை எழுதுவதில் மூழ்கி யிருக்கிறார்."

"அதனால் உனக்கு என்ன!"

"எனக்கு ஒன்றும் இல்லை. இப்படி நீ நனைந்துகொண்டு போவதைக் காணச் சகிக்கவில்லை. — ஆமாம், உன் வண்டி என்ன ஆயிற்று!"

"வரவில்லை!"

"வரவில்லையா! கதை எழுதும் மும்முரத்தில் வண்டி அனுப்ப மறந்து விட்டாரோ!"

"அவருக்கு அந்தச் சமயம் வண்டி தேவையாக இருந்திருக்கலாம்."

"சரி, அப்படியானால் இப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம்!"

"வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறேனே, தெரியவில்லையா!"

"நடந்தே போய்விடுவதாக உத்தேசமோ!"

"ஆமாம்!"

"மழையில் நனைந்து கொண்டே போய் விடலாம் என்ற உத்தேசமோ!"

"நான் ஒன்றும் மெழுகால் ஆன பொம்மையில்லையே, மழையில் நனைந்து உருகிவிடுவதற்கு!"

"மெழுகு மழையில் கரைவதில்லை. நீ தேனால் ஆக்கப்பட்டவள் போலக் காணப்படுகிறாய். மழையில் தேனின் இனிமையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் கரைந்து ஓடிவிடுமே! நான் ஒன்று சொல்லுகிறேன், கேட்கிறாயா!"

"என்ன!"

"என் வண்டியில் உட்கார்ந்துகொண்டு நீ ஏன் உன் வீட்டுக்குப் போய்விடக் கூடாது!"

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்!"

"அதனால் கெடுதல் ஒன்றும் இல்லையே!"

"கெடுதல் ஒன்றும் இல்லைதான். இருந்தாலும் உன் வண்டியில் போகவேண்டும் என்று எனக்கு என்ன தலைவிதியா!"

"அப்படியானால் என் வண்டியில் வருவதற்கு உனக்குப் பயமாயிருக்கிறதோ!"

"பயமா! யாருக்கு! யாரிடத்தில்!"

"உனக்குத்தான்! என்னிடத்தில்!"

"உன்னிடம் எனக்கு என்ன பயம்!"


"அப்படியானால் என் வண்டியில் ஏன் உட்கார மாட்டேன் என்கிறாய்!"

"உனக்கு நல்லதுக்குக் காலம் இல்லை. இதெல்லாம் என் கணவருக்குத் தெரிந்தால் உன்னை இலேசில் விடமாட்டார்!"

"அதெல்லாம் பிற்பாடு பார்த்துக்கொள்ள வேண்டிய விஷயம் அல்லவா! அதைப்பற்றி இப்பொழுது என்ன கவலை! உனக்குக் குளிர் நடுக்குகிறது. ஒரே கேள்வி. நீ வண்டியில் உட்காரப் போகிறாயா, இல்லையா!"

மழையில் நனைந்ததும், குளிர் காற்று வீசியதும் சேர்ந்து அவள் உடல் முழுவதும் குளிர்த் தந்தி பேச ஆரம்பித்து விட்டது. ஆகவே, அவள் அதற்கு மேல் ஒன்றும் பேச்சுக் கொடுக்காமல் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு விட்டாள்.

"எந்தப் பக்கம் போக வேண்டும்!" என்று நான் அவளைக் கேட்டேன்.



"கடைத்தெருவில் இறக்கிவிடு. அங்கிருந்து நான் வேறு ஏதாவது வண்டி வைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய்விடுகிறேன்."

"என் வண்டி வீட்டுவரைக்கும்கூட வரும்!"

"உன் வண்டி குதிரை வண்டியில்லை என்பது எனக்குத் தெரியும்; குதிரை கொள்ளை அடித்துக் கொண்டு வீட்டுக்கு இழுப்பதற்கு! இருந்தாலும் நான் வீட்டுவரைக்கும் உன் வண்டியில் போக விரும்பவில்லை."

"ஏன்!"

"என் கணவர் உன்னுடன் என்னைப் பார்த்து விட்டால்......!"

"நீ சொல்லுவது நியாயந்தான். அப்படியானால் தெரு மூலையில் இறங்கிவிடேன்."

"சரி. வண்டியை விடச் சொல்லு!"

"விலாசம் என்ன!"

"உனக்கு இதுகூடத் தெரியாதா!"

"நான்தான் பலவந்த தாம்லேயை இது வரை பார்த்ததில்லை என்று உன்னிடம் முதலிலேயே சொல்லி விட்டேனே!"

"உன் டிரைவருக்குத் தெரிந்திருக்கலாம் அல்லவா!"

"கேட்டுப் பார்க்கிறேன்!"

நான் டிரைவரிடம் விலாசம் கேட்கும் சாக்கை வைத்துக்கொண்டு கீழே இறங்குவதாகப் பாசாங்கு செய்தேன். அதற்குள் அவள் கையிலிருந்த புத்தகத்தைத் திறந்து என் விலாசத்தைப் பார்த்துக் கொண்டு விட்டாள். நான் காரில் மறுபடியும் ஏறி உட்கார்ந்ததும், "கேட்டாயா!" என்று அவளே முந்திக்கொண்டு என்னைக் கேட்டாள்.

"ஓ! கேட்டு விட்டேனே!" என்று நான் பதில் அளித்தேன்.

"என்னவாம்!"

"23. புதவார் பேட்டையாம்!"

"உன்னைவிட உன் டிரைவர் கெட்டிக்காரன்போலத் தோன்றுகிறது."

"என்னிடம் வேலைபார்க்க வருவதற்கு முன்னால் அவன் அவரிடம்தான் வேலைபார்த்து வந்தானாம்!"

"அவரிடம் வேலைபார்த்து வந்தானா! எத்தனை நாட்களுக்கு முன்பு!"—அவள் துணுக்குற்று இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டாள்.

"இரண்டு வருஷத்துக்கு முன்பு வேலை பார்த்ததாகச் சொல்லுகிறான். அவன் அங்கே உன்னைப் பார்த்ததே இல்லையாமே!"

"நான்...நான் அப்பொழுதெல்லாம் அங்கே இல்லை. இப்பொழுது தானே சில மாதங்களாக இருக்கிறேன். எனக்கும் அவருக்கும் கல்யாணம் ஆகியே மாதக் கணக்கில் தானே ஆகிறது!"

"ஓகோ! அப்படியா!"

கொஞ்ச நேரம் வரை நாங்கள் இருவரும் பேசாமலே இருந்தோம். நகரம் இன்னும் கூப்பிடு தூரத்தில் தான் இருந்தது. ஆகவே, அதற்குள் அவளுடன் இன்னும் கொஞ்சம் பேச்சுக் கொடுத்துப் பார்க்க விரும்பினேன். "ஆமாம், உனக்கு உன்னைப் பற்றித் தெரியுமா!" என்று அவளைக் கேட்டேன்.

"தெரியாதே! என்னைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமோ!" என்று கேட்டாள் அவள்.

"நீ ஒரு விசித்திரப் பிறவி!"


"அப்படியா!"

"ஆமாம், உன்னை மனைவியாக அடைந்த ஆசிரியர் தாம்லே மகா அதிர்ஷ்டக்காரர் தான்!"

"ஆனால் எனக்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா! அவராவது என்னை ஏற்றுக் கொள்ளவாவது!" என்று சொல்லி அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். அவள் தன் நிலையை மறந்து விட்டாள் போலும்!

நான் அவளுக்கு ஆத்திரம் ஊட்ட எண்ணி, "அவராவது, என்னை ஏற்றுக் கொள்ளவாவது என்கிறாயே, அதற்கு என்ன அர்த்தம்! உன்னை என்றைக்குக் கைப்பிடித்தாரோ, அன்றைக்கே





ஸ்திரீ :—அப்பா, கான்ஸ்டேபிள்! அதோ குண்ணமாய்க் குண்டாக வருகிறானே, அவன் என்னைப் பார்த்து, 'நீ பெண் பிள்ளையா அல்லது ஸினிமா நடிகையா?' என்று கேட்கிறான்!

போலீஸ்காரன் :—அவன் கிடக்கிறான், குண்டன்! நீ என்னிடம் உண்மையைச் சொல்லிவிடு!

அவர் உன்னை ஏற்றுக் கொண்டு விட்டார் என்றுதானே அர்த்தம்!" என்றேன்.

அவள் தூக்கத்திலிருந்து திடுக்குற்று விழித்தவள் போலத் திடுக்கிட்டாள்.

"என்ன சொன்னேன் நான்! ஏற்றுக் கொள்ளுவது என்று! இல்லே, இல்லே, நான் சொல்ல வந்தது என்னவென்றால்...என்னவென்றால்......"

"காதலிக்க வேண்டுமே என்று தானே!" என்று கேள்விக் குறியில் அவள் சொல்ல வேண்டிய வாக்கியத்தைப் பூர்த்தி செய்தேன்.

"ஆமாம், ஆமாம். இதைத் தான் நானும் ....நானும் சொல்ல விரும்பினேன்."

"அப்படியானால் அவர் உன்னைக் காதலிக்கவில்லையா!" என்று கேட்டேன் நான்.

"காதலிக்காமல் என்ன! காதலிக்கிறார். நான் சொல்ல விரும்பியது என்னவென்றால், அவர் என்னை உயிருக்குயிராகக் காதலிக்க வேண்டும் என்றுதான்!" என்று என்னிடம் என்னவோ சொல்லி மழுப்ப முயன்றாள்.

"அது போகட்டும்; உன் கதை எழுத்தாளரைப் பற்றி எனக்கு விவரமாகச் சொல்ல மாட்டாயா!" என்று கேட்டேன்.

"என்ன சொல்ல வேண்டும்!"

"அவர் இளைஞரா!"

"ஆம்"

"அவர் ரொம்ப அழகாக இருப்பாரோ!"

"ஆமாம். ரொம்ப ரொம்ப அழகாக இருப்பார்."

"நானும் கதை எழுத்தாளனாக இருந்தால்......!"

"என்ன செய்வாயாம்!"

"பிச்சை வாங்குவேன்!"

"என்னத்தை!"

"காதலை!"

"யாரிடம்!"

"உன்னைப் போன்ற அழகியிடம்!"

அவள் இலேசாகச் சிரித்து, "நல்ல ஆள், நீ! சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறாயே! ஆமாம், நீயும் ஏன் கதை எழுதக் கூடாது!" என்றாள்.

"எழுத வந்தால் தானே!" என்றேன்.

"கதை எழுதுவது என்ன, பெரிய செப்பிடு வித்தையோ! முயன்றால் எதுவும் இலகுவாக வந்து விடும். நீ பேசும் பேச்சைப் பார்த்தால், நீயும் ஒரு நல்ல கதை எழுத்தாளனாக ஆகலாம் என்று தான் தோன்றுகிறது!"

"நிஜமாக நீ அந்தரங்க சுத்தியாகத்தான் சொல்லுகிறாயா!"

"ஆமாம், அந்தரங்க சுத்தியாகத்தான் சொல்லுகிறேன்!"

"சரி, முயற்சி செய்து பார்க்கிறேன். அதற்கு அப்புறம் உன் உள்ளத்தில் எனக்குக் கொஞ்சம் இடம் தருவாயா!"

"தாராளமாக!" என்றவாறே முன் பக்கத்து மெத்தையில் தன் தலையைப் புதைத்தாள்.

"ஆனால்......உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதே!"

அவள் சட்டென்று தலையைத் தூக்கினாள். பதில் ஒன்றும் சொல்லாமல் வெளிப் புறத்தை எட்டிப் பார்த்தாள். "அட! புதவார்பேட்டை வந்து விட்டாற் போலிருக்கிறதே! வண்டியை நிறுத்தி என்னை இறக்கிவிட்டேன்!" என்றாள்.

"இங்கே இறங்கி என்ன பிரயோஜனம்! இதோ எதிர்த்தாற்போலத்தான் 28-ம் நம்பர் வீடு வந்து விட்டதே!" என்றேன்.

வண்டி 28-ம் நம்பர் வீட்டுக்கெதிரே வந்து நின்றது.

"இது தானே உன் வீடு!" என்று நான் வண்டியிலிருந்து இறங்கியவாறே கேட்டேன்.

"இரு!" என்று சொல்லிவிட்டு அவள் வாசற்படி வரைக்கும் சென்றாள். என் பெயர் பொறித்திருந்த பலகையைப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து, "ஆமாம்; இதுதான். நீ போய்விட்டு வா!" என்றாள்.

"நீ உன் வீட்டையே மறந்து விடுவாய் போலிருக்கிறதே!" என்றேன்.

"இல்லே. இருட்டாயிருக்கிறதல்லவா!" என்றாள் அவள்.

"எனக்கு இந்த வீட்டுக்கு எப்பொழுதோ வந்ததாக ஞாபகம் இருக்கிறது."

"அப்படியா!"

"ஆமாம்!"

"எப்போ!"

"எத்தனையோ தடவை வந்திருக்கிறேன்."

"எதற்காக!"

"திருடுவதற்காக!"

"என்ன ! திருடுவதற்காகவா !" அவள் மிகக் கடுமையான குரலில் கேட்டாள்.

"ஆமாம் !"

"நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!"

"நான் ஒரு திருடன் !"

அவள் 'கலகல' வென்று நகைத்தாள். "மன்னிக்க வேண்டும். என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. நீயாவது திருடனாவது! என்னைப் பைத்தியமாக அடித்து விடுவாய் போலிருக்கிறதே! பார்த்தாலே உன் முகம் திருடன் முகம் போலத் தானே இருக்கிறது !" என்றாள்.

"ஆமாம், நீ சொல்லுவதைப் பார்த்தால் திருடன் முகத்தில் 'திருடன்' என்று எழுதி ஒட்டியிருக்கும் என்றல்லவா தோன்றுகிறது !"

"எழுதி ஒட்டியிருப்பதில்லை. ஆனால் அழகான ஆடை உடுத்தி ஆடம்பரமாக இருக்கும் ஒருவனை யாராவது திருடன் என்று சொல்லுவார்களா ! கறுக்காகவும் கண்யமாகவும் பேசும் நாகரிக மனிதனை யாராவது திருடன் என்று சொல்லுவார்களா !"

"நாகரிகமா ! திருடர்கள் எல்லாம் நாகரிகம் அற்றவர்கள் என்பது உன் எண்ணமோ ! இல்லை, நாகரிகமாக இருக்கும் மனிதர்கள் நாணயஸ்தர்களாகவே இருப்பார்கள் என்பது உன் அபிப்பிராயமோ ! இரண்டும் தவறு. அப்படியெல்லாம் எண்ணாதே ! இரண்டு வகையினரும் திருடர்களாயிருக்கலாம். ஆனால் இரண்டு பேருடைய திருட்டிலும் வித்தியாசம் இருப்பது உண்மை. நாகரிகத் திருடன் நாகரிக மனிதர்களிடம் நாகரிகமாக நாகரிகப் பொருள்களைத் திருடுகிறான். அநாகரிக மனிதனிடம் அநாகரிகத் திருடன் அநாகரிகமாக அநாகரிகப் பொருள்களைத் திருடுகிறான். கடைசியில் பார்க்கப் போனால் திருட்டு என்பது ஒன்றுதான் !" என்றேன்.

"ஆமாம், நீ இதுவரை எத்தனை பொருள்களைத் திருடியிருக்கிறாய் !"

"ரொம்ப அதிகமில்லை !"

"இருந்தாலும் ஒரு உத்தேசமாகச் சொல்லேன் !"

"இந்த உடை இருக்கிறதே, இதை நான் உன் வீட்டில்தான் திருடினேன் !"

"என்ன !"

"ஆமாம். இது உன் கணவருடைய உடையாக இருக்கும் என்று எண்ணுகிறேன். என் ஊகம் பிழையாகவும் இருக்கக் கூடும். இந்த உடை பிறருடையதாகவும் இருக்கலாம். ஆனால் நான் திருடினது இந்த வீட்டில் தான்; ஒருவேளை நான் திருடின சமயம் நீ இந்த வீட்டில் இல்லையோ, என்னமோ !" என்கிறேன்.

"சரி, அப்புறம் !"

"இந்த வண்டியும் திருடினதுதான் !"

"இன்னும் ஏதாவது !"

"இதையெல்லாம் சொல்லிக் கொண்டே போவதற்கில்லை !"

"இருந்தாலும் இன்னும் இரண்டொரு பொருள்களைப் பற்றிச் சொல்லு !"

"சொல்லாவிட்டால் விடமாட்டாய் போலிருக்கிறதே !"

"சொல்வதற்குச் சந்தோசமாயிருக்கிறதா!"

"இல்லை, பயமாயிருக்கிறது !"

"பயப்படுவானேன் !"

"திருட்டு வெளிப்பட்டு விட்டால் தண்டனையல்லவா அநுபவிக்க வேண்டும் !"

"நான் திருட்டைப்பற்றி வாய் திறந்து வெளியிடமாட்டேன். இது சம்பந்தமாக நான் உனக்கு உறுதிமொழி அளிக்கவும் தயார்."

"நிஜமாகவா !"

"என் சொல்லில் உனக்கு நம்பிக்கை உண்டாகவில்லையா !"

"நான் ஒரு மனைவியைத் திருடிவிட்டேன் !"

"என்ன ! மனைவியையா !" என்று கேட்டு விட்டுக் 'கடகட' வென்று சிரித்தாள் அவள்.

"ஆமாம். அவள் என் மனைவியில்லை. ஆனால் என் மனைவியாகி விட்டாள் !"

"நீ ஒரு அதிசயப் பிரகிருதி ! இனிமேல் ஒன்றும் திருடாதே !"

"அதெப்படிச் சொல்ல முடியும் !"

"சரி, நீ போய்விட்டு வா. நான் உள்ளே போகிறேன். என் கணவர் வந்து விடுவார் !" என்றாள் அவள்.

"நீ உள்ளே போனதும் நான் போகிறேன்!" என்றேன் நான்.

கதவு மூடியிருந்தது. அவள் கொஞ்ச நேரம் நின்று யோசனை செய்தாள். "வேலைக்காரனைக் கூப்பிடேன். கதவைத் திறக்கிறான் !" என்றேன் நான்.

"வேண்டாம். என்னிடத்தில் சாவி இருக்கிறது. நானே கதவைத் திறந்து கொள்ளுகிறேன். நீ போய் வா !" என்றாள் அவள்.

"சாவி இருக்கிறதா, இல்லையா என்று பார் !" என்றேன். அவள் தேடிப் பார்த்து விட்டு, "அட ரௌரவசாரமே ! சாவி எங்கேயோ விழுந்து கெட்டுத் தொலைந்து விட்டதே !" என்று திகைத்தாள்.

"இந்தா ! என் சாவியைப் போட்டுத் திறந்து பார். ஒருவேளை இது திறந்தாலும் திறந்து விடும் !" என்றேன்.

"உன்னிடம் இந்தப் பூட்டுக்குச் சாவி எங்கே இருக்கப் போகிறது !" என்று கேட்டாள் அவள்.

"திருடனிடத்தில் சாவிக்கு என்ன பஞ்சம்!" என்று சொல்லியவாறே, நான் என் சாவியைப் போட்டுப் பூட்டைத் திறந்தேன். அவள் உள்ளே சென்று, "உனக்கு ரொம்ப ரொம்ப வந்தனம் !" என்றாள்.

"இந்தச் சாவியை நீயே வைத்துக்கொள். உனக்கு இது உபயோகப் படலாம்" என்றேன். அவள் சாவியை வாங்கிக்கொண்டாள்.

"இனிமேல் அடிக்கடி உன்னை இங்கே பார்க்கலாம் அல்லவா !" என்றேன்.

"ஏன் ! திருட வருவாயோ !"

"அப்படித்தான் யோசனை !"

"திருட வந்தால் இங்கிருந்து வெறுங்கையுடன்தான் போகவேண்டியிருக்கும் !"

"நான் ஒன்றும் அப்படி ஏமாந்த சோணகிரி அல்ல !" என்றேன்.

அவள் சிரித்தாள். அடுத்த கணம் கதவைப் பட்டென்று சாத்திக்கொண்டு உள்ளே போய் விட்டாள். வீடோ என்னுடையது. ஆனால் நானே அல்லவா அதற்குள் போக முடியவில்லை ! இந்தக் கன்றாவியை என்னவென்று சொல்லுவது !

(தொடரும்)

குழந்தைச் சண்டை

துரோணன்

வீதியிலிருந்து கிளம்பிய பூகம்ப சத்தத்தைக் கேட்டுப் பரபரப்புடன் வெளியே ஓடிவந்தேன்! எதிர் வீட்டுச் சிவசாமி ஐயரை நான்கு பேர்கள் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தனர். தலைவிரி கோலத்துடன் அவர் உறுமிக் கொண்டிருந்தார். அவரது கையிலிருந்த கடப்பாரையோ — எதிரியின் தலையை ருசி பார்ப்பதற்காகத் துடித்துக் கொண்டிருந்தது. மற்றொரு பக்கத்திலோ — பஞ்சாட்சர சர்மாவை இரண்டு பேர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டிராவிட்டால் அவரது போக்கினால் 'என்ன நடந்து விடுமோ' என்று தோன்றியது. அவரது கையிலிருந்த மண்வெட்டி சிவசாமி ஐயரை நோக்கிப் பாய்வதற்குத் தயாராக இருந்தது!

"ஏலே! அயோக்கியப் பயலுக்குப் பிறந்த பிள்ளை எப்படியிருக்கும்?—உன் பிள்ளை செய்த காரியத்தை வந்து பாருடா! என் குழந்தைக்கு நெற்றி முழுதும் வீங்கிப் போயிடுத்துடா!" என்று கூவிக்கொண்டிருந்தார் சிவசாமி ஐயர்.



"யாரைப் பார்த்துடா சொன்னாய்? அயோக்கியப் பயலே? பேமானிப் பயலே! மூடிச்சவிழ்க்கிற பயலே! உன் அயோக்கியத்தனமெல்லாம் தெரியாமலா இருக்கிறது? ஊர் சிரிக்கிறதேடா!". இது பஞ்சாட்சரத்தின் எதிர்ப்பிரயோகம்.

"உன்னைப் பார்த்துத்தாண்டா ஊர் சிரிக்கிறது. பிச்சைக்காரப் பயலே!"

"ஏலே! உன்னை ஒரு கை பார்க்காமல் விட்டேன்னா என்பேரு ......"

"உன் பூச்சிக்கெல்லாம் நான் பயந்தவனில்லேடா: உன் தலைவிதியை இன்னைக்கே தீர்த்து விட்டு மறுகாரியம்!......"

விஷயங்கள் இந்த ரீதியில் போய்க் கொண்டிருந்தன. நான் வாசற்புறம் வந்து நிற்பதை என் சாரதா சகிக்கவில்லை! "பேசாமல் உங்கள் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போங்களேன்; நீங்க வேறே இதிலே ......" என்றாள்.

"சபாஷ்! சமய சஞ்சீவிபோல நல்ல சமயத்துக்குத்தான் புத்தி சொல்றே! தெரியாமலா 'வீட்டுக்கொரு பெரியவா, பெருந்தலை' வேணுங்கறது?—போகட்டும்; இதன் விருத்தாந்தம் என்ன ......?" என்றேன். (உள்ளுக்குள்ளே போய்க் கொண்டேதான்!)

"ஐயோடி! என்ன வேண்டியிருக்கிறது? குழந்தைகளாம்—குழந்தைகள்! என் குழந்தைகளாக இருந்தால் ......"

"ஐயோ—என் பத்தினித் தங்கமே! உன் விஷயம்தான் தெரிந்திருக்கிறதே! அது சரி. இந்த மகா யுத்தம் எப்படி மூண்டது? அதைச் சொல்லித் தொலைக்காமல் ஏதேதோ பேசிக்கொண்டே போகிறாயே!"

"எப்பவும் உங்களுக்கு இந்தத் திரிசமப் பேச்சு மாத்திரம் குறைகிறதில்லை.—பேச்சைப் பாரு, பேச்சை!" என்று கூறிக் கொண்டே அவள் என் ஆர்வத்தைச் சோதனையிட்டாள்.

"அடாடா! உன்னிடமிருந்து விஷயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்குள்ளே வாசலிலே இருக்கிற கூட்டமெல்லாம் இங்கே வந்துவிடும் போலே இருக்கு—?" என்று நான் மீண்டும் மன்றாடிய பின்னர்தான்

அவனிடமிருந்து விஷயத்தை ஒருவாறு தெரிந்து கொள்ள முடிந்தது!

‘சிவசாமி ஐயருக்கு நான்கு வயதில் ஒரு பெண். அடுத்த வீட்டுப் பஞ்சாட்சர சர்மாவுக்கும் ஐந்து வயதில் ஒரு புத்திரசிகாமணி, இந்த இரண்டு வாண்டுகளும் உறவாடின. முடிவில் சிறு குழப்ப மேற்பட்டிருக்கிறது; பின்னர், கையிலிருந்த திருப்பதிப் பொம்மையால் அந்தப் பயல் அவளது தலையை இலேசாகப் பதம் பார்த்திருக்கிறான். இந்தப் பெரிய காரியத்திற்காக அந்த நீலி ளைக் கட்டியிருக்கிறான்! எதிர்ப்புறத்தில் வேலி கட்டிக் கொண்டிருந்த சிவசாமி கடப்பாரையும் கையுமாக விசாரணைக்கு வந்திருக்கிறார். இந்தக் காட்சியை நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்த பஞ்சாட்சரத்தின் பெண் தெய்வம் — ஓடோடியும் சென்று கொல்லைப்புறத்தில் செடி கட்டிக் கொண்டிருந்த தன் பர்த்தாவை அழைத்திருக்கிறாள். பின்னர்தான், வாசற்புறத்தில் இந்த மகா யுத்தம்—’

ஒரு வழியாக இத்யாதி விஷயங்களை என் சகதர்மிணியின் திருவாக்கிலிருந்து பெறுவதற்குள் என்பாடு திணறி விட்டது. இவ்வளவையும் கூறிவிட்டு “நீங்கள் வேறே அங்கே போய் மத்தியஸ்தத்துக்கு நிற்காதீர்கள்; அப்புறம் ......!” என்று எச்சரித்தாள். இருந்தாலும் என் சக்தி எனக்குத் தெரியாதா? ஆனால், கண்ணுக்குக் குளிர்ச்சியான இந்தக் காட்சிகளைப் பார்க்காமலிருக்க யாருக்குத்தான் மனம் வரும்? ஜன்னல் வழியாக என் பார்வையைச் செலுத்தினேன்.

கட்சிப் பிரதி கட்சிகளெல்லாம் வலுத்தன. இரண்டு மணி காலம் நடந்த இந்தப் போரை ஒரு வழியாக விலக்கினர் ஊரார். ஆனால் அவர்கள் இருவரும் வைரிகளாயினர். கிராமத்துப் பழக்கப்படி பாதிப்பாதி அநுதாபங்கள் இருவர் சார்பிலுமிருந்தன. முடிவாக, இருவர் வீடுகளிலுமுள்ள ஸ்திரீ தெய்வங்களின் வாக்குகள் ஏக காலத்தில் முழங்கிக் கொண்டிருந்தன.

நாள் இரண்டு பட்டு மூன்று தினங்களாகி விட்டன. கடப்பாரையினால் தன் மண்டையை உடைக்க வந்ததாகத் தகுந்த சாட்சிகளுடன் கும்பகோணத்து மாஜிஸ்



ஸ்ட்ரேட்டுக் கோர்ட்டில் ஸ்ரீமான் பஞ்சாட்சரம் மனுச் செய்திருப்பதாக ஒரு வதந்தி.

சிவசாமி ஐயரோ, பஞ்சாட்சரம் மண்வெட்டியினால் தம்மைக் கொலை செய்ய வந்ததாக ஆயிரம் சாட்சிகளைத் தயாரித்துக் கொண்டிருக்காராம்! இதையெல்லாம் என் வீட்டு 'ரேடியோ' மூலம் நான் அறியாமலிருக்க முடியுமா?

இன்று சாயந்திரம் குளத்தங்கரைப் பக்கம் கிளம்பினேன். வந்தது எனக்கு ஆபத்து! சிவசாமி ஐயர் எதிர்ப்பட்டு விட்டார்.

“என்ன, காலைத்து காளாக வரில் இல்லையோ?—” என்று கேட்டுக்கொண்டே என்னைத் தொடர்ந்தார்.

“அதெல்லாமில்லை. உடம்பு சரியில்லை” என்று புளுகினேன். அப்பா! வழி நெடுக இரண்டு மணி நேரம் மனிதன் உலுப்பித் தீர்த்து விட்டார்! அவரது வார்த்தைகளிலிருந்து. 'இனி எது! வர் இப்படித்தான்' என்று தீர்மானித்துக் கொண்டேன்.

தெருவுக்குள் நாங்கள் திரும்பும்போது அநேகமாக இருட்டி விட்டது. சிவசாமி எதிர்த் தோட்டத்திற்குள் நுழைந்தார். நானும் கால்களைக் கழுவிக் கொண்டு வரலாமென்று அவரைத் தொடர்ந்தேன்.

கிணற்றின் சமீபமாக—தென்னை மரத்தடியில்—அழகான மழலைச் சொற்களுடன் ஒரு நாடகம் நடந்து கொண்டிருந்தது!

“அடி பேபி, நெற்றியில் ரொம்ப வலிக்கிறதாடி? ஐயோ பாவம் — இரு, இந்தக் கையை நானே வைச்சு சக்கறேன்; இனிமே என்மேலே உனக்குக் கோபம் இல்லியே? ஊம் —” என்று கூறிக் கொண்டே எதிரிலிருந்த குழந்தையின் முகத்தைப் பிடித்துக் கொண்டிருந்தான் — அந்த வாண்டுப்பயல்.

“இல்லேடா ரமணி! நீதானே பொம்மையைக் கொடுக்க மாட்டேன் என்று எடுத்துக் கொண்டாய்? நானும் எங்கப்பாகிட்டே சொன்னதுக்காக நீ கோவிச்சுக்க மாட்டியோல்லியோ?—” என்று கூறிக் கொண்டு அவனது கரத்தைப் பிடித்துக் கொண்டிருந்தாள் அந்த கிலி!

“உங்கப்பாதான் 'மம்புட்டி'யாலே வெட்ட வந்தாரே—”

“உங்கப்பாதானே முதல்லே கடப்பாரையாலே அடிக்க வந்தார்?—”


“ஊம்...வந்து அவர்கள் ரெண்டு பேரும் பைத்தியம்!” இப்படிக் கூறி விட்டுத் தன் மழலைத் தொனியுடன் சிரித்தாள் அந்தக் குழந்தை. வாண்டுப் பயலும் சிரித்தான்!

நான் சற்றுத் திரும்பினேன். சிவசாமி ஐயரின் கண்களில் நீர் நிறைந்துவிட்டது. ஒரு நொடியில் அவருக்கு என்ன தோன்றிற்றோ — என்னை நிறுத்திவிட்டு வீதிப் பக்கம் வேகமாக ஓடினார். அவர் திரும்பும்பொழுது — பஞ்சாட்சரமும் ஒன்றும் புரியாது, திகைத்துக் கொண்டே தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்.

“ஓய்! நீரும் நானும் தான் வைரிகள்— இல்லை, பைத்தியக்காரர்கள்! இங்கே பாரும் இந்தக் காட்சியை” என்றார் சிவசாமி அவரது கரங்களைப் பிடித்துக் கொண்டே.

பஞ்சாட்சரத்தின் முகத்திலும் உண்மையிலேயே வெட்கம் பிறங்கி நின்றது!

“போங்காணும், வெட்கங்கெட்ட மனிதரே! பெண்ணைப் பெத்த மனிதருக்கு வாய் வேறயா?”—என்று கூறிக் கொண்டே முகத்தைத் திருப்பாமல் நழுவி விட்டார்!



“என்ன இது! நூதனமான பிச்சை எடுக்கிறான்!”

“நூதனம் என்ன? மாடியில் குடியிருப்பவர்களிடம் பிச்சை யெடுக்க ஒரு வழி கண்டு பிடித்து விட்டான், அவ்வளவு தான்!”



2. கல்லைப் போட்டான்!

சுரங்க மாளிகை அமைதியாக இருந்தது. வீரசேனனும் அவன் தாயும் சத்தம் வந்த திக்கை நோக்கிச் சென்றனர். ஒருவரையும் காணவில்லை. வீரசேனன் மாளிகையெல்லாம் சுற்றிப் பார்த்தான். யாரும் தென்படவில்லை. வீரசேனனின் தாயார் பிரமை பிடித்தவள் போல நின்று கொண்டிருந்தாள். வீரசேனன் "ஒருவரையும் காணவில்லையே, அம்மா!" என்றான்.

"வீரசேனா! அந்தக் குரல் உன் தந்தையின் குரல் போலவே இருந்தது. எனக்கு ஒரே ஆச்சரியமாக இருக்கிறது" என்றாள்.

வீரசேனனுக்கு ஒன்றும் புரியவில்லை. மௌனமாக நின்று கொண்டிருந்தான். பிறகு "அம்மா! நீங்கள் அப்பாவைப் பற்றிய கதையைச் சொல்லிக்கொண்டிருந்தீர்கள் அல்லவா? அதனால் அப்படித் தோன்றியிருக்கும்" என்றான்.

வீரசேனனின் தாய் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு "அது இருக்கட்டும். நீ சாப்பிடலாம் வா!" என்று சொல்லி மாளிகைக்குள் அவனை அழைத்துச் சென்றாள்.

வீரசேனனும் தன் தாயைத் தொடர்ந்து சென்றான்.

அன்று அவனுக்குச் சாப்பாடே செல்லவில்லை. மார்த்தாண்ட மன்னரைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டான். கடைசியில் "சரி, அம்மா, நான் காலைக்குக் கட்டாயம் பணம் சம்பாதிக்க வெளி நாடுகளுக்குச் செல்லப் போகிறேன்" என்று சொன்னான்.

"அதுதான் அப்பா நல்லது. 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்று ஒளவை மூதாட்டியார் சொல்லியிருக்கிறார் அல்லவா? நாம் கௌரவமாக இருக்க வேண்டும் என்றால், நம்மைப் பிறர் மதிக்கவேண்டுமானால் நிறையப் பொருள் திரட்டவேண்டும்" என்றாள்.

"ஆகட்டும் அம்மா! அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு வீரசேனன் படுக்கை அறைக்குச் சென்றான். காலை நீட்டிக்கொண்டு கட்டிலில் படுத்தான். கண்ணை மூடிக்கொண்டான். அவனுக்குத் தன் தந்தையைப் பற்றிய நினைவு வந்து கொண்டே இருந்தது. தாயார் அவரைப் பற்றிச் சொன்னவைகளை எல்லாம் நினைத்துக் கொண்டே தூங்கி விட்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் "வீரசேனா!" என்ற சத்தம் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தான். சற்று முன் அவன் தாயுடன் பேசிக் கொண்டிருக்கும் போது கேட்ட அதே குரல்தான்! சுற்று முற்றும் பார்த்தான். கட்டிலை விட்டு இறங்கி அறைக் கதவுப் பக்கம் பார்த்தான். உருவமற்ற ஒரு நிழல் உருவம் ஒன்று தெரிந்தது. அது பார்ப்பதற்கு மனித உருவம்போலிருந்தாலும் யார் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அந்த உருவத்தின் கை மட்டும் நன்றாகத் தெரிந்தது. நல்ல பலம் பொருந்திய கை. அதை உற்றுப் பார்த்தான்.

"என்னுடன் வா!" என்று சொல்லி அந்த உருவம் கையை ஆட்டியது.

வீரசேனன் அதன் பின்னாலேயே சென்றான். அந்த உருவம் சுரங்க



மாளிகைக்குப் பின்னால் உள்ள தோட்டத்துக்குச் சென்றது. அங்கு தரையோடு தரையாக இருந்த கருங்கல் பாறையைத் தன் பலம் பொருந்திய கையால் நகர்த்தியது. பாறை நகர்ந்தவுடன் அங்கு ஒரு சுரங்கப் பாதை தெரிந்தது. அதில் கீழ் நோக்கி இறங்குவதற்கு வசதியாகப் படிகள் இருந்தன. "வீரசேனா! என்னுடன் இந்தப் படியில் இறங்கி வா!" என்று சொல்லிவிட்டு அந்த உருவம் முன்னால் இறங்கியது. வீரசேனனும் அந்த உருவத்துக்குப் பின்னால் இறங்கினான். படிகளில் எங்கிருந்தோ வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. ஜிலுஜிலு வென்று காற்றும் அடித்துக் கொண்டிருந்தது. பூமிக்கு அடியில் வெளிச்சமும் காற்றும் எப்படி வரும்? என்று வியந்து கொண்டே அந்த நிழலுருவத்துடன் சென்று கொண்டிருந்தான்.

கொஞ்ச தூரம் இறங்கியதும் படிகள் நின்றுவிட்டன. எதிரில் ஒரு பெரிய சுவர் இருந்தது. அவனுக்கு வழி காட்டிச் சென்ற நிழல் உருவம் அந்தச் சுவரில் எங்கேயோ கையை வைத்தது. என்ன ஆச்சரியம்! உடனே அந்தச் சுவரில் ஒரு வழி உண்டாகியது. அதைப் பார்த்து வீரசேனன் ஆச்சரியப் பட்டுக் கொண்டிருந்தான் அந்தச் சமயத்தில் "வா! சீக்கிரம், வந்துவிடு. இல்லையேல் கதவு மூடிக் கொள்ளும்" என்றது அந்த உருவம். வீரசேனன் வாய் பேசாமல் அந்த வழியைக் கடந்து சென்றான். அடுத்த கணம் "ஐயோ" என்று அலறிக் கொண்டு நின்றுவிட்டான். அவன் உடல் பயத்தால் கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தது.

எதிரில் பயங்கர யாளி ஒன்று வாயைப் பிளந்து கொண்டிருந்தது. அதனுடைய வேல் போன்ற கூரிய பற்களும் அனல் கக்கும் கரிய பெரிய கண்களும் விகாரமான முகமும் பார்க்க மிகப் பயங்கரமாக இருந்தது. இதற்கு இரண்டு புறங்களிலும் கூரிய முட்கள் நிறைந்த இரண்டு தூண்கள் இருந்தன. அதன் மூலைகளில் திகுதிகு வென்று பந்தம் போல நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த வீரசேனன் சட்டென்று வந்த வழியே போகத் திரும்பினான். என்ன ஆச்சரியம்! அதற்குள் அவன் வந்த வழி தானாகவே மூடிக் கொண்டது. மிகுந்த அச்சத்துடன் வீரசோனன் தன்னை அழைத்து வந்த அந்த உருவத்தை நடுங்கி கொண்டே பார்த்தான்.

"பயப்படாமல் என் பின்னாலேயே, வா!" என்று சொல்லி அந்த உருவம் யாளியின் வாய்க்குள் புகுந்து பயமில்லாமல் சென்றது. வீரசேனனும் அதைப் பின்தொடர்ந்து சென்றான். கஷ்டத்துக்கு மேலே கஷ்டம் வரும் என்பதுபோலக் கொஞ்ச தூரம்சென்றதும் அங்கு ஒரு புலி வாலை ஆட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தது. அதைப் பார்த்தவுடன் வீரசேனனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. முன்னால் போகவும் பயமாக இருந்தது. பின்னால் திரும்பி விடவும் பயமாக இருந்தது. பேசாமல் நின்று கொண்டிருந்தான். வீரசேனன் பயப்படுவதைப் பார்த்த அந்த நிழல் உருவம் "பயப்படாதே! அது உன்னை ஒன்றும் செய்யாது. அது ஒரு பொம்மைப் புலி" என்று சொல்லிற்று.

வீரசேனனால் அதை நம்ப முடியவில்லை. இருந்தாலும் தன் தைரியத்தையெல்லாம் வரவழைத்துக் கொண்டு மேலே நடந்தான். புலிக்கு நேரே வந்தபோது அவனுக்கு மூச்சு நின்றுவிடும்போலிருந்தது. அதே சமயத்தில் அந்தப் புலி வாயைப் பிளந்துகொண்டு அவனை நோக்கிப் பாய்வதற்கு எழுந்தது. வீரசேனன் "ஹா!" என்று அலறிவிட்டான்.

வீரசேனன் அலறியதைப் பார்த்த அந்த நிழல் உருவம் "ஹஹ்ஹா!" என்று சிரித்தது. "தம்பி, வீரசேனா! இப்படிப் பயந்தாங் கொள்ளியாக இருக்கிறாயே! அதற்குமேல் அந்தப் புலி ஒன்றும் செய்து விடாது. அது ஒரு யந்திரப் புலி. நீ நின்ற இடத்தில் அதற்கு விசை இருக்கிறது. அதனால்



தான் அது பாய்வதுபோல எழுந்தது. அவ்வளவுதான். இதைக் கண்டு நடுங்கு கிருயே! தைரியமாக வா!" என்று கூறி மேலே நடந்தது அந்த உருவம்.

வீரசேனன் வியர்த்து விட்டிருந்த தன் உடலைத் துடைத்துக் கொண்டு அந்த உருவத்தைப் பின் தொடர்ந்து சென்முன். சுமார் நூறு கஜ தூரம் சென்றிருப்பான். அங்கு ஒரு திருப் பம் இருந்தது. அந்தத் திருப்பத்தின் வழியே சென்றதும் எதிரே அலை மோதிக் கொண்டிருக்கும் ஒரு பெரிய ஏரி தெரிந்தது. அதில் பலவித விஷ ஜந்துக்கள் தங்கள் கோர உருவத் தைக் காண்பித்துக் கொண்டு அவனை விழுங்கிவிடுவது போலப் பார்த்தன. அதைப் பார்த்ததும் ஏதோ சொல்லிக் கத்த ஆரம்பித்தான் வீரசேனன். அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. ஏதோ ஒன்று அடி வயிற் றிலிருந்து கிளம்பி வந்து அவன் தொண்டையை அடைத்துவிட்டது. அடாடா! தெரியாத்தனமாக அல்லவா வந்து விட்டோம்! வரும்போது அம்மா விடம் கூடச் சொல்லிக் கொண்டு வரவில்லையே? இப்பொழுது என்ன செய்வது என்று நினைத்துக் கொண்டே ஏரியை மீண்டும் பார்த்தான். ஒரு முதலை வாயைப் பிளந்து கொண்டு படுத்திருந்தது. ரம்பம் போன்ற தன் னுடைய நீண்ட வாலை மெதுவாக ஆட்டிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் வீரசேனனுக்குத் தலை சுற்றி மயக்கம் வரும்போலிருந்தது. எதிரில் தோன்றிய பொருள்கள் எல் லாம் சுழலுவது போலிருந்தது. வீர சேனன் அருகிலிருந்த சுவரைப் பல மாகப் பிடித்துக் கொண்டு நின்முன்.

வீரசேனனின் நிலையைத் தெரிந்து கொண்ட அந்த நிழல் உருவம் "வீர சேனு! நீ இப்படிப் பயந்து சாகி ருயே. பயப்படாதே! உன் அருகில் கிடக்கும் கல்லைத் தூக்கி இந்த ஏரியில் போடு. உடனே நீ நடந்து செல்வதற்கு வசதியான ஒரு பாலம் வரும்" என்றது.

வீரசேனனுக்கு அதன் வார்த்தை யில் நம்பிக்கை ஏற்படவில்லை. மௌன மாக நின்று கொண்டிருந்தான்.

"வீரசேனு! என் வார்த்தையில் நம்பிக்கை இல்லையா? உம். அந்தக் கல்லைத் தூக்கி ஏரியில்போடு" என்று அவனை மீண்டும் வற்புறுத்தியது.

வீரசேனன் உணர்ச்சி யில்லாமல் யந்திரம் போல அந்தக் கல்லைத் தூக்கி ஏரியில் போட்டான். (தொடரும்)

சரியான காரியம்!

ராமுவின் அம்மா தன் வீட்டுக்கு வந்திருந்த தன் தோழியுடன் பேசிக் கொண்டிருந்தாள். ராமு நாற்காலியின் மேல் ஏறி நின்று ஏதோ விஷமம் செய்து கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் புதிதாக வந்த அம்மாள், "ஏண்டி! உன் பிள்ளை ஒரு நிமிஷங் கூடச் சும்மா யிராமல் ஏதாவது விஷமம் செய்து கொண்டிருப்பான் போலிருக்கிறதே!" என்முள்.

"அவனுக்கு விஷமத்தனம் மாத்திரம் அல்ல. பிடிவாதக் குணமும் அதிகம். இன்று காலையில் ஒரு கசப்பு மருந்தைச் சாப்பிட அவன் பிடித்த பிடிவாதம் சொல்லி முடியாது. கடைசியில் அதைக் குடிக்க வைப்பதற்காக ஓரணுக் காசு வேறு கொடுத்தேன்" என்முள் ராமுவின் அம்மா.

"சரிதான். பிள்ளை அப்படியே அப்பாவை உரிச்சு வைச்சிருக்கு."

உடனே ராமுவின் அம்மா ராமு பக்கம் திரும்பி, "ஏண்டா! ஓரணுக் காசு கொடுத்தேனே, அதை என்ன செய்தாய்!" என்று கேட்டாள்.

ராமு சிரித்துக் கொண்டே, "அம்மா! நீ ஓரணுக் கொடுத்ததில் அரை யணுவுக்கு மிட்டாய் வாங்கிக் கொண்டேன். பிறகு மீதி அரையணுவை என்ன செய்தேன் தெரியுமா? எனக்காகக் கசப்பு மருந்து சாப்பிட்ட பாலு வுக்குக் கொடுத்து விட்டேன், அம்மா!" என்முன்.

அதைக் கேட்டதும் வந்த அம்மாள், "சரிதான்! உன் பிள்ளைக்கு எல்லா குணத்தோடு போக்கிரித்தனமும் நிறைய இருக்கு" என்று கூறிச் சிரித்தாள். ராமுவின் அம்மாவும் அவள் சிரிப்பில் கலந்து கொண்டாள். — பி. என். மணி.



மணிக் குஞ்சு

கோழியூர் என்ற ஊரில் ஒரு அழகான கோழி வசித்து வந்தது. அதற்கு நான்கு குஞ்சுகள் இருந்தன. குஞ்சுகளெல்லாம் தும்பைப் பூவைப் போல் வெள்ளை வெளேர் என்று இருந்தன. கோழியின் கடைசிக் குஞ்சின் பெயர்தான் மணிக் குஞ்சு. மணிக் குஞ்சுக்கு முகம் ரொம்பக் களையாக இருக்கும்.



தாய்க் கோழி இரை தேடப் போகும் போதெல்லாம் கோழிக் குஞ்சுகளும் கூடவே போகும். வழக்கத்திற்கு விரோதமாக ஒரு நாள் மணிக் குஞ்சு தனியாக இரை தேடிக் கொண்டே வெகு தூரம் போய்விட்டது. ஒரு வீட்டின் வாசலில் குனிந்து தன் சிறு மூக்கினால் ஆகாரத்தைக் கொத்திக் கொண்டு இருக்கும்போது ஒரு அம்மாள் முறத்திலிருந்த கரிக் குப்பையை வெளியே கொட்டினாள். பாவம்! எல்லாக் கரித் தூளும் மணிக் குஞ்சின்மேல் விழுந்தது. மணிக் குஞ்சு திக்கு முக்காடிப் போய் விட்டது. வெளுப்பாய் இருந்த குஞ்சு கன்னங்கரேல் என்று ஆகிவிட்டது. குஞ்சுக்கு விஷயம் என்னவென்று புரியாமல் பயந்து 'அம்மா, அம்மா' என்று அலறிக் கொண்டே வீடு நோக்கி ஓடியது.

"நான்தான் உன் அருமை மணிக் குஞ்சு!" என்று சொல்லிற்று.

"சீ, நீ என் குஞ்சு அல்ல. என் மணிக் குஞ்சு வெள்ளை வெளேரென்று எவ்வளவு அழகாக இருக்கும்! போ, போ!" என்று சொல்லி விட்டுக் கோழி போய்விட்டது.

மணிக் குஞ்சுக்கு ஒன்றுமே புரியவில்லை. அதன் தலை சுழன்றது. 'ஓ' வென்று அழத் தொடங்கியது. "ஏனப்பா அழுகிறாய், என்னைப் பாரு!" என்று ஒரு இளங் குரல் கேட்டுக் குஞ்சு திரும்பிப் பார்த்தது. அது ஒரு சின்ன வாத்துக் குஞ்சு. நடந்ததை யெல்லாம் மணிக் குஞ்சு அதனிடம் அழுது கொண்டே சொல்லிற்று. "நீ அழாதே! நீ என்னோடு கொஞ்ச தூரம் வா. எல்லாம் சரியாகப் போய்விடும்!" என்று வாத்துக் குஞ்சு அதைத் தேற்றிக் கொண்டே ஒரு சிறு குளத்தினருகில் அழைத்துக்கொண்டு வந்தது.



"நான் கறுப்பாக இருக்கிறேன் என்று எங்கம்மா சொன்னாள். நான் கறுப்பாகவா இருக்கிறேன்?" என்று கேட்டது.

"ஆமாம். இந்தத் தண்ணீரில் உன் உருவத்தைப் பார்!"

எட்டிப் பார்த்த மணிக்குஞ்சு, "ஐயையோ! கறுப்பாகத்தான் இருக்கிறேன். எப்படி மாறினேன்?" என்று முன்னைவிடப் பலமாக அழுதது.

"நீ அழாதே! அதோ எங்கம்மா நீந்திக்கொண்டு இருக்கிறாள். நான் போய் அவளை அழைத்து வருகிறேன். எல்லோருமாக எங்கள் வீட்டுக்குப் போகலாம். நீ எங்கள் வீட்டிலேயே இருக்கலாம்" என்று சொல்லிப் பொத்தென்று தண்ணீரில் குதித்தது வாத்துக் குஞ்சு.

கொஞ்ச நிமிஷத்திற்கெல்லாம் வானம் இருண்டது. இடிமுழக்கங்களுடன் மழை சக்கைப் போடு போட்டது! மணிக்குஞ்சு பயம் தாங்காமல் அலறிக் கொண்டே ஓட ஆரம்பித்தது. தாயார் வீட்டுக்கு வராதே! என்று சொன்னதுகூட அதற்கு அப்பொழுது ஞாபகம் வரவில்லை. மழை ஜலம் அதன் உடம்பில் இருந்த கரித் தூளெல்லாவற்றையும் போக்கிப் பழைய படி வெண்மையாக ஆக்கி விட்டது. மணிக் குஞ்சுக்கு இதெல்லாம் தெரியாது. வாசலில் மணிக் குஞ்சை எதிர்பார்த்து நின்ற தாய்க் கோழி தன் வெண்மையான மணிக் குஞ்சு ஓடி வருவதைப் பார்த்து ஆச்சர்யத்தில் கொக்கரக்கோ என்று கத்திக் குதித்தது. ஓடிப்போய் மணிக் குஞ்சைக் கட்டி வாரி அணைத்துக் கொண்டது.

தான் இப்பொழுது கறுப்பா வெள்ளையா என்ற சந்தேகம் அதற்கு ஏற்படவில்லை.

மலர்ந்த வாழ்வு



எஸ். சங்கரன்

தான் நினைத்த கணவனுக்கு வாழ்க்கைப் பட்டதற்காக எல்லாப் பெண்களையும்போல் பெருமைப் படவில்லை பார்வதி. இரண்டாந் தாரம் என்பதற்காகக் கொஞ்சங்கூட அவள் கவலைப்படவில்லை. வேறு யாரும் அவளுக்காக அனுதாபப்படவும் இல்லை. ஏனெனில் அவள் கணவனுக்கு அப்பொழுது வயது இருபத்தெட்டுதான் ஆகியிருந்தது. ஆனால் ஏதோ ஒன்று அவளுடைய மன நிம்மதியைக் குலைத்து வந்தது.

பார்வதி — பெயருக்கேற்றாற்போல் கர்நாடக பரம்பரையைச் சேர்ந்தவள். நாகரிகம் அவள் அறியாதது. கண்ணுபுரம் கிராமத்துக்கப்பால் உலகம் பரந்து கிடக்கிறது என்பதை நினைத்துக்கூடப் பாராதவள். எழுத்துக் கூட்டி ஏதோ படிக்கத் தெரியும். அவ்வளவுதான் கிராமப் பள்ளிக்கூடத்தில் அவள் பெற்ற கல்வி.

எட்டுப் பேர்களுக்கிடையே, ஏழை களைக்குப் பிள்ளையின் பெண்ணாகப் பிறந்த பார்வதிக்குத் திடீரென்று அடித்த அதிர்ஷ்டத்தைக் கண்டு சந்தோஷப்பட்டவர்களை விட, பொறாமைப் பட்டவர்கள்தான் அதிகமென்று சொல்ல வேண்டும். ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்து எப்படிக் கரை சேற்றப் போகிறோம் என்று அவளுடைய பெற்றோர்கள் அதிகம் கவலைப்பட இடம் வைக்காமலே அவள் விஷயத்தில் எல்லாம் 'சட்புட்' என முடிந்தது. எங்கிருந்தோ விசுவேசுவரன் வந்து முளைத்தார். சீர், செனத்தி என்ற பிடுங்கல் எதுவுமில்லாமல் சிக்கனமாகக் கல்யாணம் நடந்தது. உடனே பெண்ணைத் தன் ஊருக்குக் கூட்டிக் கொண்டு போய்விட்டார்.

"இந்தப் பெண்ணுக்கு அடித்த யோகத்தைப் பாரேன்" என்று சொல்லாதவர்களே கிடையாது. பலர் பொறாமையால் மனம் புழுங்கினார்கள் என்றால் அதற்கும் காரணம் இருக்கத்தான் செய்தது.

பார்வதியை அழகென்று சொல்ல முடியாது. ஆனால் அவலட்சணம் இல்லை. கொஞ்சம் கறுப்பாக இருப்பாள் அவ்வளவுதான். விசுவேசுவரனோ இதற்கு நேர் விரோதமாக இருந்தார். களை பொருந்திய முகமும், வசீகரமான அவர் கண்களைக் 'கொஞ்சம் பார்த்துக் கொண்டே யிருக்க வேண்டும்' என்று தூண்டுவதாகவே இருந்தது. விசுவேசுவரன் சென்னைக் கலாசாலை ஒன்றில் போதகாசிரியராக இருந்தார். சந்தோஷமாக வாழ்க்கை நடத்தக் கூடிய அளவுக்கு அவருக்குச் சம்பளம் வந்து கொண்டிருந்தது.

"இவருக்குப் பெண் கொடுக்க ஆயிரம் பேர் போட்டி போட்டுக் கொண்டு வர மாட்டார்களா? போயும் போயும் இந்தப் பெண்தானா இவருக்கு அகப்பட்டது?" என்று சொல்லித் தங்கள் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொண்டனர் சிலர்.

2

புது மனைவியுடன் குடித்தனம் தொடங்கி ஒரு வருஷத்துக்குள்ளாகவே விசுவேசுவரனுக்கு வாழ்க்கையில் விரக்தி பெறப் படக் கூடிய அளவுக்கு, அனுபவங்கள் உண்டாகி விட்டன. மன அதிர்ச்சி தரும் பல சம்பவங்கள் அவர் வாழ்க்கையின் குறுக்கிட்டன. மனச் சாந்திக்காகவே பார்வதியை அவர் மணந்து கொண்டார்.

பார்வதியை மணம் செய்து கொண்டபின் எதிர்பார்த்த மனச் சாந்தி அவருக்குக் கிட்டாதது மட்டுமின்றி ஏற்கெனவே பல விதமான கவலைகளால் அலைக்கழிந்துக் கொண்டிருந்த அவர் மனம் மேலும் சஞ்சலமுற்றது. பார்வதியின் போக்கு அவருக்குப் பிடிபடவே யில்லை. இன்பகரமாக வாழ்க்கை நடத்தும் இளந் தம்பதிகளைக் கண்டு பெருமூச்சு விடுவதுடன் திருப்தியடைய வேண்டியிருந்தது. எல்லோரையும் போல் தானும் இருக்கவேண்டுமென்ற உணர்ச்சி பார்வதிக்கு ஏற்படாதது கண்டு அவருக்கு ஆச்சர்யமாக இருந்தது. ஏதோ இயந்திரம் போல் இயங்கிக் கொண்டிருந்தாளே தவிரத் தனக்குரிய ஸ்தானத்தைப்

பார்வதி ஸ்தாபித்துக் கொள்ளவில்லை. கலகலப்பாக அவள் பேசுவது கூடக் கிடையாது. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுவாள். அவ்வளவுதான்!


மனத்துக்குள் எதையோ நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தாள் பார்வதி. கூடத்தில் மாட்டியிருந்த விசுவேசுவரனும் அவன் முதல் மனைவியும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவளையறியாமல் பெருமூச்சுக் கிளம்பும். "என்ன பொருத்தமான ஜோடி" என்று சில சமயம் வாய்விட்டே அவள் சொல்லியிருக்கிறாள். விசுவேசுவரனைப் போலவே அவளும் மிக அழகு வாய்ந்தவளாக இருந்தாள். தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும் போதெல்லாம் தான் எந்த விதத்திலும் விசுவேசுவரனுக்கு ஏற்றவளல்ல என்ற எண்ணமே அவளுக்கு ஏற்பட்டது. அழகிய கணவனை அடைந்ததற்காகப் பெருமைப் படுவதற்குப் பதிலாக, தனக்கும் அவருக்கு மிடையேயுள்ள பொருத்தமில்லாத் தன்மையை நினைத்து ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை அவளிடம் குடி கொண்டது.

வெளி இடங்களுக்குத் தன்னுடன் வருமாறு எப்போதாவது விசுவேசுவரன் அழைத்தால் அவளுக்கு வேதனை குமுறி எழும். ஒரு நாள் விசுவேசுவரனுடைய நண்பர் ஒருவருடைய வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிருந்தாள். அப்பொழுது ஜாடையாக இரண்டொருவர் பேசியது அவள் காதுகளில் விழுந்தது. "இப்படியா அமைய வேண்டும்?" என்று அவர்கள் இளக்காரமாகப் பேசியதைக் கேட்டு அவள் நெஞ்சமே வெடித்து விடும் போலிருந்தது. முதலில் இதைக் கேட்டு அவளுக்கு ஆத்திரம்தான் வந்தது. ஆனாலும் நாளடைவில் 'அவர்கள் சொல்லுவதும் நியாயந்தானே' என்ற எண்ணம் அவளுக்கேற்படத் தொடங்கி விட்டது.

அந்தச் சம்பவத்துக்குப் பின்னர் தன் கணவனுடன் எங்கும் செல்வதில்லை என்று தீர்மானித்துக் கொண்டாள். ஏற்கெனவே அவள் கொண்டிருந்த 'தாழ்வு மனப்பான்மை' இதற்குப் பின்னர் மேலும் வலுப் பெற்றது. விசுவேசுவரனுக்குத் தான் எவ்விதத்திலும் ஏற்றவளல்ல என்ற எண்ணம் அவளிடம் நிலை பெற்று விட்டது.

பார்வதியின் போக்கைப் புரிந்துகொள்ள முடியாமல் தவித்தார் விசுவேசுவரன். தன்னை அவள் அலட்சியப் படுத்துகிறாளோ என்றுகூட அவர் எண்ணத் தொடங்கி விட்டார். ஒருகால் விருப்பமில்லாக் கல்யாணமாக இருந்திருக்கலாமோ என்று அவர் சிந்தனை ஓடியது.

மனம் விட்டுப் பேசினோமென்றில்லாமல் ஏதோ அன்னியர்களைப் போன்றே அவர்கள் அந்த வீட்டில் பழகி வந்தார்கள். எப்பொழுதாவது ஜோடியாக இருவரும் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டு விடும். விசுவேசுவரன் கொஞ்சம் முன் கோபி. கோபம் வந்தால் தாறுமாறாகப் பேசி விடுவார். அந்தச் சமயங்களில், 'நான் அழகில்லை என்பதற்காகத்தானே இவ்வளவு அலட்சியமாகப் பேசுகிறீர்?' என்று பார்வதி எண்ணுவ



ளன்று. ஆனாலும் அடுத்த நிமிஷமே 'அதிலென்ன தவறு? நியாயந்தானே?' என்று தானே சமாதானம் செய்து கொள்வார்.

விசுவேசுவரனுடைய வீடு கடற்கரைக்கு வெகு அருகில் இருந்தது. சாயந்திர வேளைகளில், கல்லூரியிலிருந்து வந்ததும் விச்ராந்தியாகச் சற்றுக் கடற்கரையில் உலாவி விட்டு வரலாமென்று கூப்பிடும் பொழுது, "நான் வரவில்லை. நீங்கள் போங்கள்" என்று பார்வதி சொன்னால் அவருக்கு எப்படி இருக்கும்? ஆரவாரத்துடன் குமுறும் அலைகடலைப் போன்று அமைதியிழந்து தவித்தது அவர் மனம்.

3

ஒரு நாள் விசுவேசுவரனுக்கு அவரது நெருங்கிய நண்பரான, பாலுவிடமிருந்து கடிதம் வந்தது. அவருடைய பெண்ணுக்கு அடுத்த வாரம் கல்யாணம். நான்கு தினங்கள் முன்பாகவே மனைவியுடன் கட்டாயம் வரவேண்டும் என்று மிகவும் வற்புறுத்திக் கடிதம் எழுதியிருந்தார். விசுவேசுவரனுடைய நிலைமை தர்ம சங்கடமாகப் போய் விட்டது. ஏற்கெனவே ஒரு சமயம் நடந்த சம்பவம் அவர் நினைவுக்கு வந்தது. ஏதோ ஒரு விசேஷத்துக்காக அவர் மட்டும் பாலு வீட்டுக்குச் சென்றிருந்தார். "பழியாட்டம் தனியாக நிற்கிறாயே" என்று பாலு கோபித்துக் கொண்டதுடன் நண்பர்கள் மத்தியில் அவரைப் பரிகாசம் செய்து உயிரையே வாங்கி விட்டார். இச்சம்பவத்தையும் பாலு தமது கடிதத்தில் குறிப்பிட்டு இந்தத் தடவை 'தம்பதி சமேத'ராகக் கட்டாயம் வர வேண்டும் என்று வற்புறுத்தி எழுதியிருந்தார்.

விசுவேசுவரனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பார்வதி நிச்சயம் வர மாட்டாள் என்பது அவருக்குத் தெரியும். எதற்கும் கேட்டுப் பார்க்கலாம் என்று விஷயத்தைச் சொன்னார்.

"நான் இருக்கும் லட்சணத்துக்கு ஊர் ஊராக உங்களுடன் வர வேண்டியதுதான் குறைச்சல்!" என்று அவள் அலுத்துக் கொண்டே கூறியதைக் கேட்டு ரௌத்ராகாரமாகி விட்டார் விசுவேசுவரன். 'பார்வதிக்கு என்ன குறை வைத்து விட்டோம்? அவள் இருக்கும் நிலைமைக்கென்ன?' என்பதை நினைத்த போது அவர் ஆத்திரம் மேலும் அதிகரித்தது.

"உனக்கு நான் என்ன குறை வைத்து விட்டேன்? கட்டாயம் நீ வந்துதானாக வேண்டும்" என்று அவர் வெறி பிடித்தவரைப் போல் இரைந்ததைக் கேட்டுப் பார்வதி அப்படியே நடுநடுங்கி விட்டாள். இதய பீடத்திலிருந்து துக்கம் அவளுக்குப் பொத்துக் கொண்டுவந்தது.


"தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். என்னை மன்னித்து விடுங்கள்!" என்று நாத்தழுதழுக்க அவள் கூறிய பொழுது கட்டுக்கடங்காமல் அழுகை பீறி வந்தது.

பார்வதியின் கண்ணீர் விசுவேசுவரனுடைய உறுதியைத் தளர்த்துவதற்குப் பதிலாக மேலும் வலுப்படுத்தியது. "உன் பாசாங்குக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன். வந்துதான் ஆக வேண்டும்" என்றார் தீர்மானமாக. எதற்கும் அசையாத கண்டிப்பு அவர் குரலிலே தொனித்தது.

"இல்லை, உங்களுடன் நான் வந்தால் நன்றாயிருக்காது" என்று எப்படியோ பார்வதி தட்டுத் தடுமாறிக் கொண்டே சொல்லியதைக் கேட்டு, "ஏன்?" என்று சீறினார் விசுவேசுவரன்.

சிறு குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதாள் பார்வதி. "உங்கள் மனைவி என்று என்னைச் சொல்லிக் கொண்டால் நன்றாயிருக்குமா? உங்களுக்கு நான் ஏற்றவளேயல்ல. அழகிய ரோஜா மலரைச் சுற்றி அவசியமற்ற முள் இருப்பது போல் நான் எதற்கு உங்களுடன் வர வேண்டும்?" என்று அவர் காலில் விழுந்து கதறினாள்.

அவளுடைய மன நிலை கொஞ்சக் கொஞ்சமாக விசுவேசுவரனுக்குப் புரிய ஆரம்பித்தது. 'தான் அழகில்லை என்ற காரணத்துக்காகத் தன் வாழ்க்கையே கசப்பாக ஆக்கிக்



"என்னங்க! ஸ்ரீ பிரகாசமும், ரங்காவும் புதுசா ஒரு பார்ட்டி ஏற்படுத்தறாங்களாமே தெரியுமா?"

"நான் 'இன்விடேஷன்' இல்லாமல் எந்தப் பார்ட்டிக்கும் டீ குடிக்கப் போறது இல்லீங்க!"

கொண்டு விட்டானே' என்பதை எண்ணிய போது வெகுவாக அவர் மனம் நெகிழ்ந்து விட்டது.

பார்வதியைத் தூக்கி நிறுத்தி அன்புடன் அவள் தலையை வருடிக் கொடுத்தார். "அசடே! இதை மனதில் வைத்துக் கொண்டா பொருமிக் கொண்டிருந்தாய்? வெளி அழகை நான் விரும்பவில்லை. உண்மை அன்புக்கே ஏங்கியது என் மனம்" என்று கூறிய பொழுது அவர் கண்களினும் நீர் துளித்தது.

அதே சமயம் முதல் மனைவியின் நினைவும் வந்தது அவருக்கு. அவள் நல்ல அழகி. அதுவே அவரது வாழ்க்கையை வேம்பாகக் கசக்கச் செய்துவிட்டது. வேளைக்கொருவித அலங்காரம் செய்து கொண்டு வெளியிடங்களிலேயே பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள் அவள் — கட்டிய கணவனைப் பற்றிய கவலையில்லாமலேயே.

வாழ்வில் இன்பத்துக்கு அழகு அவசியமில்லை. அன்புதான் வேண்டும் என்ற உண்மையை உணர்த்தினாள் அவள். அழகு அலட்சியத்தையும், செல்வம் செருக்கையும் வளர்க்கிறது என்ற எண்ணம் அவரிடம் நிலை பெற்றது. அதன் விளைவாகவே பார்வதியை மணந்தார்.

"எனது முட்டாள் தனத்தினால் உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று பார்வதி கூறிய பொழுது குழந்தையின் குழைவு அவள் குரலிலே தொனித்தது. பார்வதியின் வாழ்வில் ஒரு புதிய இன்பம் மலர்ந்தது.

பேயுடன் போர்!


ஸ்ரீ மணிலால் காந்தி

தந்தை ஆரம்பித்த மாபெரும் கைங்கரியத்தை நிறைவேற்ற வேண்டியது மகனின் முழு முதற்கடமை அல்லவா! மகாத்மா காந்தியின் இரண்டாவது குமாரரான ஸ்ரீ மணிலால் காந்தி அந்தக் கடமையைப் பூர்த்தி செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார். 1930-ம் வருஷம் தர்சனாவில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகத்துக்கு மணிலால் தலைமை வகித்துச் சிறை சென்றார். காந்தி மகானின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களுக்கு ஸ்ரீ மணிலால் சென்ற முப்பத்தைந்து வருஷங்களாக "இந்தியன் ஒபினியன்" என்ற பத்திரிகையின் ஆசிரியராக ஒப்பற்ற தொண்டு புரிந்து வருகிறார். இப்போது அவரது தொண்டு ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது. "தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்தி வரும் நிறவெறிப் பேயுடன் போரை ஆரம்பித்திருக்கிறேன்" என்று ஸ்ரீ மணிலால் சில தினங்களுக்கு முன் கூறினார். தென்னாப்பிரிக்க சர்க்காரின் கொடிய நிறவேற்றுமைச் சட்டத்தைக் கண்டித்துப் பதினைந்து நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். எந்தப் பிரதேசத்தில் இந்தியர்கள் பிரவேசிக்கக் கூடாது என்று வெள்ளையர்கள் சட்டம் இயற்றியிருக்கிறார்களோ அங்கு பிரவேசித்துச் சட்டத்தை மீறவும் உறுதி கொண்டுள்ளார். அடிமைத்தனப் பேயை எதிர்த்துத் தந்தை வெற்றி பெற்றதைப்போல, நிறவெறிப் பேயை எதிர்த்துத் தனயனும் வெற்றி பெறுவாராக!

★

கச்சை கட்டுகிறார்!


ஸ்ரீ ரங்கா

ஸ்ரீ என். ஜி. ரங்கா எந்த ஊருக்காவது வந்திருக்கிறார் என்றால் அங்கு தொழிலாளர் அல்லது விவசாயிகள் மகாநாடு நடைபெறுகிறது என்று நிச்சயமாகக் கூறலாம். சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் பதவியிலிருந்து புது டில்லி பாராளுமன்றம் அங்கத்தினர் பதவிவரையில் ஸ்ரீ ரங்கா பல பொறுப்புள்ள ஸ்தானங்களை வகித்தவர். ஆந்திராவைச் சேர்ந்த நிடுப்ரோலுவிலிருந்து ஐரோப்பாவைச் சேர்ந்த நெதர்லண்ட்ஸ் வரையில் ஸ்ரீ ரங்கா இராமல் எந்தத் தொழிலாளர், விவசாயிகள் மகாநாடும் நடக்காது எனலாம். தொழிலாளர் நலன்களுக்குக் குந்தகம் ஏற்பட்டாலும் ஒரு வேளை ஸ்ரீ ரங்கா பொறுத்துக் கொள்வார். ஆனால் அவர் பிறந்த கம்மா வகுப்பினரின் நலனுக்கு அற்ப இடையூறு ஏற்பட்டாலும் சரி, அவருக்கு வெறி உண்டாகி விடும். இப்போது அவர் இந்திய தேசிய மகாசபைக் காரியக் கமிட்டியிலிருந்து மாத்திரமல்ல, அந்தச் சபையிலிருந்தே விலகத் தீர்மானித்து விட்டார். ஸ்ரீ பிரகாசத்துக்குப் பக்கபலமாக இருந்து புதுக் கட்சியை அரங்கேற்றுவதற்குக் கச்சை கட்டிக் கொண்டிருக்கிறார்.

கடைசி வழி

'கோணல்'

டிராமில் போகிறான். பஸ்ஸில் போகிறான். பீச்சு, சினிமா, டிராமா, சங்கீத நாட்டியக் கச்சேரிகள் எல்லாவற்றிற்கும் தவறாமல் போகிறான். எங்கேனும் சந்தியில் நாலுபேர் கூடி நின்றால் அங்கும் போய்த் தலையை நீட்டிக்கொண்டு நிற்கிறான். அவனுக்கும் மூக்கு, விழி, கை, கால் எல்லாம் உருவாகத்தானிருக்கின்றன. ஆறடி உயரமும் நூற்று நாற்பத்தைந்து பவுண்டு கனமும் இருக்கிறான். ஆனால் நாற்பது கோடி ஜனங்களுக்கு மேல் வளர்ந்து கொண்டு வரும் இந்த பாரத புண்ணிய பூமியில் இன்னும் அவன் ஒரு சாதாரண மனிதன்தான். என்ன அநியாயம்? இது அடுக்குமா? தருமந்தானா?

ஏன் அவன் பிரசித்தமானவனாகவில்லை? இதுதான் அவனுக்கே விளங்காத புதிர். ஆனால் அவன்மீது எள்ளத்தனை பிசகு கூடக் கிடையாது. அவன் எப்பொழுதுமே பிரசித்தமானவனாகத் தயார் என்று எந்தப் பத்திரிகை நிருபர் கூட்டத்திலோ சங்கீத, நாட்டிய கலா நிபுணர்கள் முன்னிலையிலோ, அரசியல் சீர்திருத்த, சமூக வாதிகள் முன்னிலையிலோ பகிரங்கமாகச் சொல்லத் தயார். அறிக்கைகள் விடவும் தயார். சவால் விடவும் தயாராக இருக்கிறான். 'அவன் பிரசித்தமானவனாக மறுக்கிறான்' என்று நிரூபிப்பவர்களுக்கு ஆயிரத்தொரு தம்பிடிகள் இனாமாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறான்.

ஜகத்ரக்ஷகனைப்போல் இருக்கும் ஒருவர் இந்தக் காலத்தில் கூடப் பிரசித்தமானவன் என்று பெயர் எடுக்காவிட்டால் அது அவனுக்கே ஆச்சரியமாக இருக்காதா? அவன் சம்சாரத்துக்குத்தான் வெட்கமாய் இருக்காதா! ஏன்? இது கடவுளுக்கே வியப்பை அளிக்கக் கூடிய விஷயம் என்பது என் சொந்த அபிப்பிராயம்.



உண்மையில் ஜகத்ரக்ஷகன் பிரசித்தமானவனாக வேண்டியதற்கு எவ்வளவோ காரணங்களிருக்கின்றன. அந்தக் காரணங்களைச் சொல்லியோ எழுதியோ விளக்குவது மகா கடினம். ஒவ்வொன்றையும் காரியாம்சத்தில் அவன் செய்து காட்டினால்தான் விளங்கும். அவன் எவ்வளவோ விஷயங்களைக் காரியாம்சத்தில் செய்து காட்ட முயன்றான். பாவம்! உலகம் கண் மூடித்தனமாக இருந்தால் அவன்தான் என்ன செய்வான்? ஆனால் அவன் முயற்சியைக் கைவிடவில்லை.

ஜகத்ரக்ஷகனின் முதல் முயற்சி சங்கீதம். பிரசித்தியாவதற்கு மிகவும் சுலபமான வழி சங்கீதம் கற்றுக் கொள்ளுவதுதான் என்பது அவன் முடிவு. சங்கீதத்தைக் குரு மூலமாகப் பாடம் கேட்டுக் கற்றுக் கொள்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால் அவன் சங்கீதம் கற்றுக் கொண்டு பிரசித்தி பெற்றவனாகும்போது அவனுக்குக் கற்றுக் கொடுத்த குருநாதருக்கும் பிரசித்தி ஏற்பட்டுவிடுமல்லவா? இதில் அவனுக்குத் துளிக்கூட இஷ்டமில்லை. பாடுவதற்குச் சாரீரம் வேண்டுமென்கிறார்கள் உலகில். இது சுத்தப் பிதற்றல் என்பது அவன் அபிப்பிராயம். மனிதனுக்கு இன்னும் தன்னிடம் உள்ளதைத் தானே அறிந்து கொள்ளும் பக்குவம் வரவில்லை, அந்த அளவுக்கு இன்னும் மனித சமுதாயமே வளர்ச்சி யுறவில்லை என்பது அவனுடைய அபிப்பிராயம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் கண், காது, மூக்கு, நாக்கு இருப்பது போல சாரீரமும் இயற்கையாக இருக்கிறது. இதனால் கொஞ்சம்கூடப் பேச லாயக்கற்ற முழு ஊமைகளைத் தவிர மற்ற எல்லோரும் தாராளமாகப் பாடலாம் என்ற பெரிய உண்மையைச் சிரமப்பட்டு ஆராய்ந்து தெரிந்து கொண்டிருந்தான். கீச்சுக் குரல் உள்ளவர்கள், கட்டைக் குரல் உள்ளவர்கள், ஏன், அரை குறை ஊமைகள், உளறு வாயர்கள், குரல் நடுக்க முள்ளவர்கள், தெத்து வாயர்கள் எல்லோருமே பாடலாம். இந்த உண்மையை ஜகத்ரக்ஷகன் தெரிந்து கொண்ட மார்கழி மாதத்தில் எங்கள் ஊரில் நடக்கும் பஜனை கோஷ்டிதான் உதவியாயிருந்தது. இந்த உண்மையைக் கண்ட பிறகுதான் அவனும் துணிந்து

சங்கீத அப்பியாசம் செய்ய ஆரம்பித்தான்.

பாவம்! அவன் எந்தச் சுபயோக சுப தினத்தில் சங்கீத அப்யாசம் செய்ய ஆரம்பித்தானோ தெரியாது. பக்கத்து வீட்டிலிருந்த நல்ல மனிதர் பொல்லாதவராகி விட்டார். இவன் பாடும்போதெல்லாம் அவர் இவனை வாயில் வந்தபடியெல்லாம் திட்டத் தொடங்கினார். இவன் பாடும்போது இவனுக்குப் போட்டியாகப் பக்கத்து வீட்டு மனிதர் வேண்டுமானால் தன் வீட்டில் உட்கார்ந்து பாடித் தொலையட்டும், அதற்குப் பதிலாக இவனை வாயில் வந்தபடியெல்லாம் திட்டுவது என்ன நியாயம்?



ஜகத்ரக்ஷகன் அவருடைய வசவுக்குப் பயந்து தன் சங்கீத அப்பியாசத்தை நிறுத்திக் கொள்ளவில்லை. அவன் பாட ஆரம்பித்ததும் பக்கத்து வீட்டு மனிதர் திட்ட ஆரம்பிப்பது அவன் பாட்டுக்குத் தக்க பக்க மேளமில்லாத குறையை நிவர்த்தி செய்வது போலத் தான் இருந்தது. பாவம்! அடுத்த வீட்டுக்காரர் இவ்வளவு பொறுமை இழந்த மனிதர் என்று அவன் நினைக்கவேயில்லை. அந்தப் பொல்லாத மனிதர் ஒரு நாள் ஒரு பெரிய தடியைத் தூக்கிக் கொண்டு அவனை அடிக்க வந்து விட்டார். நாங்களெல்லாம் அவரைச் சமாதானம் செய்து அனுப்பினோம்.

ஜகத்ரக்ஷகன் மாத்திரம் அடுத்த வீட்டுக்காரரை லட்சியம் செய்யவே யில்லை. காலையிலும் மாலையிலும் அவனுடைய சங்கீத அப்பியாசத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு தான் வந்தான். ஆனால் அவன் எந்த வீட்டில் குடியிருந்தானோ அந்த வீட்டிற்குச் சொந்தக்காரர் 'உன் சங்கீதத்தை நிறுத்திக் கொள். இல்லாவிட்டால் வீட்டைக் காலி செய். உன்னால் எனக்குத் தெருவிலுள்ளவர்களின் விரோதம் ஏற்படும் போலிருக்கிறது' என்று மிகவும் கடுமையாக எச்சரிக்கை செய்யவே தன் சங்கீத அப்யாசத்தை ஒரு நிஜுசாக நிறுத்திக் கொண்டான். ஆனால் அவன் தன் சங்கீதத்தைத் தன் வீட்டுச் சொந்தக்காரருக்குப் பயந்தோ, அடுத்த வீட்டுக்காரர் அடிக்க வந்ததற்குப் பயந்தோ நிறுத்தி விட்டதாகச் சொல்லவில்லை.

அவன் சங்கீதம் கற்றுக்கொண்டால் இன்னுமொரு தொல்லை. பிடில், மிருதங்கம்போன்ற பக்க வாத்தியக்காரர்களை அனுசரணையாக வைத்துக் கொண்டு அதற்குத் தகுந்தாற் போல் பாடியல்லவா பெயரெடுக்க வேண்டும்? இவன் பாடி அடையும் பிரசித்தியில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்றால் அதில் என்ன நியாயம் இருக்கிறது? இது தான் அவனுடைய சங்கீத அப்பியாசம் நிறுத்தப் பட்டதற்கு முக்கிய காரணம் என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு வந்தான்.

பிரசித்தி யடைவதற்கு இரண்டாவது விஷயமாக அவன் எடுத்துக் கொண்டது நாட்டியம். இது மிகவும் சுலபமான வித்தை. கதக்களி, மணிப்புரி என்று நாட்டியத்தை வகை வகையாகப் பிரித்துச் சொல்லுவது அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அவன் பார்த்தவரையில் எல்லாம் ஒன்று தான் என்பது அவனது திடமான அபிப்பிராயம். கையும் காலும் முடமில்லா திருப்பவர்கள் எல்லோரும் நாட்டிய மாடலாம் என்பது அவன் கோட்பாடு.

ஒருநாள் நான் அவன் வீட்டுக்குப் போனபோது அவனுடைய அறைக் கதவு சாத்தப்பட்டு உட்புறமாகத் தாளிடப் பட்டிருந்தது. உள்ளேயிருந்து 'தை-தக்கத்தை தக்கத் தக்கத்தை' என்ற லயச் சொல் காதில் விழுந்தது. கதவின் இடுக்கு வழியாக மெதுவாக எட்டிப் பார்த்தேன். ஜகத்ரக்ஷகன் ஒரு லங்கோடைக் கட்டிக்கொண்டுத் தாவித் தாவிக் குதித்துக் கொண்டிருந்தான். இதிலிருந்து அவன் நாட்டிய அப்பியாசம் செய்ய ஆரம்பித்திருக்கிறான் என்று எனக்கு எளிதில் விளங்கியது. இந்தச் சமயத்தில் அவனைத்



தொந்தரவு செய்யக்கூடாது என்று வந்து விட்டேன். மூன்று நாளைக்குப் பிறகு அவனைக் கடைத்தெருவில் சந்தித்தேன். அவனுடைய கால் வீங்கி ஏதோ மருந்து போடப்பட்டிருந்தது. நொண்டி நொண்டி மிகச் சிரமப்பட்டு நடந்தான். இந்த விபத்து அவனுக்கு எப்படி ஏற்பட்டது என்று கேட்டேன். "பரணி லிருந்து விறகு எடுப்பதற்காக ஏணியில் ஏறியதாகவும், ஏணி திடீரென்று சரிந்ததால் கீழே விழுந்து நரம்பு பிசகிக் கொண்டதாகவும் சொன்னான். இதை என்னால் நம்ப முடியவில்லை. 'நீ ஏதாவது நாட்டியமாடப் பழகினாயோ? 'அதனால் ஏதாவது ஏற்பட்டிருக்குமோ?' என்று நினைத்தேன்' என்றேன்.

அவன் என் முகத்தைப் பார்த்துக் கொண்டே "நாட்டியமா......? சே சே! எனக்கு நாட்டியமென்றாலே பிடிக்காது. நான் நாட்டியமாடி ஊரில் பெயரெடுக்க வேண்டுமென்றால் அதை எப்பொழுதோ செய்திருப்பேன்!" என்றான், வேறெங்கோ பார்த்துக் கொண்டே. அவனுடைய முக ஜாடையிலிருந்து அவனுக்கு நாட்டியத்தின் மீது ஏற்பட்டுவிட்ட வெறுப்புத் தெளிவாகத் தெரிந்ததும் தவிர அவன் காலில் ஏற்பட்ட நரம்புச் சுளுக்கு நாட்டியப் பயிற்சியால் ஏற்பட்டதுதான் என்றும் தெரிந்து கொண்டேன். இந்த நரம்புச் சுளுக்கிலிருந்து ஜகத்ரக்ஷகனின் நாட்டியப் பயிற்சி நின்றுவிட்டது. அத்துடன் நாட்டியத்தின் பேரிலேயே அவனுக்கு அளவு கடந்த வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

ஜகத்ரக்ஷகன் பிரசித்தமாவதற்கு மூன்றாவது சுலபமான வழியைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தான். சுலபமான வழி என்றால் ஒரு எழுத்தாளனாவதோ கவிஞனாகி விடுவதோதான். நினைத்தபடியெல்லாம் கதை எழுதுவது, கட்டுரை எழுதுவது, கட்டுக்கடங்காமல் கவிமாரி பொழிவது என்று நிர்மானித்து விட்டான். ஆனால் அவன் எழுத ஆரம்பித்த கதைகளுக்கோ கட்டுரைகளுக்கோ முடிவு காண முடியாமல் வளர்ந்து கொண்டே வந்தன. அவன் எழுத ஆரம்பித்தது ஒரே ஒரு கதை. அது இன்னும் முடியவில்லை.

ஒவ்வொரு நாளும் அதை முடித்து விடுவது என்றுதான் உட்கார்ந்து எழுதுவான். ஆனால் அந்தக் கதையின் முடிவு இன்னும் நீண்டுவிடும். அந்தக் கதையை ஒரு வகையாக முடித்து இந்த ஜன்மாவில் பெயரெடுக்க முடியாது என்று கண்டு கொண்டதால் அம்முயற்சியையும் கைவிட்டு விட்டான். அந்த முடியாத கதையைக் காகிதம் வாங்குபவனிடம் நிறுத்து விலைக்குக் கொடுத்தபொழுது அது முக்கால் மணுவுக்குக் குறையாமல் இருந்தது என்ற பெருமையை மாத்திரம் சொல்லி மனதை ஆற்றிக்கொண்டான்.

அடுத்தாற்போல் ஜகத்ரக்ஷகன் ஒரு மேடை பிரசங்கியாக நினைத்தான். அவன் பிரசங்கியாவதற்கு முன் எந்தக் கட்சியில் சேர்ந்து பிரசங்கியாவது என்று யோசிக்க வேண்டியிருந்தது. பிரசங்கிகளே இல்லாத ஒரு கட்சியில் சேர்ந்து பிரசங்கம் செய்தால்தான் பிரசித்தியடைய முடியுமென்று அவனுக்குத் தோன்றியது. ஒவ்வொரு கட்சியிலும் ஏகப்பட்ட பிரசங்கிகள் இருக்கவே பிரசங்கியாகும் யோசனையையே அவன் கைவிட்டு விட்டான்.

ஜகத்ரக்ஷகனிருந்த தெருவில் அவன் குடியிருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் கணித நிபுணர் ராமானுஜம் பிறந்து வளர்ந்தார். அவர் பிறந்து வளர்ந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் ஜகத்ரக்ஷகனுக்கு இயற்கையாகவே அந்த தோஷம் கொஞ்சம் இருக்காதா? கணித சாஸ்திரம் மூளையை இழுத்தது. ஒரு புது வழியைக் கண்டு பிடிக்க ஆரம்பித்தான். எல்லாம் சுழி மயம்—அதாவது சர்வமும் சைபர். உதாரணமாக இருபத்தைந்து சைபர் மாம்பழம், பன்னிரெண்டு சைபர் ரூபாய், ஒன்பது சைபர் அணா, ஆறு சைபர் பைசா வீதம் இரண்டாயிரத்தைந்நூற்று ஐம்பத்தாறு சைபர் ரூபாய், ஒன்பது சைபர் அணா, ஆறு சைபர் பைசாவுக்கு எவ்வளவு இருபத்தைந்து சைபர் மாம்பழம் வாங்கலாம்? இப்படியே ரூபாய் அணா பைசா அளத்தல், நிறுத்தல்,




எல்லாவற்றிலும் சைபர்தான் அடிப்படையாக இருக்கும். இந்த வழி கொஞ்சம் மூளையைக் குழப்பினாலும் புதிய வழி என்பதை யாராவது மறுக்க முடியுமா? முதலில் ஐந்தாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்த அவனுடைய மருமானுக்கு இந்த வழியை மிகவும் சிரமப்பட்டுச் சொல்லிக் கொடுத்தான் ஜகத்ரக்ஷகன். அவனுடைய பள்ளிக்கூடக் கணக்குகளை யெல்லாம் சைபர் மயமாக்கினான். கடைசியில் அவனுடைய மருமான் பள்ளிக்கூடப் பரீட்சையில் ஒரு பெரிய சைபராக வாங்கிக்கொண்டு வந்தபோது தான் தன்னுடைய புதிய முறை உலகத்திற்குப் பிடிபடாது என்று விட்டு விட்டான்.

ஜகத்ரக்ஷகன் இதோடு மட்டும் விட்டு விடவில்லை. கூழாங்கல்லை எப்படி வைரமாக்குவது? நட்சத்திரத்துக்கு எப்படி வால் முளைக்கிறது போன்ற விஷயங்களை அனுபவ பூர்வமாகக் கண்டு பிடித்திருக்கிறான். அவன் இன்னும் பிரசித்தமாகாமல் இருப்பதற்குரிய பழி இந்த உலகத்தைச் சேர்ந்ததுதான். ராஜ்ய சர்க்காரில் அவனுக்கொரு மந்திரி வேலை கொடுத்தால் குறைந்து விடுமா? மத்திய சர்க்காரில் எத்தனை தேசங்களுக்குப் பிரதிநிதிகளை அனுப்புகிறார்கள்? அவனுக்கொரு தேசமோ, தீவோ அகப்படவில்லையா? எல்லா தேசத்திற்கும் தூதர்கள் நியமித்தாகி விட்டது. வேறு தேசமே பாக்கி இல்லை. நீயாகவே ஒரு தேசத்தைக் கண்டு பிடித்து அதற்கு நம்முடைய தூதனாய்ப் போய்ச் சேரு என்று சொன்னால் அவன் போகமாட்டானா? ஆகவே, அவன் பிரபலமாகாததற்கு அவன்மீது பழி சுமத்த முடியாது. அவன் எப்பொழுதுமே பிரபலமானவனாகத் தயார். பிரசித்தமாக வேண்டியவர்களுக்குரிய லட்சணங்களில் ஒன்றுகூடக் குறைவில்லை அவனிடம்

அவன் மனைவியிடம்கூட அவனுடைய ஸிநேகிதிகளிட மெல்லாம் தான் பிரசித்தமாக வேண்டியவன் என்று பிரசாரம் செய்யும்படி சொல்லியிருக்கிறான். அவன் மனைவியும் எங்கள் வீட்டுக்காரரைப்போல பெயரெடுத்தவர் ஒருவருமில்லை என்று குழாயடியிலும் கிணற்றடியிலும் எங்கும் தவறாமல் ஒவ்வொரு பெண்களிடமும் தினமும் விடாமல் சொல்லிக் கொண்டு வருகிறாளாம். இதுதான் ஜகத்ரக்ஷகன் பிரசித்தமானவனாவதற்குக் கடைசியாகக் கண்டு பிடித்த சரியான வழி. இல்லையா?







வட சென்னை மாதர் சங்கம்

1. மேற்படி சங்கத்தின் ஆண்டு விழா முதன் மந்திரி கனம் குமாரசாமி ராஜா வின் தலைமையில் கோலாகலமாக நடந்தேறியது. சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி குமாரசாமி மேடையில் வீற்றிருப்பதைக் காணலாம்.

2. நாலு பிராயம் ஆன குமாரி ஜான்சி ராணி பரத நாட்டிய அபிநயங்களினால் சபையோரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டாள். தலைமை வகித்த முதன் மந்திரி குழந்தையைப் பாராட்டுவதா, தாலாட்டுவதா என்று தெரியாமல் திகைத்தார். மற்றும் சில பெண் குழந்தைகளும் நல்ல முறையில் பரதநாட்டியம் ஆடினார்கள்.

3. சிறுவர்களும் சிறுமியரும் யோகாசனங்கள் செய்து காண்பித்தனர்.

4. மேற்படி சங்கத்தில் நிர்வாகத் தொண்டு புரியும் பெண்மணிகளும் பிற பணிகள் புரியும் மாதர்களும்.




புறாத் தபால்

மா. கிருஷ்ணன்

பல தேசங்களிலும் பழம் பெருங் காலத்திலிருந்து புறாக்களை வளர்த்து வந்திருக்கிறார்கள். ரோமர்களுக்குப் புறாக்களின் மூலம் தகவலனுப்பத் தெரியுமென்றும், எகிப்திலும் சிரியாவிலும் சுமார் ஆயிரம் ஆண்டுகள் முன்னிருந்து சமீபகாலமட்டும் புறாக்களைக் கொண்டு தபால் நடத்தினரென்றும் மேல்நாட்டு நிபுணர்கள் ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். நமது தேசத்திலும் எத்தனையோ நூற்றாண்டுகளாகப் புறாவளர்ப்பு செழித்து வந்தது—சில வகைக் கர்ணப் புறாக்களும், விராஜி, லோடன் முதலிய ஜாதிகளும் இங்குதான் பிறந்தன. கர்ணப் புறாக்களை வானில் ஏற்றி எவர் புறா அதிக காலம் பறக்குமெனப் பந்தயங் கட்டும் போட்டி நெடுநாளாக நமக்குள் உண்டு என்று எண்ண இடமிருக்கிறது. ஆனால், 200-300 மைல்களுக் கப்பால் விடுவித்த புறாக்களில் எது முதலில் வீடு திரும்பும் என்ற போட்டியும், இந்தப் பந்தயப் புறாக்களைத் தபாலுக்கு உபயோகிப்பதும் சமீபத்தில் நாம் கற்ற வித்தைகளே. 'சமீபம்' என்றால் 200 வருஷங்கள் முன்னிருக்கலாம். அதற்குமுன் ஆங்கிலத்தில் 'ஹோமர்' எனப்படும் ஜாதி இந்தியாவிலிருந்ததாகத் தெரியவில்லை. 'பட்டிணம் சாதா' போன்ற இரு ஜாதிப் புறாக்களும் சமீபத்தில் உற்பத்தியானவைகளே.

பலவகைப் புறாக்களுக்கும், மற்றும் சில பறவைகளுக்கும் சில மிருகங்களுக்கும், நெடுந்தொலைவிலுள்ள முன்பின் தெரியாத இடத்திலிருந்து எப்படியோ திக்கறிந்து வீடு வந்துசேரும் பிறவிக் குணமுண்டு. விஞ்ஞான சாஸ்திரிகள் இவை எக்காரணத்தால் இப்படித் திசையறிந்து கொள்கின்றன என்பதைக் கண்டு பிடிக்கவில்லை; கண்திருஷ்டி ஒருவாறாக இதற்கு உதவியாகவிருக்கின்றது என்று மட்டும் தெரியும். திக்கறிந்து வீடு திரும்பும் பிராணிகளுள் 'ஹோமர்' அல்லது பந்தயப்புறா என்ற புறாவகை மிகவும் சிறந்தது. நன்கு பழக்கிய உயர்குலப் பந்தயப்புறா 500-600 மைல் தூரத்திலிருந்தும் வீடுவரும்.



தாமிர வர்ண பந்தயப்புறா

இதுபோல் புதுவிடங்களிலிருந்து திசையறிந்து வீடு திரும்பும் பிராணிகள் தங்கள் இருப்பிடத்தின் திக்கையே தெரிந்துகொள்ளும். இதை இங்கு மேலும் விளக்கிச் சொல்லலாம். புறாக்கள் மனிதர்கள் இருப்பிடத்தைத் தேடிப் பிடித்து, தங்கள் கால்களில் கட்டிய சீட்டுகளை அவர்களிடம் சேர்த்து, இருந்து, பதிலையும் திரும்பிக் கொண்டுதருமென்று ஒரு குழந்தைகளுக்கான பத்திரிகையில் படித்திருக்கிறேன். இதையும் நம்பும் மனிதர்களிருப்பதால், இப்படி ஒரு புறாவும் செய்யாதென்றும், தபாலைக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்ற கவலை புறாவுக்குக் கிடையாதென்றும், விடுவித்த இடத்திலிருந்து விரைந்து தன் கூண்டு வந்தடையும் இயல்பே அதற்குண்டென்றும் சொல்லிவிட விரும்புகிறேன். தங்கள் இருப்பிடத்தில் கொள்ளும் ஆசையே புறாக்களின் திசை காணும் சக்தியைத் தூண்டுகிறது. ஓரிடத்தில் அடைபட்டுப் பழக்கிய புறாக்கள் அவ்விடத்திற்கே திரும்பும். இதுவே புறாத் தபாலின் முக்கிய தத்துவம்.

என் சிநேகிதர் ஒருவர் அடிக்கடி சொல்லும் கதையை இங்கு சுருக்கிச் சொல்லலாம். முன்காலத்தில் என் சிநேகிதரின் மாமாவிடம் மிகச் சிறந்த பந்தயப் புறாக்களிருந்தனவாம். புதுச்சேரியிலிருந்து கள்ளத்தனமாக வைரங்களை வெளியேற்ற எண்ணி ஒரு வியாபாரி இப்புறாக்களை வாங்கி, சென்னையில் தன் வீட்டில் வைத்துப் பல நாட்கள் பழக்கிப் பின் அவைகளை புதுச்சேரிக்குக் கொண்டு போனானாம். அங்கு, வைரங்களை அவைகளின் கால்களில் கட்டி இரவோடிரவாக புறாக்களை விடுவிக்கவே, பழைய நினைவுகளை மூன்று வருஷங்கள் கழிந்த பின்னும் மறக்காது மாமாவிடம் வைரங்களைக் கொண்டு சேர்த்தனவாம்! மாமா வைரங்களை மிகச் சாதுரியமாக விற்று வீடு கட்டி, அதில் அந்த அருமைப் புறாக்களுக்கு பளிங்குக் கல் கூடும் அமைத்தார் என்று அந்தக் கதை முடியும். ஆனால் இந்தக் கதையை நான் நம்பவில்லை. ஏனெனில் புறாக்கள் இரவில் பறக்காது. மாமாவிடம் பந்தயப் புறாக்கள் இருக்

ததையும், ஏன், மாமா இருந்ததையுமே நம்பவில்லை. ஆயினும் இக்கதை பந்தயப் புறாக்களின் இயல்பை எடுத்துக் காட்டுகிறது.

வீட்டின்மேல் அவைகளுக்குள்ள ஆசையே இதில் பிரதானமானதால் தபாலுக்கு உபயோகிக்கும் பந்தயப் புறாக்களுக்கு எல்லா வசதிகளும் பொருந்திய கூண்டு உதவி அவைகளை அன்புடன் கவனித்தல் ஆகியவை அவசியம். புறா வளர்ப்பைப் பற்றியோ பந்தயப் புறாக்களைத் தபாலுக்குப் பழக்குவதைப் பற்றியோ விவரித்து எழுத இங்கு இடமில்லை. முக்கியமான சில அம்சங்களை மட்டும் கீழே குறிக்கிறேன்.

பந்தயப் புறாக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கூண்டு விசாலமாகவும் காற்றோட்டமாகவும் மழைக்குப் போதுமான மறைவுடனும் இருக்கவேண்டும். 6 ஜதை புறாக்களுக்கு வேண்டிய கூண்டு சுமார் 3 அடி அகலமும், 6 அடி நீளமும், 7 அடி உயரமும் இருக்கலாம் (உயரமில்லாவிட்டால் கூண்டினுள் மனிதர்கள் குனிந்து குறுகியே செல்லவேண்டும்) கூண்டை மாடிமேல் கட்டினால் புறாக்கள் கூரை மீது இறங்காது நேராகக் கூடுவந்தடைய அனுகூலமாகவிருக்கும். அடிக்கடிச் சுத்தம் செய்து கழுவத் தரையைச் சலவைக் கல்லினாலோ சிமிட்டியினாலோ அமைக்க வேண்டும். புறாக்கள் போகவர ஒரே ஜன்னல் (வேண்டாதபோது மூடக் கூடிய கதவுகளுடன்) இருக்கவேண்டும்—இதன் வெளிப்புறத்தில் புறாக்கள் வந்திறங்க ஒரு பலகை ஜன்னல் பொருத்த வேண்டும். கூண்டுள், புறாக்கள் கால் மாற்றித் தங்க தங்கு கோல்களும் அடைவதற்கு அறைகளும் வேண்டும்.

நல்ல தானியங்களையே பந்தயப் புறாக்களுக்கு அளிக்க வேண்டும். பயறு கடலை இவற்றை ஊற வைத்துக் கொடுப்பது நலம். நமக்கே உணவுப் பொருள்கள் அகப்படாத இந்நாளில் நாம் உணவாக உபயோகிக்காத 'குஸும்பி' போன்ற விதைகளைப் புறாத் தீனியில் சேர்க்கலாம்.

தினமும் வேளை தவறாது கூண்டினுள் புறாக்களுக்குத் தீனி கொடுப்பது அவசியம், காலையிலும் மாலையிலும் ஜன்னலைத் திறந்து தீனி போடுமுன் புறாக்களை வெளியோட்டி, கூண்டைச் சுத்தம் செய்து, பின் கூண்டுள் தீனி வைத்தால் ஜன்னல் வழி நேராக, உள் வந்தடையும் பழக்கம் உறுதியாக ஏற்படும்.

ஒரு மண் கலத்தில் சுத்தமான நீரும், மற்றொன்றில் உப்பு, சிப்பித்தூள் மிளகளவுள்ள சிறு கற்கள் கலந்ததும் எப்போதும் கூண்டிலிருக்க வேண்டும்.


மூன்று நான்கு மாத வயதான பின், இளம் புறாக்கள் வீட்டைச் சுற்றி பலத்துப் பறக்க வாரம்பித்த பின், அவைகளைப் பழக்கத் தொடங்கலாம். முதலில், ஒரு கூடையிலடைத்து 2 மைல் தூரத்திற்கப்பால் கொண்டு போய் விடுவிக்க வேண்டும். அங்கிருந்து நேராகக் கூண்டிற்கு வரப் பழகிய பின், அதே திசையில் முறையே 3, 4, 6. 8. 10. 20, 25. 30. 40, 60, 80 மைல்கள் வரை வேளைக்கு வேளை தள்ளி விடுவிக்க வேண்டும். மலைப் பிரதேசங்களில் மேற்குறித்த அளவில் மேலும் தூரத்தை அதிகரிப்பதை விடச் சற்றுக் குறைத்தே செல்வது நலம். எப்போதும் விடுவிக்க எடுத்துச் செல்லும் புறாவைக் காலையில் வெறும் வயிற்றுடன் கொண்டு போக வேண்டும்—கூண்டடைந்ததும் நல்ல உணவு உதவ வேண்டும். முதல் வருஷம் ஒரு திசையில் 80 மைல்கள் தூரத்திலிருந்து திரும்பப் பழகினால் போதும், மறு வருஷம் மற்ற திசைகளிலும் இன்னும் தூரத்திலிருந்து திரும்பப் பழக்கலாம். இப்படிப் பழக்குவதில், திசையறியும் உணர்ச்சி குறைவாயிருப்பதாலோ, வல்லூறுக் கிரையாகியோ, சில இளம் புறாக்கள் போய்விடும். அப்படிப் போனவை போனவையே.

மேற்குறித்தபடி பழகிய புறாக்கள் தபாலுக்கு உதவும். ஒரு மெல்லிய காகிதத்தில் சிறிய அக்ஷரங்கள் கொண்டு அனுப்ப வேண்டிய தகவலை எழுதி, அதை ஒரு சிறு அலுமினியக் குழாயுள் வைத்துக் குழாயைப் புறாவின் வால் சிறகுகளிலோ, கால்களிலோ கட்டிப் புறாவை விடுவித்தால் அது தன் கூண்டுள்ள இடத்திற்குச் செல்லும். கூண்டிலடைந்ததும் அங்குள்ளோர் குழாயினின்றும் காகிதத்தை எடுத்துப் படித்துத் தகவலையறிந்து கொள்வார்கள். எவ்விடத்திற்குத் தகவலனுப்ப வேண்டுமோ அவ்விடம் கூண்டுள்ள புறாக்களை அனுப்புவோர் எடுத்துச் செல்வார். மோட்டார் வண்டிகள் ஓடக்கூடிய பாதைகளில்லாத காட்டுப் புறங்களில் புறாத்தபால் அனுகூலமாக இருக்கும். யுத்த காலத்தில் எதிரியறிந்து கொள்ள முடியாதபடி செய்திகளைத் தெரிவிக்கப் புறாத் தபாலே முக்கிய முறை.

புறாக்கள் இருட்டினால் பறக்காது—இடைவழியுள்ள மரத்திலோ பாறையிலோ இறங்கி இரவு கழித்துப் பின் விடிந்ததும் மீண்டும் வீட்டைத் தேடும். புயலிலும் பெருமழையிலும் இப்படியே இறங்கிவிடும். தூவானத்திற்கோ, குளிருக்கோ, வெயிலுக்கோ அஞ்சாது. காற்றில் ஈரந்தேங்கி மஞ்சு போர்த்திருந்தால் அவை சரியாகப் பறப்பதில்லை.

மத்திய கேந்திரம்

—ஜெயமணி



எண்ணெய் உற்பத்தியாகும் வயல்

ஈராக்—2.

மன்னரை நியமிப்பதன் சம்பந்தமான விவாதங்களில் அப்போது பிரிட்டிஷ் காலனி மந்திரியாக இருந்த வின்ஸ்டன் சர்ச்சிலும் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார். பெய்ஸல், ஹெட்ஜாஸ் மன்னராக இருந்த ஹுசேனின் மூன்றாவது குமாரர். இரண்டாவது குமாரரான அப்துல்லாவைத் திரான்ஸ் ஜோர்டன் தேசத்து மன்னராக நியமித்தார்கள்.

நிற்க, பிரிட்டிஷார் நியமித்த பொம்மை மன்னர் பெய்ஸலை எதிர்த்து ஈராக் மக்கள் செய்த கிளர்ச்சி 1922-ம் வருஷத்திலே உச்ச நிலையை அடைந்தது. அவ்வமயம் அந்த நாட்டில் பிரிட்டிஷ் ஹைகமிஷனராக இருந்த சர் பர்ஸி கூக்ஸ், மன்னர், மந்திரி சபை, ஜனப்பிரதிநிதி சபை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைத்து விட்டார். தாமே சர்க்கார் நிர்வாகத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு சர்வாதிகாரியானார்.

அதிலிருந்து மறுபடியும் பழைய கதையே ஆரம்பமாயிற்று. மறுபடியும் கொடூரமான அடக்குமுறைகள் தாண்டவமாடின. குறிப்பாக பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் ஈராக் மக்களுக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பயங்கர சக்தியை நிரூபித்தன!


மேற்படி முறைகளினால் ஈராக் பிரச்னை தீர்ந்துவிடும் என்று பிரிட்டிஷார் எண்ணினார்கள். ஆனால் அந்த எண்ணம் மண்ணாயிற்று. அதற்கு மாறாக ஈராக் பிரச்னை இன்னும் அதிக மோசமான கட்டத்தை அடைந்து விட்டது.

பிறகு மீண்டும் மன்னர் அதிகாரத்துக்கு வந்தார். மந்திரி சபையும் வேலை செய்யத் தொடங்கியது. மன்னரும் மந்திரிகளும் பெயரளவில்தான் இருந்தனரேயன்றி உண்மையில் பிரிட்டிஷ் அதிகாரிகளும் பிரிட்டிஷ் தாசர்களுமே நிர்வாகத்தை நடத்தி வந்தார்கள்.

உண்மை நிலைமை இவ்விதம் இருந்ததால், ஈராக் மக்கள் பூரண சுதந்திரம் பெற உதவி புரிவதாயும், சர்வ தேச சங்கத்தில் ஈராக்கை அங்கத்தினராகச் சேர்ப்பதாயும் பிரிட்டிஷார் கூறிய உறுதிமொழியை அவர்கள் நம்பவில்லை. இந்நிலையில் பிரிட்டனுக்கும் ஈராக் சர்க்காருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையை ஈராக் மக்கள் கண்டித்தனர். அந்த உடன்படிக்கையை அனுசரித்துத் தங்களுடைய எதிர்கால அரசியலை வகுப்பதற்கான தேசிய அரசியல் நிர்ணய சபையை அவர்கள் பகிஷ்கரித்தார்கள்.

ஈராக் ஜனங்கள் அனுஷ்டித்த ஒத்துழையாமை வெற்றி பெற்றதால், அரசியல் நிர்ணய சபைக் கூட்டம் நடைபெற முடியவில்லை. வரிகளை வசூலிப்பதிலும் அதிகாரிகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டது. இந்தத் தகராறுகள் ஒரு வருஷ காலத்துக்கு மேல் நீடித்தன.

கடைசியில் பிரிட்டிஷார் ஈராக்—பிரிட்டன் உடன்படிக்கையில் ஈராக் மக்களுக்



குச் சாதகமாகச் சில மாறுதல்களைச் செய்தனர். அதன் பயனாக 1924-ம் வருஷத்தில் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடைபெறுவது சாத்தியமாயிற்று.

அந்தச் சபையினர் ஈராக் நாட்டுக்கு ஒரு புதிய அரசியல் திட்டத்தைத் தயாரித்தனர். அந்த அரசியல் திட்டம் ஏட்டளவில் சிறந்ததாகத்தான் இருந்தது. பார்லிமெண்டு முறைக்கு உட்பட்ட முடியரசு ஆட்சி அமைய வேண்டும் என்பது தான் அரசியல் திட்டத்தின் சாரம்.

இதிலும் பிரிட்டிஷார் தந்திரம் செய்துவிட்டார்கள். செனேட் சபை அங்கத்தினர்களை மன்னர் நியமனம் செய்ய வேண்டும் என்ற ஷரத்து அரசியல் திட்டத்தில் சேர்க்கப் பட்டது. எனவே, அந்த அரசியல் திட்டத்தின்படி பார்லிமெண்டைக் காட்டிலும் மன்னருக்கு அதிக அதிகாரம் ஏற்பட்டது. முக்கிய பதவிகளில் இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் மன்னருக்குப் பக்க பலமாக இருந்து அவரை ஆட்டி வைத்தார்கள். எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை அடைந்தும் கூட உண்மையான அதிகாரம் ஈராக் மக்களின் கைக்கு வரவில்லை.

புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தும், புதிய பார்லிமெண்டு அமைக்கப்பட்டும் ஈராக் ஜனங்களின் தேசிய அபிலாஷைகள் நிறைவேறவில்லை. ஆகையால் தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறினாலன்றி, பிரிட்டிஷாரால் சுமத்தப்பட்ட அரசியல் திட்டத்தைத் தாங்கள் சகித்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்று ஈராக்கியர்கள் உறுதிகொண்டனர். அதன் பயனாக, மறுபடியும் 1930-ம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் ஒரு புதிய உடன்படிக்கை ஏற்பட்டது. ஈராக் நாட்டின் பூரண சுயேச்சையைப் பிரிட்டிஷார் அங்கீகரித்தார்கள். எனினும் அப்போதுகூட அவர்கள் தங்களுடைய பிடியை முற்றிலும் கைவிடவில்லை.

இந்தியாவுக்குச் செல்லும் பிரிட்டிஷ் விமானங்களுக்கு வசதியாக ஈராக்கில் விமான நிலையங்களை அமைத்துக் கொள்ள பிரிட்டனுக்கு உரிமை கிடைத்தது.

ஈராக்கில் பல முக்கிய இடங்களில் பிரிட்டிஷார் துருப்புகளை வைத்துக் கொள்ளவும் ஈராக் இசையும்படி நேர்ந்தது. ஈராக்கியர்களின் இராணுவத்துக்குப் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள், போதகர்கள் முதலியோரைத் தவிர வேறு யாருடைய உதவியையும் நாடக் கூடாது என்றும் பிரிட்டிஷார் நிபந்தனை விதித்தனர். இவற்றைத் தவிர, பிரிட்டனிலிருந்து மாத்திரமே ஈராக் போர்த் தளவாடங்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்பதற்கும் ஈராக் இசைந்தது. பிற நாடுகளுடன் யுத்தம் ஏற்பட்டால் ஈராக்கில் பிரிட்டனுக்குச் சகல வசதிகளும் அளிக்க வேண்டும் என்பதும் உடன்படிக்கைகளின் ஷரத்துகளில் ஒன்றாக இருந்தது.

இதனால் அதிருப்தியடைந்த ஈராக் கிராமவாசிகள் மறுபடியும் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அந்தக் கிளர்ச்சியை அடக்கப் பிரிட்டிஷார் என்ன செய்தார்கள்? இதைப் பற்றி லெப்டினண்ட் கர்னல் ஆர்னல்டு வில்ஸன் என்ற பிரிட்டிஷ் அதிகாரி 1932-ம் வருஷத்திலே கூறியதை இங்கே குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

"ஈராக் கிராம வாசிகள் மீது சென்ற பத்து வருஷங்களாகப் பிரிட்டிஷ் விமானங்கள் வெடி குண்டுகளை வீசி வருகின்றன. இந்த வெடி குண்டு வீச்சு சென்ற ஆறு மாதங்களில் மிகவும் அதிகமாகியிருக்கிறது. இதனால் கிராமங்கள் நாசமாகிவிட்டன. கால் நடைகள் அழிந்துவிட்டன. வெடி குண்டு வீச்சினால் முடமான எண்ணிக்கையற்ற பெண்களும் சிசுக்களும் பிரிட்டிஷ் ஆட்சியின் 'நாகரிகத்தை' உலகத்துக்குப் பிரகடனம் செய்யும் சின்னங்களாக இருக்கிறார்கள்" என்று ஆர்னல்டு வில்ஸன் அங்கலாய்த்தார்.



பொல்லாத பூனை

எஸ். ஸ்ரீனிவாசன்

"லலிதா !"

பதிலில்லை.

"லலிதா ! உன்னைத்தான் !"

சமையலறையில் ஏதோ ஆரவாரம் எழுந்ததே ஒழிய லலிதாவின் குரல் கேட்கவில்லை.

நாராயணனின் பொறுமை எல்லை கடந்தது. அப்போது தான் ஆபீஸிலிருந்து வந்திருந்ததால் களைப்பு வேறு !

"என்ன லலிதா ! அரை மணியாகக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். உள்ளே இருக்கிறாயா அல்லது ஒழிந்து போய் விட்டாயா ?" என்று கோபத்தில் இரைந்தான் நாராயணன்.

"எங்கும் ஒழிந்து போகவில்லை. எல்லாம் இங்கேதான் இருக்கிறேன்" என்று சமையலறையிலிருந்து காட்சி அளித்தாள் அவன் மனைவி லலிதா.

"சரி ! சரி ! சீக்கிரம் காப்பி கொண்டு வா ! கொஞ்சம் அவசரமாக வெளியே போகவேணும்."

"இன்றைக்குக் காப்பி......" என்று முடிக்காது இழுத்தாள் லலிதா.

"இன்றைக்குக் காப்பி இல்லையாக்கும் ! அதை முதலிலேயே சொல்லித் தொலைக்கிறது தானே ?" என்று சீறினான் நாராயணன்.

"நான் என்ன செய்வேன் ! அந்தச் சனியன் பிடிச்ச பூனை பாலைக் கொட்டும் என்று நான் கண்டேனா என்ன ?"

"பாலை ஜாக்கிரதையாக அலமாரியிலே வைத்திருந்தால் பூனை கொட்டியிருக்குமா ?" என்றான் நாராயணன்.

"நீங்கள் இதுவும் சொல்வீர்கள் ; இன்னும் ஒருபடி மேலே போய் 'பாலைப் பெட்டியிலே பூட்டி வைக்கிறது தானே ?' என்றுகூடக் கேட்பீர்கள் ! நாம் எங்கே வைத்தால் என்ன? அந்தச் சனியன் எப்படியோ தெரிந்து கொண்டு விடுகிறதே !" என்று அலுத்துக் கொண்டாள் லலிதா.

நாராயணனுக்கு அவள் சொல்வதிலும் சிறிது நியாயம் இருப்பதாகத் தான் பட்டது. அப்படியானால் தினமும் பூனை 'லூட்டி' செய்வதைத் தடுத்தாக வேண்டுமே ! அதற்கு என்ன செய்வது? பூனையை வீட்டை விட்டு விரட்ட வேண்டியதுதான். இந்த யோசனையை நினைக்கும்போதே நாராயணனின் மனம் சிறிது சங்கடப்பட்டது.

ஒரு நாள் நல்ல மழை பெய்து கொண்டிருந்த போது வாசல் ரேழியில் கதவுக்குப் பின்னால் ஒண்டிக் கொண்டிருந்தது அந்தப் பூனைக்குட்டி. அதை முதல் முதலில் பார்த்தது லலிதாதான்.

"இந்தாருங்கள் ! முதல் காரியமாக இதை வெளியே போடுங்கள்" என்று நாராயணனுக்கு ஆக்ஞையிட்டாள்.

நாராயணனுக்கு ஏனோ அதைப் பார்த்ததும் ஒரு பச்சாத்தாபம் பிறந்தது. "நாம் இதை வீட்டில் வைத்து வளர்க்கலாமே" என்ற தன் யோசனையை வெளியிட்டான். அதை லலிதா பலமாக ஆட்சேபித்தாள்.

"பிள்ளையில்லா வீட்டுக்குப் பூனை ஒன்றுதான் பாக்கி !" என்றாள் அவள்.

"உனக்கு இஷ்டமில்லா விட்டால் 'வேண்டாம்' என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடேன்" என்றான்.

"உங்களுக்கு அது சரி என்று தோன்றினால் தாராளமாய் வளருங்களேன். நான் எதற்குக் குறுக்கே நிற்கிறேன் ?"

நாராயணன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அந்தப் பூனையை மெதுவாகத் தடவிக் கொடுத்தான். அன்று முதல் அது அவர்கள் வீட்டில் வளர ஆரம்பித்தது.

அது வந்ததிலிருந்து தினம் ஏதாவது ரகளை வீட்டில் நடக்காமலிருக்காது. லலிதா அதைப் பற்றி நாராயணனிடம் ஒவ்வொரு முறையும் சொல்லும் போதெல்லாம் நாராயணன் அசுவாரஸ்யத்துடன் கேட்டுவிட்டு, "சரிதான் போ! நீ பண்டங்களை ஜாக்கிரதையாக வைத்திருக்க மாட்டாய் ! அதன் கண்ணெதிரிலேயே பாலை வைத்திருந்தால், அது தட்டிக் கவிழ்க்காமலா இருக்கும் ! அதற்குப் பழியைப் பூனையின் மேல் போடு

னுயே" என்பான். லலிதா அதற்குப் பதில் பேசாமல் திரும்பிப் போய்விடுவாள்.

ஆனால் இந்தத் தடவை நாராயண னுக்கே பூனையை வெளியே துரத்த வேண்டியது அவசியம்தான் என்ற எண்ணம் தோன்றி விட்டது. அன்றிரவு அவன் இதை லலிதாவிடம் பிரஸ்தாபித்த போது அதை அவள் முழு மனதுடன் வர வேற்ருள்.

"ஆமாம்! அதை நாம் வெளியே துரத் தினுலும் இத்தனை நாள் வாழ்ந்த வீட்டை விட்டு அது போகுமா?" என்று ஒரு பிரச்னையைக் கிளப்பினுள் லலிதா.

நாராயணனும் இதைப் பற்றி யோசித் தான். கடைசியில் தம்பதிகளிருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

நாராயணனின் நண்பர்களில் யாருக்கா வது பூனைக்குட்டி வேண்டியிருந்தால் அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டி யது; இல்லாவிட்டால் பூனைக்கு அன்று முதல் சாதம் போடுவதையும் பால் வைப்பதையும் நிறுத்தி அதுவாகவே வீட்டை விட்டு ஓடும்படி செய்துவிட வேண்டியது. இதுதான் அவர்கள் செய்த தீர்மானம்.

நாராயணனின் நண்பர்கள் ஒருமுகமாக "வேண்டாமப்பா உன் பூனைக்குட்டி! இந்த ரேஷன் காலத்தில் அதுக்குச் சாதம் போட்டு யாருக்குக் கட்டுபடியாகிறது?" என்று கூறிவிட்டார்கள். மறுதினத்தி லிருந்து பூனையின் 'அலவன்ஸை' நிறுத்துவதற்கு 'ஹோம் கவர்ன்மென் டுக்கு ஆர்டர்' கொடுத்து விட்டான் நாராயணன்.

மறுநாள் முழுதும் பூனை கத்திக் கொண்டே நாராயணனைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. 'அதற்குச் சாதம் போடச் சொல்லிவிட்டால் என்ன' என்று ஒரு சமயம் நினைப்பான். மறுகணமே 'சே! இப்போது இதற்குச் சாதம் போட்டுவிட்டால் இனி இது வீட்டை விட்டு எப்போதும் ஒழியாது!' என்று தன் மனத்தைக் கல்லாக்கிக் கொள்வான்.

லலிதாவுக்கும் அதைப் பார்க்கப் பரி தாபமாகத்தா னிருந்தது. என்ன இருந் தாலும் பெண் ஜன்மம் அல்லவா? ஆனால் அது செய்த 'லூட்டியை' நினைத் துப் பார்த்த போது அவள் மனம் இரும் பாக மாறியது.

பூனை பாட்டுக்குப் பாவம், அன்று முழு வதும் கத்திக் கொண்டிருந்து விட்டு சாயந்திரம் ஓய்ந்தது. வெளியே செல்லக் கிளம்பிய நாராயணன் கண்களில் ஒரு மூலையில் ஒடுங்கிப் போய்ப் படுத்திருந்த பூனை தென்பட்டது. அவனுடைய மனத் தில் இரக்க உணர்ச்சி தலைதூக்கி நின்றது. 'பாவம்! வாயில்லா ஜீவன்! நம் ஆத் திரத்தை இதனிடம் காண்பிப்பதா?' என்று பரிதாபப்பட்டு சமையல் அறை யில் எட்டிப் பார்த்தான். அங்கே லலிதா இல்லை! 'அதுவும் நல்லதுக்குத்தான்' என்று கொஞ்சம் சாதம் எடுத்து வந்து மோர் ஊற்றிப் பிசைந்து போட்டான். ஆர்வத்துடன் பூனை அதை உண்பதைப் பார்த்துவிட்டு வெளியே சென்ருன்.

இரண்டு தினங்கள் சென்றன. பூனை வீட்டை விட்டு ஒழியும் வழியாகக் காணும்! லலிதாவுக்குத் தெரியாமல் நாராயணன் திருட்டுத்தனமாக தினம் இரண்டு வேளையும் அதற்குச் சாதம் போட்டு வரும்போது அதற்கென்ன குறைவு! அன்றும் நாராயணன் ஆபீஸி லிருந்து வந்தவுடன் முதலில் பூனையைப் பற்றித்தான் விசாரித்தான்.



"என் லலிதா! அது ஓடிப் போய் விட்டதா?"

"இல்லை! இங்கேயேதான் கிடந்து பழி வாங்குகிறது."

"பட்டினி போட்டதில் அது கொஞ்சமாவது அயர்ந்ததாகக் காணுமே!" நாராயணனுக்கு எங்கே தான் பூனைக்குச் சாதம் போட்டு வருவது லலிதாவுக் குத் தெரிந்து போய்விட்டதோ என்று பயம்!

"அது இங்கேயேதான் இருந்து என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கணும்னு இருக்கிற போது, அது போகுமா என்ன?" என்ருள் லலிதா. அவளுடைய குரலில் துளிக்கூட ஆத்திர உணர்ச்சி தொனிக்காததைக்

குறித்து நாராயணன் மிகவும் ஆச்சரியப் பட்டான்.

★

பின்னும் இரண்டு தினங்கள் சென்றன. நாராயணனுக்கு 'நாம் லலிதாவுக்குத் தெரியாமல் பூனைக்குச் சாதம் போடுவது நியாயம் இல்லை. இன்று அவளிடம் நாம் செய்ததைச் சொல்லிவிட வேண்டும்' என்று தோன்றிற்று. சாயங்கிரம் வந்ததும் 'கோட்'டைக் கழற்றி விட்டு உட்கார்ந்தான். அன்புடன் அவனை நெருங்கிய பூனையைத் தூக்கித் தடவிக் கொடுத்துக் கொண்டே "லலிதா" என்று கூப்பிட்டான்.



புதுடில்லி தென்னிந்திய கிளப் அங்கத்தினர் ஏப்ரல் முதல் வாரத்தில் "சரளா" என்னும் நாடகத்தை நன்கு நடத்திப் புகழ் பெற்றார்கள். பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு எஸ். ராமசாமி நாயுடு தலைமை வகித்தார்.

கையில் காப்பி டம்ளருடன் சமையலறையிலிருந்து வெளிப்பட்ட லலிதா, அவன் கையில் டம்ளரைக் கொடுத்து விட்டு நின்றாள்.

"லலிதா! நான் ஒன்று உனக்குத் தெரியாமல் செய்து விட்டேன். சொன்னால் கோபித்துக்கொள்ள மாட்டாயே!"

"என்னதான் என்று சொல்லுங்களேன்! உங்கம்மா, அக்கா, யாரையாவது வரச் சொல்லி எழுதிப்போட்டு விட்டீர்களா என்ன?" என்று குத்தலாகக் கேட்டாள்.

"அதெல்லாம் உன்னுடைய உத்தரவு இல்லாமல் நான் செய்துவிட முடியுமா என்ன லலிதா!"

"உங்கள் விளையாட்டுப் போதும்! விஷயத்துக்கு வாருங்கள். எனக்குத் தெரியாமல் அப்படி என்னதான் செய்தீர்கள்?"

"அப்படி ஒன்றும் பெரிய விஷயமில்லை. முதல் நாள் பூனைக்குச் சாதம் போடாமல் இருந்தோம், பார். அன்று சாயந்திரம் என் காலைக் கட்டிக்கொண்டு சுற்றி வந்ததைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. தொலைந்து போகட்டும் என்று கொஞ்சம் சாதம் போட்டேன். அப்புறமும் மூன்று நாளும் 'உனக்குத் தெரிந்தால் நீ கோபித்துக் கொள்வாயோ' என்று உனக்குத் தெரியாமல் அதற்கு இரண்டு வேளையும் சாதம் போட்டேன்."

"நல்ல கூத்து. போங்கள்! நீங்கள் வேறு சாதம் போட்டீர்களா? முதல் நாள் அதைப் பார்க்கப் பாவமாக இருக்கிறதே என்று கொஞ்சம் சாதமும் போட்டுப் பாலும் கொஞ்சம் வைத்தேன். இந்த மூன்று நாளும், உங்களுக்குத் தெரிந்தால் என்ன சொல்லுவீர்களோ என்று பயந்து நீங்கள் இல்லாதபோது அதற்குச் சம்பிரமமாகச் சாதமும் போட்டுப் பாலும் வைத்துக் கொண்டு வருகிறேன்!

"அட, ராமச்சந்திரா! முன்பு நீ ஒருத்தி சாதம் போட்டுக் கொண்டிருந்தபோதே அது இல்லாத விஷமமெல்லாம் செய்து வீட்டை விட்டு நகரமாட்டேன் என்று சத்தியாக்கிரகம் பண்ணிக் கொண்டிருந்தது. இப்போ தனக்கு ஆதரவாக இரண்டு பேர் இருக்கிறார்களென்று தெரிந்து விட்டதால் அது வீட்டை விட்டுச் சுலபமாகக் கிளம்பும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை" என்றான் நாராயணன்.

லலிதாவும் "தொலைந்து போகிறது! விடுங்கள்! அது இங்கேதான் இருக்கணும் என்று பிராப்தம் இருக்கிறபோது அது வேறெங்கேயாவது போகுமா!" என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்று தன் வேலையில் ஈடுபட்டாள்.

இவ்வளவுக்கும் காரணமான அந்தப் பூனை சாதுபோல நாராயணன் மடியில் படுத்துக் கிடந்தது!

அதிகப் பிரசங்கி!

கோடை விடுமுறை விட்டாகி விட்டது. பள்ளிக்கூடங்கள் எல்லாம் சாத்தியாகி விட்டன. பையன்கள் பாடு யோகந்தான்! ஆனால் விச்சுவின் அப்பாவுக்குப் பெருந் தொல்லையாகப் போய் விட்டது.



என்ன தொல்லையாகிப் போயிருக்கும் என்று தானே கேட்கிறீர்கள்? சொல்லுகிறேன்.

விச்சுவின் அப்பா காலைப் பத்திரிகை படித்துக் கொண்டிருப்பார். மக்-ஆர்தர் நீக்கப்பட்டார் என்பது போன்ற திடுக்கிடும் செய்திகளை மிக்க பரபரப்புடன் படித்துக் கொண்டிருப்பார். அவர் பரபரப்பையோ, துடிதுடிப்பையோ சற்றும் பொருட்படுத்தாமல், "அப்பா சூரியன் பூமியிலிருந்து எத்தனை மைல் தூரத்திலிருக்கிறது?" என்று கேட்பான் விச்சு.

அவர் தனக்கு வருகிற ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "ரொம்ப ரொம்ப தூரத்திலிருக்கிறது!" என்பார்.

"அப்படிச் சொன்னால் போதாது. அப்பா! சரியாக எத்தனை மைல் தூரத்திலிருக்கிறது என்று சொல்லவேண்டும் அப்பா!" என்பான் விச்சு.

புஸ்தகங்களையெல்லாம் புரட்டித் தேடிப் பார்த்து, "9 கோடி மைல்" என்பார். உடனே விச்சு போய் விடுவான்.

பிறகு, சரியாகப் பதினைந்து நிமிஷம் கழித்து மறுபடியும் விச்சு வருவான்.

அப்போது அப்பா ஏதாவதும் ஆபீஸ் காகிதக் கட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டு வேலை பார்த்துக் கொண்டிருப்பார். அவர் ஆபீஸ் வேலையையோ, ஆபீஸ் வேலை சரியாக வராமல் அவர் தவிப்பதையோ சற்றும் பொருட் படுத்த மாட்டான் விச்சு. "அப்பா! சந்திரன் பூமியிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது!" என்று கேட்பான். அப்பாவுக்குக் கோபம் கோபமாக வரும். இருந்தாலும் அடக்கிக் கொண்டே சொல்வார். சற்று நாழிகைக் கெல்லாம் வந்து, "ஏன் அப்பா, மழை நாம் விரும்புகிற போதெல்லாம் பெய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்பான்.

இப்படி ஒரு நாள் இரண்டு நாள் என்றால் பொறுத்துக் கொள்ளலாம். நாள், பொழுது, வேளை, ஒன்றும் பாராமல் விச்சு இப்படி நச்சரித்தால் அவன் அப்பாதான் என்ன பண்ணுவார்? "என்ன இது? சும்மா நச்சரிக்கிறாயே! உன்னைப் போலப் பையனாக இருந்த போது எங்கப்பாவை இப்படி நச்சரித்திருந்தால் என்ன ஆகியிருக்கும், தெரியுமா?" என்றார்.

"இப்போது என் கேள்விகளில் பாதிக் கேள்விகளுக்காவது 'டக்' 'டக்' என்று உங்களுக்குப் பதில் சொல்லத் தெரிந்திருக்கும்!" என்று உடனே பளிச் சென்று பதில் சொன்னான் அதிகப் பிரசங்கியான விச்சு!

—வெங்கு.



★


தெரியாதா?

"கத்திரிக்காய் விலை என்ன அப்பா, வீசை?"

"ஏழணாங்க!"

"என்ன ஏழணாவா! மக் ஆர்தர் அமெரிக்காவுக்கே திரும்பிப் போய் விட்டார் என்கிற செய்தி தெரியாது போலிருக்கிறது. தெரிந்திருந்தால் இப்படி ஏறுக்கு மாறாய் விலை சொல்லியிருக்க மாட்டாய்!"

★


எழில் வாய்ந்த
கொண்டைகளையும்
பெருகும் கூந்தலையும்
கேசவர்த்தினியின்
உதவியால்
அடையுங்கள்


மலேரியாவுக்குப் பின் உண்டாகும்
பலஹீனத்தை ஏன்ஜியர்ஸ் போக்குகின்றது
மலேரியா, மற்றும் இதர ஜுரங்களுக்குப் பின் உண்டாகும் பலமின்மைக்கு ஏன்ஜியர்ஸ் எமல்ஷனில் (Angier's Emulsion) உள்ள இயற்கைச் சத்துக்கள் மீண்டும் பலத்தை ஊட்ட மிக்க இன்றியமையாததாக விளங்குகிறது. மிகவும் நம்பகமாக ஏன்ஜியர்ஸ் (Angier's) உட்கொள்ளலாம். அதன் சுவை குழந்தை முதல் பெரியோர்வரை யாவராலும் விரும்பப்படுகிறது.
எல்லா கெமிஸ்டுகளிடமும்
வியாபாரிகளிடமும் கிடைக்கும்
ANGIER'S
EMULSION
ANGIER'S EMULSION

இந்த அபூர்வமான

PEPS

சுவாசக் கோளாறு, இருமல், ஜலதோஷம் இன்ப்ளூயன்ஸா ஆகியவற்றை ஒழிக்கிறது

பெப்ஸ் மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டவுடனேயே, அதிலுள்ள இனிய மருந்து சத்துக்கள் சுவாஸத்துடன் கலந்து சுவாஸப் பைக்குள் செல்லுகிறது. அதனுல்தான் பெப்ஸ் வெகு விரைவில் இருமலை ஒழித்து நெஞ்சுக்கும் தொண்டைக்கும் இதம் அளித்து அபாயகரமான கிருமிகளை அழித்து, சுவாசாசயக் கோளாறுகளிலிருந்து உங்களை விடுவிக்கிறது.





PEPS

மார்பு கோளப்பை உபத்திரவங்களுக்கு மிகவும் இன்றியமையாத கிருமி நாசன மாத்திரைகள்

யாவர்க்கும் ஓர் நல்ல வெகுமதி!


"பாஷைகளின் ஆசான்"

48 மணி நேரத்தில் 14 பாஷைகள்

14 பாஷைகளின் ஆசான் என்னும் எங்கள் புத்தகம் ஒன்றின் உதவியால் ஹிந்தி, ஆங்கிலம் குஜராத்தி, பர்மீய பாஷை, சீன பாஷை, தமிழ் முதலிய பாஷைகளை 48 மணி நேரத்தில் எழுதவும், படிக்கவும், பேசவும் கற்றுக்கொள்ளுங்கள். வி. பி. பி. யில் அனுப்ப இன்றே எழுதுங்கள். பத்து வருஷ இடைவிடா உழைப்பின் மூலம் சாதிக்கப்பட்ட மாபெரும் சாதனை இது. ஒன்றின் விலை: ரூ. 4. தபால் செலவு பாக்கிங் அணு 12 தனி. கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

மோஹினி புல்லாங்குழல் (பான்ஸ்ரீ)

மேல்நாட்டுப் பித்தளைத் தகட்டில் செய்த குழல். மிகவும் பளபளப்பான தோற்றமுடையது. இனிமையான மெட்டுகளை இசைக்கக் கூடியது. திருப்திகரமான உழைப்பிற்கு உத்திரவாதம். ஒன்றின் விலை ரூ. 4-8-0; பாக்கிங், தபால் செலவு ரூ. 1-8-0 தனி. பான்ஸ்ரீ கைட்: விலை ரூ. 1-8-0; தபால் செலவு அணு 8 தனி. கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.



தற்போது கிடைக்கிறது

அமெரிக்கன் மாடல்


ரோல் பிலிம்

பாக்ஸ்

காமிரா

திருஷ்டி உபகரணத்துடன் உயர்ந்த லென்ஸுகள் பொருத்தப்பட்ட, விலையில் மலிவான மேன்மையான காமிரா. புதிதாகக் கற்றுக் கொள்பவர்களும் எளிதாக உபயோகிக்கலாம். பிலிம் நெ. 120-ல் நீண்ட காலம் திருப்தி அளிக்கும் 2¼" x 3¼" சைஸ் போட்டோக்கள் எடுக்கலாம். திருப்திக்கு உத்திரவாதம். முழு விவரங்களடங்கிய குறிப்புகளுடன் விலை ரூ. 10-8-0 பாக்கிங் தபால் செலவு ரூ. 1-8-0. தனி. தோல் கேஸ் ரூ. 3/- சரக்குகள் சொல்பமே உள்ளதால் உடனேயே தேவைக்கு எழுதவும். கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படல் வேண்டும்

Apply to: BENGAL TRADERS, (108 K) P. O. 21, ALIGARH. U. P.



ப்ளாண்டர்ஸ்
ஹை க்ரோன்
நீலகிரித்
தேயிலை
PLANTERS
HIGH GROWN
LOTUS
BRAND
SOUTH INDIAN
BLEND
DUST
நீங்கள்
ரசிக்கக்கூடிய
ருசிக்காக
THE PLANTERS COMPANY, LTD.,
COONOOR, NILGRIS S INDIA.



'கோலினஸ்'
புன்னகையில்
ஆரோக்யம்
ததும்புகிறது!
நுரை தான் இந்த
வித்தியாசத்திற்குக் காரணம்!
இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:—
ஜியாப்ரே மானர்ஸ் & கோ. லிட்., பம்பாய் 1
கிளைகள்:- கல்கத்தா - மதராஸ் - டில்லி.



Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. NO. M. 4392